E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

ஆகஸ்ட் 2019
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



முக்தியருளும் அத்திவரதர்

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



“கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்.”

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

KCLAS KUMARAGURU

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக ‘ஒழுக்கமே வாழ்வு’ எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

KCT BUSINESS SCHOOL

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

KUMARAGURU institute of agriculture

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

- iQube — Innovate · Incubate · Incorporate
- GARAGE
- re — KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

- KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION
- TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான ‘போர்ஜ்’ வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்

0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in





சுரங்கம்

டாக்டர்
நா. மகாலிங்கம்

மத்திய அரசு பொருளாதாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினரான முன்னேறிய சாதியினரின் குடும்பங்களுக்கு 10 சதவிகித இடஒதுக்கீட்டைச் செய்யலாம் என்கிறது.

தமிழக எதிர்க்கட்சிகள் ஏற்கனவே உள்ள 69 சதவிகித இடஒதுக்கீட்டுக்குப் பங்கம் வராமல் இதனைச் செய்யலாம் என்கின்றனர்.

இந்த 10 சதவிகிதம் என்பது 69 சதவிகிதத்தைக் கழித்துவிட்டு மிச்சமுள்ள 31 சதவிகித இடத்தில்தான் தரப்பட உள்ளது. இது யாரையும் பாதிக்காது. முன்னேறிய சாதிகளில் சுடர்வீசும் அறிவோடு பிறந்துவிட்ட பாமர ஏழை மாணவர்களுக்கு மட்டும்தான். இதனை எதிர்க்க வேண்டியதில்லை. இதனை உணர்ந்தே டாக்டர் அருட்செல்வர் 11 ஆண்டுகளுக்கு முன்பே வருமானத்தை அளவுகோலாக்கி இதனை வகுத்தளித்த கருத்து இம்மாதச் சுரங்கத்தில் வாசகர்களின் சிந்தனைக்கு வழங்கப்படுகிறது

– இ.ஆர்.

கிரீமிலேயர்...

நமது அரசமைப்புச் சட்டம், சுதந்திர இந்தியாவில் குடிமக்கள் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்கிறது. இதுதான் நமது அரசு பின்பற்றி வரும் சமத்துவக் கொள்கை (Equality Theory).

ஆனாலும் சமூக ரீதியில் இந்திய மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிரிந்து உயர்வு, தாழ்வோடு இருந்து வரு கின்றனர் என்பதும் உண்மை. அத னால், தீண்டத் தகாதவர்கள் என்றும், பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும், உயர்ஜாதியினர் என்றும் மூன்று பிரிவுகளாக இந்திய சமுதாயம் இருந்து வருகிறது.

நீதிபதி மண்டல் கமிஷன் பரிந் துரைப்படி, இதரப் பிற்படுத்தப்பட்ட ஜாதிகளுக்கு 27 சதவிகித இடஒதுக் கீடு தரப்பட வேண்டுமென்று சட்ட மாக்கப்பட்டு, 1990–ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் அடிப் படைக் கட்டமைப்பை இந்த 27% இடஒதுக்கீட்டுச் சட்டம் மீறவில்லை என்றும், அதனால் இத்திருத்தச் சட்டம் செல்லுபடியாகும் என்றும் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதி களும் தீர்ப்பளித்துள்ளனர். உண்மை யில் இது வரவேற்கத்தக்க தீர்ப்புதான் என்பதில் ஐயமில்லை.

இந்தத் தீர்ப்பின் முக்கியமான மற் றொரு பகுதி 'கிரீமிலேயர்' (Creamy Layer) என்பது. பிற்படுத்தப்பட் டோரில் வசதியானவர்களுக்கு (கிரீமிலேயர்) இந்த இடஒதுக்கீடு தரப் படக் கூடாது என்கிறது அதே தீர்ப்பு.

ஏனெனில், பொருளாதார வசதியுள்ள பிற்படுத்தப்பட்டவர்கள், பணம் செலவழித்துத் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியும். சாதியில்தான் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களே தவிர, வசதியில் அல்ல.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட சாதிகளின் எண்ணிக்கை 4820 என்கிறது சமீபத்திய புள்ளிவிபரம். உதாரணத்திற்கு 6 கோடிப் பேர் உள்ள தமிழ்நாட்டில் மட்டும் 260 சாதிகள் பிற்படுத்தப்பட்ட சாதிகளாக உள்ளன. ஆண்டுதோறும் இப்பட்டியல் தமிழ்நாட்டில் அதிகரிக்கவும் செய்கிறது.

12 கோடி மக்கள் உள்ள உத்தரப் பிரதேசத்தில் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் எண்ணிக்கை 74–தான். 8 கோடிப் பேர் உள்ள மேற்குவங்கத்தில் 59.

இடஒதுக்கீடு மூலம் சாதிகளுக்குக் கிடைக்கும் சலுகைகளால்தான் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் எண்ணிக்கை அதிகரித்ததாகக் கூறலாம்.

இதை உணர்ந்த உச்சநீதிமன்றம், வசதியானவர்களைப் பிற்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம் என்று முதலில் ஆலோசனை வழங்கியது. அரசு அதனை ஒப்புக்கொள்ளாத காரணத்தால், இப்போது தீர்ப்பாகவே அதனை வழங்கிவிட்டது.

அதன்படி ஆண்டுக்கு ரூ. 2.5 லட்சம் வருமானம் பெறுபவர்களை வசதியானவர்களாகக் கருதலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோரில் வசதியானவர்களை நீக்கிவிடத்தான் வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கருத்துத் தெரிவித்துள்ளன.

அதேசமயம் பிரதான எதிர்க் கட்சியான பா.ஜ. கட்சி, முன்னேறிய சாதிகளில் உள்ள ஏழைகளுக்கும் இடஒதுக்கீடு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

எப்படியோ இடஒதுக்கீட்டில் ‘கிரீமிலேயர்’ எனப்படும், வசதியானவர்களை இனங்கண்டு வரையறை செய்ய, அச்சாதியினரின் குடும்ப வருமானத்தையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து உச்சநீதிமன்றத் தீர்ப்பிலேயே இடம்பெற்றுவிட்டது.

27% இடஒதுக்கீட்டை உற்சாகமாக வரவேற்பவர்கள் இந்தக் கிரீமிலேயர் அம்சத்தை மட்டும் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

இடஒதுக்கீட்டின் நோக்கம் ஜாதி பேதங்களை நீக்க வேண்டும் என்பது



உச்சநீதிமன்றம்

தானே தவிர, அதை நிரந்தரப்படுத்த வேண்டுமென்பதல்ல என்பதே நீதிபதிகளின் கருத்து.

இடஒதுக்கீடு என்பது ஏதாவது ஒரு காலகட்டத்தில் நிச்சயமாகக் கை விடப்பட வேண்டிய ஒன்றுதான். அந்த நோக்கத்தில்தான் இந்தச் சலுகை கள் முதலில் வழங்கப்பட்டன.

இதற்கு நேர்மாறாக, இடஒதுக் கீட்டை நீட்டித்துக் கொள்வதற்கான முயற்சிகளே அதிகமாகத் தெரி கின்றன. ஆழ்ந்து கவனித்தால், இதில் ஏதோ ஓர் அரசியல் ஆதாயமும் இழையோடுவதைக் காணலாம்.

கணிசமான வருமானமுள்ள நீதிபதிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ராணுவத் தளபதிகள், எம்.பி.–க்கள், எம்.எல்.ஏ.–க்கள் ஆகியோர் பிற்படுத் தப்பட்ட சாதியில் பிறந்திருந்தாலும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு இடஒதுக்கீடு தருவது கூடாது எனத் தீர்ப்பிலேயே கூறப்பட்டுள்ளது. வரு மானத்தை ரூ. 4 லட்சம் என உயர்த்த லாம் என்ற யோசனையும் கூறப்படு கிறது.

வருமானத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு அந்த அடிப்படை யில் கிரீமிலேயரையே கீழ்க்கண்ட வாறு காணலாம் என்பது எனது யோசனை. இந்தியாவில் சராசரி தனிநபர் வருமானம் இப்போது ஆண் டுக்கு ரூ. 12416/–. அப்படியென்றால் மாதச் சம்பளம் சுமார் ரூ. 1000/–தான்.

மாதம் ரூ. 10 ஆயிரம் சம்பளம் வாங்கும் குடும்பத்தினர், ஆண்டுக்கு ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம் சம்பாதிப் பார்கள். அவர்களை மிகவும் பிற் படுத்தப்பட்ட சாதியினர் (Most Backward Castes) என வருமான அடிப் படையில் வகுக்கலாம்.

இதற்கு அடுத்து, மாதம் ரூ. 20 ஆயிரம் சம்பளம் வாங்கும் பிரிவினர் ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்து 40 ஆயிரம் சம்பாதிப்பார்கள். இவர்களைப் பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் (Backward Castes) என வகுக்கலாம்.

ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமாகச் சம்பாதிப் பவர்களை முன்னேறிய சாதியினர் (Forward Communities) என நிர்ணயிக்க லாம்.

உச்சநீதிமன்றம் வலியுறுத்துகிற கிரீமிலேயர் என்பது, இந்தியாவி லுள்ள உயர் கல்வி நிறுவனங்களிலும் பிறவற்றிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட வசதியான மாணவர்களை இட ஒதுக்கீட்டிலிருந்து விலக்குவதாகும்.



இனி சாதிய அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, முன்னேறிய வகுப்பினர் என்று சமூக ரீதியில் பிரிவினை செய்யாமல், குடும்பத்தின் ஆண்டு வருமானத்தையே அடிப் படையாக வைத்து ரூ. 12 ஆயிரம், ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம், ரூ. 2 லட்சத்து 40 ஆயிரம் என்ற அடிப்படைகளில் எல்லாச் சாதியினரையும் இதற்குள் கொண்டு வருவது வரவேற்கத் தக்க தாக அமையும். ●



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 1

பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள், மதுரையில் சௌராஷ்ட்ரா கல்லூரியில் வணிகத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவர் சார்ந்த சமூகம் முருகக் கடவுளுக்கும், தமிழுக்கும் தொண்டு செய்து வருகின்ற சமூகம். அதனால் அவர் வீட்டில் அரிசி, பருப்பு, சீரகம், மிளகு போலத் தேவாரமும் தினசரி அத்தியாவசியப் பொருளாக இருப்பதைக் காணலாம்.

தேவாரம் மட்டுமல்ல. திருவாசகம், திருமந்திரம், திருக்குறள், திருஅருட்பா எனச் சங்க, சமயத் தமிழ் நூல்கள் அனைத்தும் அவருடைய வீட்டின் கட்டுமானங்கள். ஊதியத்திற்காகக் கல்லூரி வணிகத்துறை. உயிர் வாழ்க்கை யின் அனுபவத்திற்கு அருளாளர்களின் ஞானப் பொக்கிஷங்கள்.

பட்டிமன்றம், கருத்தரங்கம், சொற்பொழிவுகள் என அனைத்திலும் முத்திரை பதித்தவர்களில் முன்னணிப் பேச்சாளர். கம்பன் கழகம், தமிழ் இலக்கிய மன்றங்கள், திருக்குறள் அமைப்புகள் எங்கெல்லாம் தமிழ்நாட்டில் உள்ளனவோ, அங்கெல்லாம் சொ.சொ.மீ. தோன்றிற் புகழோடு தோன்றுபவர்.

இவருக்கென்று உருவாகியுள்ள ரசிகர்கள், வாசகர்கள், பக்தர்கள், ஆன்மீக நம்பிக்கை உள்ளவர்கள், அடக்கமும் ஒழுக்கமும் கொண்டவர்கள். அரசியல் துர்வாடை இல்லாத தூய வாழ்க்கையைச் சென்னி மேல் வைத்துப் பரமனை அனுபவித்துப் பரவசமடைபவர்.

அத்தகைய பெருமைக்குரிய பேராசிரியர் சொ.சொ.மீ.யை அன்புடன் அருட்செல்வரின் ‘ஓம் சக்தி’யின் அரசுக் கட்டிலில் அமர்ந்து அழகூட்டச் சொன்னோம். ஏனென்றால், அதே அரசுக் கட்டிலில்தான் எவரோ ஒரு புலவர் களைத்து வந்து அமர்ந்தபோது அப்படியே உறங்கிவிட்டதாகவும், ஆனாலும் அவரை அரசன் அன்போடு எழுப்பிப் பரிசில்கள் தந்து சிறப்பித்தான் என்றும் சங்க இலக்கியப் பாடல் ஒன்று உண்டு. அருட்செல்வரின் அரசுக் கட்டில்தான் ‘ஓம் சக்தி.’

நவீனர்களைப் போல மிடுக்கு உடைக்காரர் அல்ல. வேட்டியும் சட்டையும்தான். அநேகமாகக் கதர். பயணத்திற்கும் பெரும்பாலும் பஸ்ஸையும், ரயிலையுமே பயன்படுத்தி வருபவர். சொ.சொ.மீ. என்பவரைப்

பார்க்காதவர்கள் மேடைக்கு அவர் வந்தால் அவரை மேடையில் ஏற அநேகமாக அனுமதிக்க மாட்டார்கள். அத்தனை எளிமை!

இலக்கியத்தில் அவர் சம்பாதித்தது ரசிகர்களையும் பக்தர்களையும்தான். இத்தகைய பின்புலம் கொண்ட பேரா. சொ.சொ.மீ. அவர்கள் தனது வாழ்க்கை கற்பித்த ஞானங்களை 'ஓம் சக்தி'யில் தொடர் படைப்பாக வழங்கினால், பிற்காலத்தில் அதை நூலாக்கலாம். அவரது ரசிகர்களையும் ஒழுக்கமான ஆளாக்கலாம் என்றோம்; ஒப்புக்கொண்டார்.

தன்னை ஆளாக்கிய நூல்களில் ஒன்றான திருமந்திரத்தைப் பற்றிய படப்பிடிப்புகளை ஒவ்வொரு மாதமும் தருமாறு 'தீவினை மாற்றும் திருமந்திரத்தைத்' தொடங்கியிருக்கிறார்.

– இ.ஆர்.

கல்கத்தாவில் வாழ்ந்த சுறுசுறுப்பான இளைஞன் நரேந்திரன். அவனுக்கு மிகப்பெரிய சந்தேகம் ஏற்பட்டது. கடவுள் உண்டா, இல்லையா என்று சந்தேகம் ஏற்பட்டது. பல பெரியவர்களிடம் கேட்டான். எல்லோரும் "கடவுள் உண்டு" என்றார்கள். "நீங்கள் கண்டதுண்டா?" என்று


திருமூலர்


ராமகிருஷ்ண பரமஹம்சர்


விவேகானந்தர்

கேட்டான். "இல்லை" என்றார்கள். அப்படியானால், கடவுள் இல்லை. கடவுள் என்பது பணக்காரர்களால் கற்பிக்கப் பட்ட ஒரு கற்பனை என்று முடிவு கட்டினான் நரேந்திரன்.

1881–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அவனுடைய பேராசிரியர் ஒருவர், "உன்னுடைய ஞானப்பசி, யானைப்பசி. இதற்குத் தீனி போடும் ஆற்றல் தட்சிணேஸ்வரம் இராமகிருஷ்ணருக்குத்தான் உண்டு. அவரைச் சென்றடைவாய்" என்றார்.

அதன்படி, தன்னுடைய பதினெட்டாம் வயதில் இராமகிருஷ்ணரைச் சந்தித்த நரேந்திரன், அவர் கொடுத்த மெய்ஞ்ஞானச் செல்வத்தால் இந்து மதத்தை உலகெங்கும் போற்ற வைத்த விவேகானந்தராக மாறினான். இராமகிருஷ்ணரிடம் நரேந்திரன் செல்வதை அறிந்த அவனுடைய பாட்டி, "அந்தத் தட்சிணேஸ்வரத்துப் பைத்தியக்காரருக்கு என்ன தெரியும்? பொன்னைத் தெரியுமா? பொருளைத் தெரியுமா? மண்ணைத் தெரியுமா? மனைவி, மக்களைத் தெரியுமா? உலகம் தெரியுமா? ஒன்றும் தெரியாது. கடவுளைத்தான் தெரியும்" என்றாளாம்.

இதன்படி பார்த்தால், இராமகிருஷ்ணருக்குக் கடவுளைத் தவிர வேறொன்றும் தெரியாது. நமக்கு எல்லாம் தெரியும். கடவுளைத் தான் தெரியாது. சிவன் எவ்விடத்தான்? எவர் கண்டனர் என்று தேடிக் கொண்டே இருக்கிறோம். இராமகிருஷ்ணரைப் பொறுத்தமட்டில் கடவுளுக்குள் உலகம் மறைந்துவிட்டது. நம்மைப் பொறுத்தமட்டில் உலகத்துக்குள் கடவுள் மறைந்துவிட்டார்.


சுத்தானந்த பாரதி


ஒரு தச்சன் தேக்கு மரத்தில் அழகான

தொடர்ச்சி 14–ம் பக்கம்

உ(ப)யிர் வளர்ப்பு

தங்கமகன்

கதிரவனும் கடலும் கூட்டணி போடுவதால்
கார்மேகம் மிதக்கும் விண்வெளியிலே
காற்றுத் தேரேறி கானகம் குளிரூட்ட
கருணைமழை பிறக்கும் மண்வெளியிலே
விழுந்துளி வரவேற்று, விளைநிலம் பண்படுத்தி
விதைமணி பதிவாக்கி விளைவிக்கும் உழவாளியே!
களைப்புக்குக் களைப்பூட்டி, களிப்போடு களைநீக்கி
கண்ணெனத் தினம் நோக்கிக் களம் சேர்க்கும் உழைப்பாளியே!
கழனியையே கோவிலாகக் கலப்பையையே கடவுளாக
உழைப்பையே நீ தொழுகையாகச் செயல்படுத்தும் அர்ப்பணிப்பால்
நிலத்தினில் மக்களின் இரைப்பைக்கு இரை கொடுத்தாய்
நேரிலே இறைவனைக் காட்டு என்று வருபவர்க்கு
யாரை நான் காட்டுவது? உனையன்றி இவ்வுலகில்
உரம் வைத்து நீ செய்தல் பயிர்வளர்க்கும் பணியல்ல
உயிர்வளர்க்கும் புனிதமென்றால் அதுவொன்றும் மிகையல்ல
வீடின்றி வீதியையே வீடாக்கும் எளியோர்கள்
வெயிலையே குடையாக்கி வியர்வை சிந்தும் தொழிலாளி
காற்றாடி மேலசைய கருத்தோடு உழைப்பவர்கள்
கலைபல செய்து கவனத்தை ஈர்ப்பவர்கள்
ஆகாயம் வழியாக அகிலமெங்கும் பறப்பவர்கள்
அண்டங்களைத் தாண்டி ஆராய்ச்சி செய்பவர்கள்
கடலின் அலைமீதே காலத்தைக் கழிப்பவர்கள்
காஷ்மீர் பனிக்குளிரில் நம்நாட்டைக் காப்பவர்கள்
எல்லாம் இருப்பவரும் ஏர்முனை நீ இல்லையெனில்
இல்லாமல் போய்விடுவர் இதுதானே உண்மைநிலை
எண்சாண் உடம்பில் ஒருசாண் வயிறாக
இருக்கின்ற நாள்வரையில் உனக்கிணை ஏதுமில்லை
இதற்கும்மேல் சொல்வதற்கு என்னிடமும் வார்த்தையில்லை!







எழுத்துப் பணியில் அரை நூற்றாண்டு கண்ட படைப்பாளிக்குப் பாராட்டு...

1969–இல் முதல் சிறுகதையை எழுதிய எழுத்தாளர் ராஜேஷ்குமாருக்கு இந்த 2019–ஆம் ஆண்டு 50–வது பொன்விழா ஆண்டு. இந்தச் சாதனையைப் பாராட்டும் விதமாக அமேசான், வெஸ்ட்லேண்ட், ஒடிஸி புத்தக மையம் சார்பில் 14.7.2019 அன்று கோவையில் பாராட்டு விழா நடந்தது. இந்த விழாவில் கோவை பாரதிய வித்யாபவன் சேர்மன் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்களும், டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அமேசான் கம்பெனி சார்பில் நிர்வாகி திரு. சதீஷ் முன்னிலையில் திரு. பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் விழா மலர் ஒன்றை வெளியிட எழுத்தாளர் ராஜேஷ்குமார் பெற்றுக் கொண்டார்.

விழாவில் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் பேசியதாவது :– “ஓர் எழுத்தாளர் 50 ஆண்டுகளைக் கடந்து எழுதிக் கொண்டு இருப்பது சாதாரண விஷயம் இல்லை. மிகப்பெரிய சாதனை. தமிழ் இலக்கியத்தில் 1500 நாவல்கள், 2000 சிறுகதைகள் எழுத முடியும் என்பதை வேறு எந்த ஓர் எழுத்தாளரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இந்த நாட்டில் குற்றங்கள் இருக்கும்வரை ராஜேஷ்குமார் கதைகளும் இருக்கும்” இவ்வாறு அவர் பேசினார்.

எழுத்தாளர் ராஜேஷ்குமார் பேசுகையில், “எழுதியது போதும் நிறுத்துங்கள் என்று பிள்ளைகள் சொல்கிறார்கள். எழுதிக் கொண்டே இருந்தால்தான், நான் இளமையாக இருப்பேன். நிறுத்தினால் எனக்கு வயதாகிவிடும்” என்றார்.

– ந.நி.

கட்டுரை

பழகிப் பார்த்ததில் இவர்கள்... 8

பழனி இளங்கம்பன்

மரபின் மைந்தன் முத்தையா

பழனி இளங்கம்பன் என்னும் பெயர் எனக்கு அறிமுகமாகக் காரணம் கவியரசர் கண்ணதாசன்தான். கோவை மணி மேல்நிலைப் பள்ளியில் நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது கவியரசர் கண்ணதாசன் காலமானார். அப்போது ஜெமினி சினிமாவில் அவர் மறைவுக்காக நினைவுச் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டார்.

அதில் எல்லாப் படைப்புகளையும் கவிஞர் சொல்லச் சொல்ல உதவியாளர்கள் எழுதிக் கொள்வார்கள் என்றும், வாழ்த்துப் பாடல்களை மட்டும் அவரே கைப்பட எழுதினார் என்றும் ஒரு செய்தி போட்டு, அதற்குச் சான்றாகக் கவிஞர் கைப்பட எழுதி இருந்த பாடல் ஒன்றையும் வெளியிட்டிருந்தனர்.

அது பழனி இளங்கம்பன் அவர்களுடைய மகள் திருமணத்திற்குக் கவியரசர் எழுதி அனுப்பிய எண்சீர் விருத்தம்.




"பழங்கம்பன் மகள் இன்றிப் பறந்து போனான்
படிக்கின்ற காவியம்தான் வடித்து வைத்தான்
இளங்கம்பன் மகள் பெற்றான் இனிது உயர்ந்தான்
இனிய மணி மொழி என்றே பெயரும் வைத்தான்
வழங்கும் நல் மங்கலத்தின் மணி மொழிக்கும்
வளர்கின்ற கணேசனார் தனக்கும் இன்று
தழைக்கின்ற திருமணத்தின் அழைப்புக் கண்டேன்
தமிழ் வாழும் காலம் வரை அவர்கள் வாழ்க!"

இந்தப் பாடலை நான் வாசித்து மனதில் இருத்திக் கொண்டேன். பல ஆண்டுகள் கழித்துக் கல்லூரிப் பருவத்தில்தான் பழனி இளங்கம்பன் அவர்களை நேரில் பார்க்க வாய்த்தது. அவர் கவியரங்குகளில் குரலெடுத்துப் பாடுவார். பெரும்பாலான அரங்குகளில் கைகளில் காகிதம் எதுவும் வைத்துக் கொள்ளாமல் மனதில் இருந்து நேரடியாகக் கவிதை பாடுவார்.

"எழுதியதைப் பாடவில்லை. எழுவதைப் பாடுகிறேன்" என்று விளக்கம் சொல்வார். அது இயல்பாகவே அவருக்கு இருக்கும் திறமை என்பதை அவருடன் பகிர்ந்து கொண்ட மேடைகள் சிலவற்றில் பார்த்திருக்கிறேன்.

ஒருமுறை கோவை புலியகுளத்தில் ஒரு கவியரங்கம். அதில் கலந்து கொண்ட எங்கள் ஒன்றிரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் அவருக்குப் புதியவர்கள். அதில் பொறியியல் கல்லூரி மாணவி ஒருவர் கவிதை



வாசித்தார். அவர் பெயர் வசந்த ரத்னா. அவரை அழைக்க வேண்டிய முறை வந்தபோது, அழைப்பிதழில் அவர் பெயரைப் பார்த்து முதலில் இசையோடு வசந்த ரத்னா ஆ ஆ என ஆலாபனை செய்த இளங்கம்பன் அருகில் அமர்ந்திருந்த என்னிடம் ரகசியமாக "அவர் என்ன செய்கிறார்" என்றார். பொறியியல் கல்லூரி மாணவி என்றேன். அடுத்த வினாடியே

> "வசந்த ரத்னா வளமான சொற்கள் எல்லாம்
> இசைந்து வரக் கவி பாடும் இன்ஜினியர்"

என்று அறிமுகக் கவிதையைச் சுடச் சுட வழங்கினார்.

கோவையில் வசிக்கும் கவிஞரும் 'நிலா' இதழ் ஆசிரியருமான திரு. மானூர் புகழேந்தி, கவிஞர் இளங்கம்பன் அவர்களுக்கு நெருங்கிய நண்பர். அவருடைய திருமணமே இளங்கம்பன் அவர்கள் தலைமையில்தான் நடந்ததென்று சொல்வார்.

முன்னர் ஒருமுறை இதே தொடரில் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் அவர்களைப் பற்றி எழுதியபோது குறிப்பிட்டதைப் போலவே, பழனி இளங்கம்பன் அவர்கள் பெயரையும் கவிஞர் வைரமுத்து அவர்களின் 'கவிஞர்கள் திருநாள் விருது'க்குப் பரிந்துரை செய்தேன். கவிஞர் வைரமுத்து அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

பழனி இளங்கம்பன் அவர்கள் விருதுபெற்ற மேடையில் தன் ஏற்புரையில் கவிஞர் வைரமுத்து அவர்களை வாழ்த்தி இசையோடு நேரிசை வெண்பா ஒன்றைப் பாடினார்.

> "நல்வயிர முத்து நமக்களிக்கும் பாக்களுக்கு
> பல்வயிர முத்துப் படைத்திடலாம் செல்வரிவர்
> பொன்மணியை அன்றே பெருந்துணையாய்க் கொண்டவராம்
> நன்மணியாய் ஆனார் நமக்கு"

என்பது அந்த வெண்பா.

காலங்கள் உருண்டோடின. சில ஆண்டுகளுக்குப் பிறகு பழனியில் என்னுடைய தலைமையில் வழக்காடு மன்றம் ஒன்று நிகழ்ந்தது. அப்போது பழனியில் பேசுவதால் பழனி இளங்கம்பன் பற்றிக் குறிப்பிட்டுவிட்டுக் கட்டுரையின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டிருந்த கவியரசர் கண்ணதாசன் வாழ்த்துப் பாடலையும் மேடையில் குறிப்பிட்டேன்.

அந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள் தமிழருவி மணியன் அவர்களின் சிறந்த தொண்டராக

விளங்கியவர்கள். அவர்களிடம் வாழ்த்துப் பாடலில் குறிப்பிடப்பட்ட மாப்பிள்ளை கணேசன் பற்றி விசாரித்தேன். அப்போதுதான் அந்த அதிர்ச்சித் தகவலை எனக்குச் சொன்னார்கள்.

மணிமொழி என்னும் தன் மகளை கணேசனுக்கு மணமுடித்துக் கொடுத்த இளங்கம்பன், மாப்பிள்ளை விரும்பிக் கேட்டதால், தவிர்க்க முடியாமல் தன்னுடைய இரண்டாவது மகளையும் கணேசனுக்கு மண முடித்துக் கொடுத்தார் என்றும், சிறிது காலத்தில் கணேசன் மரணமடைந்து விட்டார் என்றும், அந்தச் சம்பவத்தில் இளங்கம்பன் அவர்கள் மிகவும் மனம் உடைந்து போய் இருந்தார் என்றும் நண்பர்கள் வாயிலாக அறிந்தேன்.

கவியரங்க மேடைகளைக் கலகலப்பாக்கி வந்த அவருடைய பாணி மிகவும் சுவாரசியமானது. அப்போதெல்லாம் பொங்கல் விழாக்களில் நிறையக் கவியரங்குகள் நிகழும். அவற்றில் கவியரங்கை நிறைவு செய்யும் போது,

“அனைவருக்கும் அமைப்பினருக்கும் நன்றி மலர்
நல்கி
பொங்கல் கழிந்தாலும் புத்தாண்டு வாழ்த்துச்
சொல்லி”

என்று வரிகளைச் சொல்வது அவரின் வழக்கம்.

பின்னர் ஒருமுறை தாராபுரத்தில் சேனாபதிக் கவுண்டர் அவர்களின் நினைவுக் கவியரங்கம் ‘ஓம் சக்தி’ இதழின் ஆசிரியர் கவிஞர் பெ.சிதம்பரநாதன் தலைமையில் நிகழ்ந்தது. விழாவிற்குக் கவிஞர் சிற்பி தலைமை தாங்கினார். அந்தக் கவியரங்கைத் தொடங்கி வைத்துக் கவிஞர் இளங்கம்பன் உரையாற்றினார். அநேகமாக அவரைக் கடைசியாகச் சந்தித்தது அந்த மேடையில்தான் என்று ஞாபகம்.

இசைத் தமிழுக்குப் பழனி இளங்கம்பன் பெரும் பங்களிப்புச் செய்து இருக்கிறார் என்பது பலரும் அறியாத செய்தி. அவர் எழுதிய பக்திப் பாடல்கள் பலவற்றை இசை வாணர்கள் பலரும் இசையமைத்துப் பாடி இன்றளவும் மேடைகளில் அரங்கேற்றி வருகிறார்கள்.

டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன், திரு.டி.எம்.சௌந்தரராஜன், திரு வீரமணி உள்ளிட்ட புகழ்பெற்ற பாடகர்கள் இவருடைய பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

“அழைத்து வருவாய் மயிலே செந்தில்
அழகன் குமரவேலன் அமரசேனாபதியை
அழைத்து வருவாய் மயிலே
தழைத்தோங்கத் தமிழ் தந்த தரணியை
வலம் வந்த
கலைக்கூத்தன் செல்வனைக் காண
நினைத்தேன் என்று
அழைத்து வருவாய் மயிலே”

என்பது அத்தகைய பாடல்களில் ஒன்று. சவுண்ட் கிளவுட் தளத்தில் சுதா ஈஸ்வரன் என்னும் இசைக் கலைஞர் இந்தப் பாடலைப் பாடியிருக்கிறார்.

என் கல்லூரிப் பருவம் தொட்டு நான் பல நிகழ்ச்சிகளில் மிகவும் விரும்பிக் கேட்ட பாடல், பழனி இளங்கம்பன் அவர்களால் எழுதப் பட்டது என்பதைப் பின்னர்தான் தெரிந்து கொண்டேன். சுவாமிமலை ஜானகிராமன் அவர்களால் இசையமைக்கப்பட்ட சுகதா எனும் இசைப் பேழையில் இடம்பெற்ற அந்தப் பாடல், சமீபத்தில்கூட ஜானகிராமன் அவர்கள் சிஷ்யை மகாநதி ஷோபனா அவர்களால் பாடி இணையத்தில் அரங்கேற்றப்பட்டது. அந்த அழகிய பாடல் இதுதான். குறிப்பாக அதன் முதல் சரணம் மிகவும் அழகு.

“சின்னஞ்சிறு குழந்தை ஒன்று கனவில் வந்தது
சிங்காரப் புன்னகையால் என் னைக் கவர்ந்தது

சரணம் - 1

வெற்றிதரும் அதன் கையில் வேலிருந்தது
விள்ளும் அதன் விழி எனது மேலிருந்தது
நெற்றித் திருநீறு பாலைப் போலிருந்தது
நீலமயில் மீது அதன் காலிருந்தது..

சரணம் - 2

வண்ணமணி மார்பில் முத்து மாலை கிடந்தது
வந்த கிண்கிணி ஓசை காதில் தொடர்ந்தது
பொன்னான அதன்முகமோ பூவை வென்றது
போற்றும் உந்தன் பெயரெதுவோ முருகன் என்றது

சரணம் - 3

கண்களை நான் திறந்தேன் காட்சி மறைந்தது
கண்டந்தக் காட்சியதன் ஆட்சி விரிந்தது
மண்ணுறங்கும் எனினும் எந்தன்
மனமுறங்கவில்லை
மயக்கும் அந்த முகத்தைத் தவிர
வேறெதுவும் தெரியவில்லை”

என்பது அந்தப் பாடல்.

பிற்காலத்தில் நான் தனியாக அலுவலகம் அமைத்துச் செயல்படத் தொடங்கிய பின், புலவர் திலகவதி சண்முகசுந்தரம் அவர்களிடமிருந்து ஒரு செய்தி வந்தது. இளங்கம்பன் அவர்கள் நோயுற்ற நிலையில் சிகிச்சைக்குப் போதிய வசதியின்றிச் சிரமப் படுகிறார் என்பதுதான் அந்தச் செய்தி. என்னால் இயன்ற ஒரு தொகையை அவருக்கு அனுப்பி வைத்தேன்.

இளங்கம்பன், சித்திரக்கூடம், பழனி – இந்த முகவரி இலக்கிய உலகில் ஏறக்குறைய எல்லோருக்குமே நன்கு தெரிந்த முகவரிதான். நான் சற்றும் எதிர்பாராத வகையில் அதற்கு நன்றி தெரிவித்து அவரிடமிருந்து சில வெண்பாக்கள் வந்தன. கருப்பு மையில் கைப்பட எழுதிய வெண்பாக்களில் இரண்டு வரிகள் நினைவிருக்கின்றன. ஒரு சிறிய உதவிக்கு இத்தகைய வரிகளை எழுத எவ்வளவு பெரிய மனம் வேண்டும் என்று என் நினைவில் அடிக்கடி மின்னல் வெட்டி நெகிழச் செய்கிற வரிகள் அவை.

“தாயாய்ப் பரிந்து தனமளிக்க நீ இருக்க
நாயாய் அலைவேனோ நான்”

தமிழக அரசு, கலைமாமணி விருது வழங்கி அவரைக் கௌரவித்தது. பழநி இளங்கம்பன் அவர்கள் 2011–இல் தன் 78–வது அகவையில் மறைந்தார்.

பெரும் நதிக்கு உரிய பிரவாகப் புலமையும், சந்த சங்கீத சலசலப்பும் கொண்டிருந்த அந்தக் கவிஞர் காலமும் கடவுளும் இடம்கொடுத்து இருந்தால் இன்னும் சிறிது காலம் இங்கே உலவி இருப்பார். இன்னும் எத்தனையோ படைப்புகளை நமக்குத் தந்திருப்பார். ●



அநுராதபுரம்

இலங்கையில் ‘அநுராதபுரம்’ என்று ஒரு நகரம் இருக்கிறது. ஓர் எண்ணால் உருவானது இந்தப் பெயர். சிங்கள மொழியில் ‘அநு’ என்றால் 90 என்று பொருள். இந்தப் பகுதியை 90 அரசர்கள் ஆண்டார்கள் என்பதைக் குறிப்பிடும் வகையில் இது அநுராதபுரம் என்று அழைக்கப்படுகிறது.

– ம.செ.மயில், திருநெல்வேலி.

7–ம் பக்கத் தொடர்ச்சி

யானை செய்தான். அதைக் காட்சியில் வைத்தான். ஒரு கலைஞன் யானை அழகாயிருக்கிறது என்றான். ஒரு மரத்தச்சன் தேக்கு மரத்தையே பார்த்து, மரம் நல்ல மரம் என்றான். யானையைப் பார்த்தவனுக்கு மரம் மறைந்தது. மரத்தைப் பார்த்தவனுக்கு யானை மறைந்தது. இதுபோலக் கடவுளைப் பார்த்தவருக்கு உலகம் மறைந்தது. உலகத்தைப் பார்த்தவருக்குக் கடவுள் மறைந்தார். இதைக்கண்ட ஒரு ஞானச் சித்தர்,

“மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்”

(திருமந்திரம் 2256)

என்று பாடினார். அவர்தான் திருமூலர்.

திருமூலர் எழுதிய நூல் திருமந்திரம். பக்குவப்பட்ட மனம் எல்லாவற்றிலும் பரமனையே பார்க்கும். பக்குவப்படாத மனம் உலகில் சிக்கி உழலும். இக்கருத்தைத் திருமூலர் மற்றொரு எடுத்துக்காட்டாலும் விளக்குகிறார்.

தங்கச் சங்கிலியைப் பார்த்தவர்கள் அதன் அழகில் மயங்குவர். அவர்களுக்குத் தங்கத்தின் தரம் தெரியாது. தங்கத்தின் தரத்தை உரைத்துப் பார்ப்பவருக்குச் சங்கிலியின் அழகு தெரியாது. இதுபோல, மனிதனுடைய மனம், புத்தி முதலிய கருவி, கரணங்கள் மெய்ப்பொருளான கடவுளை மறைக்கின்றன. இவற்றை விலக்கினால் நமக்குள்ளேயே ஒளி மயமாக இறைக்காட்சி கிடைக்கிறது. இதை,

“பொன்னை மறைத்தது பொன்அணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்அணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே”

(திருமந்திரம் 2255)

என்று பாடுகிறார் திருமூலர்.

மிகப்பெரிய செய்தியை மிக எளிமையாகச் சொல்லும் இந்தச் சித்தர் யார்? இவர் எழுதிய திருமந்திரம் படித்தால் என்ன கிடைக்கும்? இதற்கு ஏன் திருமந்திரம் என்று பெயர் வைத்தார்கள் என்ற வினாக்கள் நம்மைச் சுற்றி நிற்கின்றன அல்லவா? வாருங்கள் விடை காண்போம்.

நினைத்தவரைக் காப்பாற்றுவது மந்திரம். அது நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. மணிமேகலை வானில் பறக்க வைக்கும் மந்திரம், வேற்றுருக் கொள்ளச் செய்யும் மந்திரம், பசிப்பிணி ஒழிக்கும் மந்திரம் மூன்றும் பெற்றாள் என்று மணிமேகலை கூறுகிறது.

மந்திரங்கள் பதினொன்றாகும். அவற்றுள் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்ற ஐந்தும் இறைவனுக்குரிய பிரம்ம மந்திரங்கள் ஆகும். இவை தவிர, இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அத்திரம் என்ற ஆறும் நம் உடம்பு உறுப்புகளைத் தூய்மை செய்யும் அங்க மந்திரங்கள் ஆகும்.

இந்தப் பதினொன்றில் பத்தாவது மந்திரம் கண்ணுக்குரிய நேத்திர மந்திரமாகும். பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைக்கப் பெற்றதால், இது ஞானக்கண் திறக்கும் நேத்திர மந்திரமாகும். ‘பத்தாம் திருமுறை முத்தாம் திருமுறை’ என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

திருமந்திரத்தில் வரும் பெரும்பாலான பாடல்கள் ஒற்றெழுத்து நீக்கி எண்ணினால், அடிக்குப் பன்னிரண்டு எழுத்துக்கள் கொண்ட நான்கடிப் பாடல்களாகும்.

திருமந்திரம் படித்தால் தீவினை மாறும் என்பது ஒரு சித்தர் வாக்கு. இந்தச் சித்தரை நான் 1970–இல் மதுரையில் சந்தித்தேன். அப்பொழுதே அவருக்கு அறுபது வயதிருக்கும். பழுத்த பழமாக இருந்தாலும் இளைஞன் போலச் சுறுசுறுப்பாக இருந்தார். அருமையாகத் தமிழ் பேசினார். தான் பல காலம் தவம் செய்ததைக் குறிப்பிட்டார்.

அவர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் ஒன்று, அக்காலத்தில் ‘ஏழை படும் பாடு’ என்ற பெயரில் நல்ல திரைப்படமாக வந்தது. அவர் எழுதிய ‘பாரத காவியம்’ என்று பெயர் பெற்ற நூலுக்கு 1969–இல் தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் பரிசளித்தது. அவர்தான் தெய்வப்பற்று, தேசப்பற்று, மொழிப்பற்று மூன்றும் கொண்ட யோகி சுத்தானந்த பாரதியார்.

மதுரையில் திருவள்ளுவர் கழகத்தில் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் அவரைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது அவர் ஒரு பாடலைக் கூறினார். அது தேவாதி தேவனுக்கு அவர் பாடிய திருவெம்பாவைப் பாட்டு.

"தேவர் குறளாட்டித் திருவா சகம்சூட்டி
மூவர் தமிழோதி நாலா யிரம்பாடித்
தாவடங்கள் ஆகமுச் சங்கத் தமிழணிந்து
காவிய மாமணியாம் கம்பன் முடிகவித்துத்
தீவினை மாற்றும் திருமந் திரம்சொல்லி
ஆவி உருக்கும் அருட்பாவால் அர்ச்சித்துக்
கூவித் திருப்புகழைக் கூத்தாடித் தெண்டனிட்டுத்
தேவாதி தேவனருள் சேர்ந்திடுவோம் எம்பாவாய்"

என்பது அவர் பாடிய பாவைப் பாடல்.

தேவாதி தேவனான இறைவன் அருள் கிடைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? அப்பெருமானுக்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளால் நீராட்ட வேண்டும். பிறகு முதல் மங்கல அணியாகத் (தாலியாகத்) திருவாசகத்தைச் சூட்ட வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழத் திருக்குறள் வழி காட்டும். இன்பம் பெருக்கி, இருளகற்றி, இறைவன் திருவருள் கிடைக்கத் திருவாசகம் வழி காட்டும்.

எங்கள் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் "இறை, வாய்மை (திருக்குறள்), திருவாசகம் இம்மூன்றும் என் வாழ்வின் அடிப்படை'' என்று கூறுவார். பண்புக்குத் திருக்குறள், பக்திக்குத் திருவாசகம். இறைவனுக்குத் திருக்குறளால் நீராட்டித் திருவாசகம் சூட்டிய பிறகு, தேவாரத்தைக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓத வேண்டும். அதன் பின்னர் ஆழ்வார்கள் அமுதத் தமிழான நாலாயிரத் தமிழை "வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க'' வேண்டும்.

இறைவனுக்குப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெருங் காப்பியங்கள் என்ற நாற்பத்தொரு சங்கத் தமிழ் மாலை சூட்ட வேண்டும். அப்பொழுதுதான் "தெய்வந் தெளியவும், தெளிந்தோர்ப் பேணவும்'' முடியும். இப்படிச் செய்தால், இறைவன் "உலகத்து ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசில் நல்குவான்.''

இதன் பிறகு இறைவனுக்கு மணிமுடி சூட்ட வேண்டும். இதற்குக் கம்பன் கவியே தகுதி மிக்கது. "அறம் வெல்லும், பாவம் தோற்கும்'' என்று கூறித் தருமத்தின் தனிமை தீர்த்து மூன்றும் ஒன்றான மூர்த்தியைப் பாடிய கம்பன் எழுதிய இராமாவதாரத்தை, "வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி'' மணிமுடி சூட்ட வேண்டும்.

இவ்வளவும் செய்த பிறகு, கடவுளுக்கு மந்திரம் சொல்லி வழிபாடு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால், தீவினை மாறும். நாம் செய்த தீவினையை மாற்றித் திருத்துவது எது? அதுதான் திருமந்திரம்.

'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்று கூறி, அன்பே சிவமாவது என்று வழிகாட்டி, இளமையும் செல்வமும், உடலும் நிலையல்ல, இருக்கும் பொழுதே கொடுத்துப் பழகு என்று இடித்துரைத்து, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற எண்ணத்தால் திருமூலர் தந்த திருமந்திரத்தைச் சொல்லி மனம் பண்பட்டால் தீவினை மாறும். படிக்கப் படிக்க மனம் பண்பட வேண்டும்.

விலை உயர்ந்த உப்பு!



தண்டி உப்பு சத்தியாகிரகத்திற்காக காந்தியடிகள் 24 நாள்களில் 240 மைல்கள் நடந்தார். 6.4.1930 அன்று காலை 6.30 மணிக்கு காந்தியடிகள் உப்பைக் கையில் அள்ளினார். அந்தக் கை அளவு உப்பு 1600 ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. உலகிலேயே விலை உயர்ந்த உப்பு அதுதான்!

– நெ.இராமன்,
சென்னை.

பட்டத்துக்காகப் படிக்கும் படிப்பு, பட்டம் போலப் பறந்து போய்விடும். திருமந்திரத்தைப் படித்து, அதன்படி வாழப் பழகினால், தீய எண் ணங்களும், தீவினையும் தீயினில் தூசாகும். கடவுளுக்கும், நமக்கும் உள்ள இடைவெளி குறை யும். ''அன்பால் உருகி அகம் கனிந்து என்பொன் மணியை எய்தி வாழலாம்.''

தீவினை மாற்றும் திருமந்திரம் சொல்லியபின் இறையருள் கிடைக்கும். இறைவன் நம் ''உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்'' என்று நமக் குள்ளே அருட்பெருஞ்சோதியாய் வீற்றிருப்பான். அவனுக்குத் திருவருட்பாவால் அர்ச்சனை செய்ய வேண்டும். அர்ச்சனை பாட்டே ஆகுமல்லவா! ''உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந் தால் உயிர் விடுவேன்'' என்று பாடினால், இறை வன் நம்மை விட்டுப் போவானா? மாட்டான். இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்று போற்றத்தக்கவாறு நெஞ்சக் கோயிலில் நித்தம் இருப்பான்.

இறைவன் நம்மோடு கலந்துவிட்டால், அந்த ஆனந்தம் எல்லை கடந்ததல்லவா? அப்பொழுது திருப்புகழ் பாடிப் பலரும் கேட்குமாறு கூவித் தெண்டனிட வேண்டும். ''பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்'' என்று நம் மாழ்வார் பாடியது போலக் கூத்தாடலாம். ''ஏக போகமாய் நீயு நானுமாய் இறுகும் வகை பரம சுகம்'' என்று கொண்டாடலாம். இதுதான் நாம் பெற வேண்டிய அருள் வாழ்க்கை. பொருள் வாழ்க்கை போய்விடும். அருள் வாழ்க்கை அழி யாது. இப்பாடலைப் பாடிய கவியோகி சுத்தானந்த பாரதிக்கு ஆயிரம் முனைவர் பட்டம் அளிக்கலாம்.

இப்படி வாழ வேண்டுமானால், தமிழ் படிக்க வேண்டும். புண்ணியம் செய்தவன்தான் முறை யாகத் தமிழ் படிப்பான். கதிரவனும் ஒளியும் போலக் கடவுளும் தமிழும் பிரிக்க முடியாதவை.

“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே”

என்று பாடுகிறார் திருமூலர். தீவினை மாற்றும் திருமந்திரம் பாடிய திருமூலர், பக்தர் வரிசையில் சித்தராகவும், சித்தர் வரிசையில் பக்தராகவும் திகழ்பவர். சைவ சித்தாந்தத்தை முதலில் தெளி வாகக் கோடிட்டுக் காட்டியவர் திருமூலர். திருமந் திரம் சாத்திரமும் தோத்திரமும் ஆகத் தனித்தன்மையோடு திகழ்கிறது.

அட்டமாசித்திகள் பெற்ற தவயோகியான திருமூலர், நமக்காகப் பாடிக் கொடுத்த ஞானத் தமிழ் திருமந்திரம். திருக்குறள், திருவாசகம், திரு மந்திரம் என்ற மூன்றும் நமக்கு வழிகாட்டும் நூல் கள். இதை உணர்ந்து வாழ்ந்து மரணமிலாப் பெரு வாழ்வு பெற்றவர் வள்ளற்பெருமான். திருமூலரை ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று பாடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளில் சம்பந்தர் சரியை என்றும், அப்பர் கிரியை என்றும், சுந்தரர் யோகமென்றும், மணி வாசகர் ஞானமென்றும் குறிப்பிடுவார்கள். யோகம் உணர்ந்த பெருமிழலைக் குறும்பரின் குருவான சுந்தரர் மிகப்பெரிய யோகியாக இருக்க வேண் டும். அவரே திருமூலரை நம்பிரான் என்று குறிப் பிட்டால், திருமூலர் எவ்வளவு பெரிய யோகியாக இருக்க வேண்டும்!

அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள் எல்லா வற்றையும் பயின்று பாடியவர் திருமூலர். ''இருந் தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி'' என்று திருமந்திரம் பேசுகிறது. மக்கள் வாழ்க்கை நூற்றி இருபது ஆண்டுகள் என்பர். உடையவரான இராமானுஜர் நூற்றி இருபது ஆண்டுகள் வாழ்ந் தவர். இதற்கு வழிகாட்டும் நூல் திருமந்திரம்.

வடமொழியில் அமைந்த பதஞ்சலி யோக சூத்திரத்திற்கு நிகராகத் தமிழில் எழுதப்பட்ட யோகநூல் திருமந்திரம். நீண்டகாலம் வாழும் நல்ல குழந்தைகளைப் பெற வழி சொல்லும் போக நூல் திருமந்திரம். சக்கரங்கள் மூலம் வழிபாடு செய்யும் முறைகளை விளக்கிய தந்திர நூல் திருமந்திரம். சைவ சித்தாந்தம் உரைக்கும் சாத்திர நூல் திருமந்திரம். அண்டங்களை அளக் கும் அறிவியல் நூல் திருமந்திரம். மருந்து கொடுக்கும் மருத்துவ நூல் திருமந்திரம். சித்துக் களை விளக்கும் சித்த நூல் திருமந்திரம்.

ஆடவல்லான் நடனத்தின் அரும்பொருளை விளக்குவதால் நாடு புகழ் தத்துவநூல் நாம் பெற்ற திருமந்திரம். காலமெல்லாம் அழியாத காயசித்தி காட்டுவதால் சீலமிக்க வாழ்வருளும் தெய்வநூல் திருமந்திரம்.

இது சாத்திர, தோத்திரத் தத்துவ சித்திக் கடல். இக்கடலில் ஆயிரக்கணக்கான முத்துக்கள் கிடக்கின்றன. தமிழ்க்கடலில் நீந்துகின்ற தகுதி மிக்க சான்றோர்கள் திருமந்திரக் கடலில் சிறப் பாக நீந்திக் கைக்குக் கிடைத்த முத்துக்களைக் கருத்தில் வைத்துக் கடைத்தேறலாம்.

சித்தர் போற்றும் திருமூலர் நமக்காகக் காத் திருக்கிறார். ''தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே'' திருமந்திரக் கடலில் மூழ்கி முத்தெடுப்போம். ●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 ஆகஸ்ட் 2019 இதழ் : 7

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ. 265/–
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/–
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

முக்கூட்டு பஜ்ஜி

தேவையான பொருள்கள் : *அரிசி – 1 1/2 கப், உளுத்தம் பருப்பு – 1/2 கப், துவரம் பருப்பு – 1 கப், கடலைப் பருப்பு – 1 கப், எண்ணெய் பொறிப்பதற்கு, காய்கறிகள் விருப்பப்படி சேர்த்துக் கொள்ளலாம்.*

செய்முறை :

1. அரிசி, பருப்புகளைக் கல் நீக்கி, மிஷினில் நைசாக அரைக்கவும்.
2. தேவையான அளவு இந்த மாவு எடுத்து இதில் உப்பு, பெருங் காயத்தூள், காரத்தூள் சேர்த்துப் பஜ்ஜி மாவுப் பதமாய்க் கரைக்கவும்.
3. இதில் கத்திரி, வாழை, பெரிய வெங் காயம், உருளைக்கிழங்கு என விரும்பின காய்கறிகளைப் பெரிதாக வட்டமாய் நறுக்கி, மாவில் முழுக்கி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்கவும்.

நல்ல மொறுமொறுப்பான 'முக்கூட்டு பஜ்ஜி' தயார்!

– கீதாகண்ணன்,
திருச்சி


தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised Toned Milk
500ml
Sakthi
MILK
SPECIAL
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

ஆன்மிகம்



கண்ணொளி அருளும் எம்பார்


"பகவத் பக்தியின் எல்லை நிலமே ஆசார்ய பக்தி" என்பது ஸ்ரீ வைஷ்ணவர்களின் முக்கியக் கொள்கைகளில் ஒன்றாகும். இப் பூவுலகில், நம்மாழ்வாரின் சீடராக விளங்கிய மதுரகவியாழ்வார் தொடங்கி, இன்று வரையிலும் தொடரும் குருசிஷ்யர் உறவு முறை அலாதியான ஒன்றாகும்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் போற்றிப் பாடாமல், "தேவும் மற்றறியேன் குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்று தம்முடைய குருவாகிய நம்மாழ்வாரின் புகழை மட்டுமே போற்றி ஒரே ஒரு பதிகம் பாடிய மதுர கவியார் ஆழ்வார்களின் வரிசையில் சேர்த்துக் கொண்டாடப்படுகின்றார்.

ஸ்ரீராமாநுஜரின் பெருமைகளை விளக்கித் திருவரங்கத்தமுதனார் பாடிய "ஸ்ரீராமாநுஜ நூற்றந்தாதி" திவ்வியப் பிரபந்தத்தின் வரிசையில் சேர்க்கப்பட்டது.

இவ்வகையில், ஸ்ரீராமாநுஜரின் சிறிய தாயாரின் திருமகனாக அவ தரித்துப் பிற்காலத்தில் அவருக்கே சீடராக விளங்கித் தமது குருபக்தியின் செழுமையால் பெரும் புகழும் மெய்ஞ்ஞானமும் பெற்ற எம்பாரைப் பற்றிக் கொஞ்சம் அறிந்து கொள்ள முயல்வோம்.

எம்பெருமானார் ஸ்ரீராமாநுஜரைப் பார்த்த கணத்திலேயே "ஆம் முதல்வன் இவன்" என்று கூறியவர் ஸ்ரீஆளவந்தார். தமக்குப் பிறகு வைணவ உலகின் தலைமைப் பொறுப்பை ஏற்று ஸ்ரீராமாநுஜரே அனைவரையும் வழிநடத்துவார் என்பதையே "ஆம் முதல்வன் இவன்" என்றுகூறி அருளிய ஸ்ரீ ஆள்வந்தாரு டைய முக்கியச் சீடர்களுள் ஒருவர் பெரிய திருமலைநம்பி என்பவராவார். இவர் திருப்பதி திருமலையில் தங்கி யிருந்து திருவேங்கடமுடையானுக்குத்



எஸ். ஸ்ரீதுரை



ஸ்ரீபெரியதிருமலை நம்பியும்
உள்ளங்கைகொணர்ந்த நாயனாரும்

தொண்டுபுரிந்து வந்தார். இவரிடம்தான் பிற்காலத்தில் ஸ்ரீராமாநுஜர் ராமாயணத்தின் முழுப் பொருளையும் கேட்டு அறிந்தார்.

அப்பெரியதிருமலை நம்பிகளுக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். ஒருவர் பூமிப் பிராட்டியார். மற்றொருவர் பெரியபிராட்டியார். பூமிப்பிராட்டியாருக்கும் ஸ்ரீபெரும்பூதூரைச் சேர்ந்த ஆசூரி கேசவர் என்பவர்க்கும் அவதரித்த திருமகனார் ஸ்ரீராமாநுஜர் ஆவார்.

பெரியபிராட்டியாருக்கும், மதுரமங்கலம் கமலநாராயணபட்டர் என்பவருக்கும் பிறந்தவரே எம்பார் ஆவார். இவர் பிறந்ததை அறிந்ததும், விரைந்து வந்த பெரியதிருமலைநம்பி, இவருக்கு ‘‘கோவிந்த பட்டர்’’ என்று பெயர்சூட்டி ஆசீர் வதித்தார்.

ஸ்ரீராமாநுஜர், கோவிந்தபட்டர் இருவருமே தொடக்கத்தில் யாதவப் பிரகாசரிடம் சீடர்களாக இருந்தனர். ஸ்ரீமந்நாராயணனின் திருக்கண்களைப் பற்றிய உவமைக்கு யாதவப் பிரகாசர் கூறிய விளக்கத்தை ஸ்ரீராமாநுஜர் மறுத்துரைத்ததால் இருவருக்கும் கருத்து வேறுபாடு எழுந்தது. இதனால் ஸ்ரீராமாநுஜரை வெறுக்கத் தொடங்கிய யாதவப் பிரகாசர், வடதேச யாத்திரை செல்லும்போது, அவரை கங்கையில் மூழ்கடித்து விட முடிவெடுத்தார். பயணத்தின் நடுவில் இதனை அறிந்துகொண்ட கோவிந்தபட்டர், ஸ்ரீராமாநுஜரை எச்சரிக்கை செய்து காஞ்சிபுரத்திற்குத் திருப்பி அனுப்பிவைத்தார். வனாந்திரத்தில் வழி தெரியாமல் திகைத்த ஸ்ரீராமாநுஜருக்கு ஸ்ரீவரதராஜனும் ஸ்ரீபெருந்தேவித்தாயாரும் வேடன் வேடுவச்சியாகத் தோன்றி வழிகாட்டினர்.

யாதவப் பிரகாசரோடு வடதேச யாத்திரையைத் தொடர்ந்த கோவிந்தபட்டர், காசியில் பிரவகிக்கும் கங்கைநதியில் நீராடியபோது அவருக்குச் சிவலிங்கம் ஒன்று கிடைத்தது. இதைக் கண்ட யாதவப் பிரகாசர், ‘‘உமக்குச் சிவபெருமான் அருள் கிடைத்துள்ளது. இனி நீர் ‘‘உள்ளங்கை கொணர்ந்த நாயனார்’’ என்று அழைக்கப்படுவீர்’’ என்று கூறினார்.


இதைக் கேட்டு வைஷ்ணவராகிய கோவிந்த பட்டர் சைவராக மாறிவிட்டார். காசியிலிருந்து திரும்பியவர் அந்தச் சிவலிங்கத்தைத் தமது சொந்த ஊரான மதுரமங்கலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டுவந்தார். பின்னர் ஒருமுறை அவரது கனவில் திருக்காளத்தியப்பர் தோன்றி அழைத்ததால் காளஹஸ்திக்குச் சென்று அங்கேயே தங்கி சிவபெருமானைப் பூசித்து வரத் தொடங்கினார்.

மறந்தும் புறம்தொழா மாந்தர் என்று பெயர் பெற்ற வீரவைஷ்ணவக் குலத்தில் பிறந்தவரான கோவிந்தபட்டர் இவ்விதம் சிவவழிபாட்டில் ஈடுபடுவது குறித்துக் கவலைப்பட்ட ஸ்ரீராமாநுஜர் பெரியதிருமலைநம்பிகளுக்குத் தகவல் அனுப்பினார்.


அதன்பேரில் காளஹஸ்திக்குச் சென்று ஓரிடத்தில் தங்கிய பெரியதிருமலைநம்பிகள், உள்ளங்கைகொணர்ந்த நாயனாராகிய கோவிந்தர் சிவபூஜைக்காக மலர்கள் சேகரிக்கும் தோட்டத்தில் இருந்துகொண்டு ஸ்ரீஆளவந்தாரின் ஸ்தோத்திரங்களையும், ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களையும் அவர் காதில் ஒலிக்குமாறு தினந்தோறும் பாடிவந்தார். முதலில் திரும்பிப் பார்க்காத கோவிந்தரின் மனதில் நாளடைவில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

ஒருநாள், ‘‘தேவும் எப்பொருளும் படைக்கப்

ஸ்ரீபெரியதிருமலை நம்பியிடம்
இராமாநுஜர் இராமாயணம்
விளக்கம் கேட்டல்



பூவில் நன்முகனைப் படத்த தேவன் எம்பெரு மானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே?'' என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரத்தைப் பெரியதிருமலைநம்பி பாட, ''தகாது, தகாது...'' என்று கூறியபடியே அவரிடம் ஓடிவந்து அடிபணிந்தார் கோவிந்தர்.


ஸ்ரீரங்கநாதர்


ஸ்ரீராமாநுஜர்

இவ்விதம் மனமாற்றம் கண்டு வைஷ்ணவநெறிக்குத் திரும்பிய கோவிந்தரைத் தம் முடன் திருமலைக்கு அழைத் துச் சென்று உபதேசங்கள் செய்துவந்த பெரியதிருமலை நம்பி, தம்மிடம் இராமா யணத்தின் பொருள் கேட்க வந்த ஸ்ரீராமானுஜரிடம் அவரை ஒப்படைத்தார். ஸ்ரீராமாநுஜ ருடன் காஞ்சிபுரம் சென்ற கோவிந்தர், பெரியதிருமலைநம்பியைப் பிரிந்த வருத்தத்தினால் உடல் மெலிய, அவரைத் திரு மலைக்கே அனுப்பிவைத்தார் ஸ்ரீராமாநுஜர்.

ஆனால் பெரியதிருமலைநம்பியோ, ''விற்ற பசுவுக்குப் புல்லிடுவார் யார்?'' என்று கேட்டு, ஸ்ரீராமாநுஜரிடமே சென்று இருக்கும்படி கோவிந் தருக்கு அறிவுரை கூறித் திருப்பி அனுப்பி விட்டார். கோவிந்தருக்கு உரிய குரு ஸ்ரீராமாநுஜர் தான் என்று உறுதியாக அவர் நம்பியதால் இவ்விதம் செய்தார்.

தம்மிடம் மீண்டும் வந்து சேர்ந்த கோவிந்த பட்டரை மிகவும் அன்புடன் பார்த்துக் கொண்ட ஸ்ரீராமாநுஜர், தாம் காஞ்சியிலிருந்து ஸ்ரீரங்கம் சென்றபோது அவரையும் அழைத்துச் சென்றார்.

ஸ்ரீரங்கத்தில் இருக்கும் சமயத்தில், கோவிந்தபட்டரின் மனப்பக்குவத்தை அறிந்த ஸ்ரீ ராமாநுஜர் அவருக்கு சன்னியாச தீட்சை அளித் துத் தம்முடைய சிறப்புப் பெயராகிய எம்பெரு மானார் என்பதையே அவருக்குச் சூட்டினார்.

ஆனால், ஆசாரியரின் பெயரைத் தாம் ஏற்பதற்கு அவர் தயங்கியதால், எம்பெருமானார் என்பதன் முற்பகுதி மற்றும் பிற்பகுதி இரண்டை யும் இணைத்து எம்பார் என்ற தீட்சாநாமத்தை அருளினார் ஸ்ரீராமாநுஜர். இவ்விதம், தம்முடைய பெரிய தாயாரின் திருப்புதல்வராகிய ஸ்ரீராமாநு ஜரையே குருவாக ஏற்றுக்கொண்ட கோவிந்தபட்டர், துறவுபூண்ட பின் எம்பார் என்று அழைக் கப்பட்டார்.

எம்பாரின் மகிமையை அனைவருக்கும் உணர்த்த விரும்பிய ஸ்ரீராமாநுஜர், ஓர் இருண்ட அறைக்குள் சிறிய ஊசி ஒன்றை வைத்துவிட்டு அதை எடுத்துவரும்படித் தம் சீடர்களிடம் கூறினார். கையில் விளக்குகளை ஏந்திக் கொண்டு உள்ளே சென்று தேடிய சீடர்கள் ஒருவராலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், எம்பாரோ கையில் விளக்கு ஏதும் எடுத்துக் கொள்ளாமல், அந்த அறையினுள் சென்று நிமிடநேரத்தில் அந்த ஊசியை எடுத்து வந்ததுடன், இதைத் தவிர வேறு எதுவும் அவ்வறையில் இல்லை என்று கூறி னாராம். பார்வைக் கூர்மையுடன் மன ஒருமைப் பாடும் கொண்டவர் எம்பார் என்பதற்கு இந் நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும்.

மதுரமங்கலத்தில் உள்ள ஸ்ரீகமலவல்லி ஸமேத ஸ்ரீவைகுண்டப்பெருமாள் திருக்கோயிலில் எம்பார் அவதரித்த புனர்வஸு நட்சத்திர நாட் களில் அவருடைய அர்ச்சாவதாரத் திருமேனிக் குத் திருமஞ்சனம் (அபிஷேகம்) செய்த தீர்த் தத்தை அருந்துபவர்களுக்குக் கண்பார்வைக் குறைபாடுகள் நீங்குகின்றன. அந்தத் திருமஞ் சனத்தைத் தரிசிக்க நாடு முழுவதிலிருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் வருகை தருகின்றார் கள். (சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் சாலையில் சுங்குவார்சத்திரம் அருகில் உள்ளது மதுரமங்கலம்)

ஸ்ரீராமாநுஜரின் முக்திக்குப் பின்பு வைண வத் தலைமை ஏற்ற எம்பார், நாளடைவில் ஸ்ரீ கூரத்தாழ்வானின் புதல்வரான பட்டரிடம் ஸ்ரீரங்கம் திருக்கோயில் நிர்வாகத்தையும் ஸ்ரீவைஷ்ணவத் தலைமைப் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டு முக்தியடைந்தார். ●

கட்டுரை

குடிமக்களா? குடிபடைகளா?

"மக்களாட்சி மற்றும் ஆளுகை வடகிழக்கு மாநிலங்களில்" என்பது ஒரு மாநாட்டிற்குத் தலைப்பு. இந்த மாநாடு நடந்த இடம் சிக்கிம் மாநிலம். நடத்தியது சிக்கிம் மாநில மத்தியப் பல்கலைக்கழகம்.

வடகிழக்கு மாநிலங்களின் அரசியல் மற்றும் ஆளுகை பற்றி ஆய்வு செய்தவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர். இதில் எனக்கும் ஓர் அழைப்பு இருந்தது. எதற்கென்றால், மக்களாட்சி மற்றும் ஆளுமை என்ற தலைப்பில் கோட்பாடுகள் பற்றியும் உலகத்தில் இவை இரண்டின் நிலை என்ன என்பது பற்றி உரையாற்றிட.

ஏப்ரல் மாதம் 4, 5–ஆம் தேதிகளில் குளுமைச் சூழலில் இந்த மாநாடு நடத்தப்பட்டது. கருத்தாளர்கள் தங்கள் அனல்பறக்கும் கருத்துக்களின் மூலம் சூழலையே வெப்பமாக்கிவிட்டனர். என்னைப் போன்றவர்களுக்கு அது மிகவும் வித்தியாசமாகவே இருந்தது. அவர்கள் அனைவரும் வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த அறிஞர்கள்.

பேச்சில் அவர்கள் முன்வைத்த கருத்தாக்கங்கள் என் இதயத்தைக் கனக்கச் செய்தன. அவர்கள் கூறிய கருத்துக்களைச் செவிமடுத்துக் கேட்கையில் நமக்கு என்ன தோன்றும் என்றால், இந்தியாவில் எத்தனை இந்தியாக்கள் இருக்கின்றன, அஸ்ஸாமில் எத்தனை அஸ்ஸாம்கள் இருக்கின்றன, காஷ்மீரில் எத்தனை காஷ்மீர்கள் இருக்கின்றன, நாகாலாந்தில் எத்தனை நாகாலாந்துகள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தாலும் மொழிகளைக் கடந்த பல்வேறு வித்தியாசங்களை, வேறுபாடுகளைக் கொண்டவையாக பல மாநிலங்கள் இந்தியாவில் உள்ளன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.



இந்தியா என்ற நாட்டில் மாநிலங்கள் என்பது ஒரு நிர்வாகச் சீர்திருத்தம் மட்டுமே. ஒரு மாநிலம் அந்த மாநிலத்தில் நிலவிடும் வேறுபாடுகளையும், வித்தியாசங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் கணக்கிட்டு எல்லா தரப்பு மக்களின் மேம்பாட்டுக்காகச் செயல்பட வேண்டும்.

இந்தியா என்ற நாடு

டாக்டர் க. பழனித்துரை



வித்தியாசங்களைக் கொண்ட நாடு. வித்தியாசங்கள் மொழியில், கலாச்சாரத்தில், பண்பாட்டில், உடையில், உணவில், சூழலில் இருப்பது இந்தியாவின் சிறப்பு. இந்தச் சிறப்பு உலகில் எந்த நாட்டிலுமில்லாதது.

சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் கூறுவது போல் பன்முகத்தைக் கொண்ட நாட்டில் பல மதங்களைச் சேர்ந்தவர்களும், பல கலாச்சாரத்தைச் சார்ந்தவர்களும், பல மொழி பேசும் மக்களும் இணைந்து வாழும் தன்மையில்தான் அந்த நாட்டின் பெருமையும் உயர்வும் இருக்கிறது.

அதே நேரத்தில் இந்தியாவில் உள்ள ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் நமக்குப் பெருமை சேர்ப்பது அல்ல. பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக ஏற்றத்தாழ்வு, சாதியப் பாகுபாடு இவை அனைத்தும் நம்மைச் சிறுமைப்படுத்தும் செயல்களாகும்.

எனவே இவ்வளவு வேறுபாடுகளையும், வித்தியாசங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் கொண்ட நாடு மக்களாட்சியில் இருந்து செயல்படுவதே மிகப்பெரிய சாதனைதான். எனவே வேற்றுமைகளைக் களைந்து, ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி, அனைவரும் சமமாக ஒருவரையொருவர் மதித்து வாழும் சமுதாயமாக இந்தியாவை மாற்றுவதுதான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கடமை.

இதற்கு ஒருங்கிணைந்து செயல்படுவதுதான் அரசியல் கட்சிகளின் கடமை மற்றும் பொறுப்பு. ஆனால் இந்திய நாட்டில் 70 ஆண்டுகால மக்களாட்சி அரசியலில், நம்முடைய அரசியல் கட்சிகள் மேம்பாட்டு அரசியலை முன்னெடுத்து அரசியல் செய்யாததால் ஜாதியையும், மதத்தையும், மொழியையும் வைத்து மீண்டும் மீண்டும் அரசியல் செய்ததன் விளைவு இன்று ஒரு வெறுப்பு அரசியலைச் சந்தித்துக் கொண்டுள்ளனர்.

ஒரு சாதியை இன்னொரு சாதியுடன் மோதவிடுதல், ஒரு மதத்தை இன்னொரு மதத்துடன் மோதவிடுதல், ஒரு பிராந்தியத்தை இன்னொரு பிராந்தியத்துடன் மோதவிட்டு அரசியல் செய்து மக்களைக் குறிப்பாக ஏழைகளை வஞ்சித்து விட்டனர்.

இந்தச் சூழலில், ஒருவரை நாம் தவிர்க்க முடியாது. அது மகாத்மா காந்தி என்னும் மிகப்பெரிய ஆளுமை. அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்து காலடி வைத்த நாளிலிருந்து மக்கள் மத்தியல் எழுச்சி நாயகனாகப் பிரகாசிக்க ஆரம்பித்தார்.

காரணம் யாரிடமும் இல்லாத ஏழைகளைக் கவரும் தன்மை கொண்டு ஆளுமையாக விளங்கிய காரணத்தால், இந்திய சமூகத்தில் இருந்த மத, சாதிய, பிராந்திய வித்தியாசங்களைக் கடந்து மக்கள் காந்தியை நோக்கிப் பயணிக்க



ஆரம்பித்தனர். அதிலும் குறிப்பாக ஏழைகள் எல்லையற்ற அளவில் காந்தியை நோக்கிக் குவியத் தொடங்கினர்.

காந்தி அந்த மக்களை மிகப்பெரிய செயல்பாடுகளுக்கு உயரிய வாழ்க்கை விழுமியங்களை உருவாக்கிக் கடைப்பிடிக்க வைத்துத் தயார் செய்தார். அது தேசத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல. விடுதலையைத் தாண்டிய புதிய இந்தியாவை உருவாக்க மக்களை அச்சமற்றவர்களாகவும், தியாக சீலர்களாகவும், கடின உழைப்புக்கும், உயர் தர்ம நெறிகளுடன் எளிய வாழ்க்கை வாழ்வதற்கும் தயார் செய்தார். காந்தியின் செயல்பாடுகள் சுதந்திரப் போராட்டத்துடன் நின்றுவிடக் கூடியதாகத் திட்டமிடவில்லை.

சுதந்திரம் கிடைத்துவிடும் என்பதில் நம்பிக்கையுடன் புதிய இந்தியாவை உருவாக்குவதில்தான் அவருடைய அனைத்துத் திட்டங்களும் இருந்தன. மகாத்மா காந்தி புதிய இந்தியாவைப் படைக்க மக்கள் நிறுவனங்களையும், அமைப்புக்களையும் வலுப்படுத்தி ஏழை எளிய மக்களை அதிகாரப்படுத்தி, அரசாங்கத்தை மக்களுக்குக் கடமைப்பட்டவர்களாக உருவாக்க முனைந்தார்.

ஆனால் உலகம் முழுவதும் சுதந்திரம் அடைந்த சமூகங்கள் பெரிய அரசாங்கத்தின் மூலம் மிக வேகமாகச் சமூக பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையில், மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றி நம் தலைவர்களும் மேற்கத்தியமயம், தொழில்மயம், நவீன மயம் என்ற சூழலுக்கு நம் நாட்டை இட்டுச் சென்றனர். இவை அத்தனையும் மகாத்மா கண்ட கிராம ராஜ்யத்திற்கு முரண்பட்ட ஒன்றாகும்.

இந்த அணுகுமுறை ஒரு பெரிய அரசாங்கத்தைக் கட்டமைத்து அதன் மூலமாகச் சமூகத்திற்குத் தேவையான சமூக பொருளாதார மாற்றங்களை அரசு அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மூலமாகக் கொண்டுவருதல் என்பதில் நம்பிக்கை வைத்துச் செயல்பட ஆரம்பித்தனர்.

இதன் விளைவு மக்கள் வளர்ச்சிச் செயல்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் ஆளுகைச் செயல்பாடுகள் அனைத்திலிருந்து தூரத்திற்குத் தளப்பட்டு, அரசாங்கம் கொண்டு வரும் நலத்திட்டங்களின் பயனாளிகளாகத் தயார்படுத்தப் பட்டுவிட்டனர். காந்தியால் இந்தியாவுக்கு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட பல மக்கள் அமைப்புக்களை அரசாங்கத்தின் ஆளுகைக்குக் கொண்டுவந்து நாளடைவில் நீர்த்துப்போகச் செய்து விட்டனர்.

மேற்கத்தியப் பாதையில் அரசு ஆளுகை, நிர்வாகம், மேம்பாடு என்பது அவர்களுக்குச் சாத்தியப்பட்டது எதனால் என்றால், அவர்களிடம் இருந்த அறிவு, ஆற்றல் இவற்றின் மூலம் ஒரு சுரண்டல் முறைச் செயல்பாடுகளைக் கட்டமைக்கப்பட்டதால்தான். அந்த முறை இந்தியாவில் புகுத்தப்பட்டதால், அரசு இயந்திரத்தைப் பற்றிப் பிடிக்கத் தெரிந்தவர்களுக்கு அரசாங்கம் காமதேனுவாக விளங்கியது. அரசாங்கத்திலிருந்து விலகி அதைப் பயன் படுத்தத் தெரியாதவர்களின் நிலைமை மிகவும் தாழ்மையானதாகவே இருந்து வருகின்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 72 ஆண்டுக் காலத்தில் இந்தியா முன்னேறவில்லை என்று சொன்னால் அது ஒரு வடிகட்டிய பொய். அரசாங்கங்கள் மக்கள் மீது குறிப்பாக ஏழைகள் மீது எந்த அக்கறையும் இல்லாதன என்று சொன்னால் அதுவும் சுத்தப் பொய்.

72 ஆண்டுக் காலத்தில் மக்களாட்சிக்கான ஆளுகை மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்கள் உருவாக்கப் பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதிலும் எந்த மாறுபட்ட கருத்தும்

இருக்க முடியாது. அது மட்டுமல்ல, இந்த 72 ஆண்டுக் கால மக்களாட்சியில் வறுமைக்குறைப்புக்குத் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளன என்பதை யாரும் மறுக்க இயலாது.


காந்திஜி

இன்று இந்தியாவில் 26% மக்கள் மட்டும்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதுவும் அரசாங்கத்தால் சாத்தியமாயிருக்கின்றது என்பதையும் நாம் எவரும் மறுக்க இயலாது. பிரச்சினை எங்கே இருக்கின்றது என்றால் வளர்ச்சி, மக்களுக்கான மேம்பாடு என்பதில் அரசு செய்த செயல்பாடுகளில் விளைந்த நன்மையை எல்லோருக்குமாகப் பங்கிடவில்லை.


டாக்டர் ராதாகிருஷ்ணன்

ஏழைகளின் மேம்பாட்டுக்காகத் திட்டமிட்டு ஒதுக்கப்பட்ட பணமும் ஏழைகளுக்கு வந்து சேர்வது கிடையாது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். வித்தியாசங்களுடன், வேறுபாடுகளுடன், ஏற்றத் தாழ்வுகளுடன் வாழும் இந்திய சமூகத்திற்கு மத்திய, மாநில அரசுகளால் மட்டுமே சம நிலையில் வளர்ச்சியையும் மேம்பாட்டையும் கொண்டு வர முடியாது என்பதை உணர்ந்துதான் மக்களுக்குப் பக்கத்தில் ஒரு மக்கள் அரசாங்கத்தை அரசியல் சாசனச் சட்டத்தைத் திருத்தி உருவாக்கினார்கள். அது மட்டுமல்ல, ஏழைகளுக்கான வாழ்வாதார உரிமைகளையெல்லாம் சட்டங்களாக்கி அதற்கான நிதி ஆதாரங்களையும் உருவாக்கித் தந்தார்கள்.

இவை அனைத்தும் செய்த பிறகும் கூட ஏழை மக்கள் பிரச்சினைகள் மிகப் பெரிய அளவில் குறைந்திடவில்லை. இதற்கான ஒரு வாய்ப்பைச் சட்ட ரீதியாக உருவாக்கித் தந்தார்கள். அதுதான் கிராமசபை. அந்த கிராமசபை மூலமாக அனைத்து உரிமைகளும் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் வந்திருப்பதைப் புரிந்துகொண்டு, மக்கள் அதிகாரம் பெற்ற கிராமசபை உறுப்பினர்களாகச் செயல்பட்டு மூன்று அரசாங்கங்களையும் மக்களுக்குப் பணி செய்ய பணித்திட முடியும். இதற்கு மக்களாட்சியில் எந்தக் குறுக்கு வழியும் கிடையாது. ஒரே வழி மக்களைத் தயார் செய்வதுதான்.


இன்றைக்கு இந்தப் பணியை எளிதில் செய்திட முடியும். இதை ஒரு விரிவாக்கப் பணியாக இந்தியாவிலுள்ள 914 பல்கலைக் கழகங்களும், 40000 கல்லூரிகளும், 11000 ஆராய்ச்சி நிறுவனங்களும் வளர்ந்துவிட்ட ஊடகங்களுடன் ஓர் ஆண்டு செய்தால் மிகப்பெரிய மாற்றத்தை அடித்தட்டு மக்களிடம் ஏற்படுத்திவிட முடியும்.


அப்படிச் செய்வதன் மூலம் பொது மக்கள் எவ்வளவு ஏழ்மையில் இருந்தாலும் அவர்கள் குடிமக்களாகத் தங்கள் பங்களிப்பைச் செய்து மரியாதையுடைய, மதிக்கத்தக்க மானுட வாழ்க்கையை வாழப் போராட ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் குடிபடைகள் போல் உரிமைகளற்ற பயனாளி வாழ்க்கையை, மனுதாரர் வாழ்க்கையை வாழ முயற்சிக்க மாட்டார்கள்.

அந்தச் செய்தியைத்தான் இந்தக் கருத்தரங்கம் தந்தது. இதற்கு முதலில் உள்ளாட்சி வலுப்பட வேண்டும். இரண்டு, மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும். மூன்று, அறிவு ஜீவிகளும் ஊடகங்களும் தொடர்ந்து மக்களிடம் விழிப்புணர்வு இயக்கங்களை உருவாக்கிச் செயல்பட்டு ஒரு பங்கேற்பு ஆளுமை அரசியல் மற்றும் மேம்பாடு செய்திட முனைந்திட வேண்டும். இதற்கான புதிய தலைமைத்துவத்தையும் தலைவர்களையும் இளைஞர்கள் மத்தியில் உருவாக்கிட வேண்டும். ●

பயணக் கட்டுரை

அரிசோனாவில் தன்னிறைவுபெற்ற இரண்டாவது உலகம்





ஜெயா வெங்கட்ராமன்

பயோஸ்பியர்.2 என்பது இப்புவியின் தட்பவெப்ப மற்றும் மண்ணின் இயல்புகளை ஆய்வு செய்யும் ஓர் அறிவியல் கேந்திரம். (ஸ்பியர் என்பதில் Atmosphere, Hydrosphere, Cryosphere, Geosphere, Magnatosphere போன்றவையும் அடங்கும்). இந்த அறிவியல் ஆய்வுக்கூடம் அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள டுசான் (Tucson) என்னும் நகரத்திலிருந்து 30 நிமிடங்களில் வடமேற்கு திசையிலும், பீனிக்ஸ் நகரத்திலிருந்து தென்கிழக்கு திசையில் 90 நிமிடங்களிலும் காரில் பயணித்தால் Santa Catilina மலையடிவாரத்தில் உள்ள இந்த அற்புதமான ஆய்வுக் கூடத்தை அடையலாம்.

பயோஸ்பியர்.2 என்பதைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முன், பயோஸ்பியர்.1 என்பது நாம் வாழும் உலகம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். நீர், காற்று, நெருப்பு (சூரியஒளி), மண் (பூமி) ஆகியவற்றினால் தன்னிறைவு பெற்றது இந்தப் பூமி. இவை மனிதன் உயிர் வாழ மிகவும் அவசியமானவை. மனிதன் நிலவு, செவ்வாய் கிரகங்களுக்குச் சென்று வாழும்நிலை ஏற்பட்டால், அவன் அங்கே வாழ பூமியின் தட்பவெப்ப நிலைகளை அங்கு உருவாக்கினால் மட்டுமே இது சாத்தியம்.

நிலவில் மனிதன் காலடி வைத்துவிட்டான். ஆனால் அங்கு


மனிதன் வாழத் தேவையான நீரோ, காற்றோ இல்லை என்பது நிரூபண மாகிவிட்டது. மனிதனை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பும் முயற்சி 2030–இல் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்த ஆய்வுக்கூடத்தில் ஓர் அறிவிப்பு காணப்படுகிறது. அப்படி ஒரு நிலை வரும்போது இந்த ஆய்வு பயன் படலாம்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000 அடி உயரத்தில் இது அமைந் துள்ளது. 1987–இல் ஆரம்பித்த கட்டு மானப் பணி, 1991–இல் நிறைவு பெற்றது. 40 ஏக்கர் பரப்பளவில் 3.14 ஏக்கரில் முழுவதும் கண்ணாடி, ஸ்டீல் பிரேம்களினால் ஆன சோத னைக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. 90 சதவிகிதம் காற்று புக முடியாத அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது . இதற்கு ஆன செலவு 200 மில்லியன் அமெரிக்க டாலர். இதை நிறுவிய "Space Biosphere Venture" இதனை நிர்வகிக்க ஒரு குழுவையும் அமைத்து இதற்கு 2 என்று பெயரிட்டது. (Biosphere.2 என்றால் தன்னிறைவு பெற்ற இரண்டாவது உலகம் என்று பொருள்).

மனிதர்கள், உயிரினங்கள், செடி கொடிகள், மரங்கள் வாழத் தகுதி யான சூழலை இதற்குள் சிருஷ்டி செய்துள்ளனர். இவை அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன என்பதை நினைவில் கொண்டு, பூமியின் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வண்ணம் இதனை அமைத்துள்ளனர்.

இந்தக் கண்ணாடி மாளிகைக்குள் அப்படி என்னதான் இருக்கிறது என்பதைவிட, என்ன இல்லை என்று சொல்வதுதான் கடினம். மனிதன் விண்வெளியில் வேற்றுக் கோளில் வாழத் தேவையான ஒரு காலனி யையே இங்கு அமைத்துள்ளனர். இந்த வளாகத்தில் ஏழு கண்ணாடி மாளிகைகள் உள்ளன அவற்றில் –


1. 1900 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு மழை மரக்காடு. மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தர வனக் காடு போன்றது. இதன் உள்ளே வாழை, பப்பாளி, மூங்கில் மரங் களுடன் 60 அடி உயரத்தில் வான ளாவிய மரங்கள். காப்பி, மிளகு, செம்பருத்தி முதலிய நமக்கு மிகவும் அறிமுகமானவற்றுடன் பெயர் தெரியாத மரம், செடி கொடிகளும் ஏராளம். இதை ஒரு மினி அமேசான் காடு எனலாம். ஒரு கண்ணாடிக் கூண்டுக்குள் மண் இல்லாமல் தக்காளி, உரு ளைக்கிழங்கு முதலிய பயிர்களை, காய், கிழங்குகளுடன் காண முடிந் தது ஒரு வியப்பான செய்தி!
2. 850 சதுர மீட்டரில் ஓர் உப்புக் கடல். இதில் மீன்கள், பவளப் பாறைகள், கடல் பாசிகள் எல் லாமே உள்ளன.
3. 450 சதுர மீட்டரில் சதுப்பு நிலம் (Mangrove Wet Land). இங்குத் தண் ணீரில் வளரும் மரங்கள், செடி கொடிகளைக் காண முடிகிறது. (அவை தண்ணீரில் மிதக்கின்றன).
4. 1300 சதுர மீட்டரில் புல்வெளிகள் (Savannah Grass Lands).
5. 1400 சதுர மீட்டரில் பாலைவனம் (Fog Desert). இது சஹாரா, தார்


கண்ணாடி மாளிகையில் வளரும் மரங்கள்

பாலைவனங்கள் போன்ற மணல் வெளி இல்லை. வெறும் கற்களும், பாறைகளும் நிரம்பிய பாலைநிலம். அரிசோனா முழுவதுமே இந்தப் பாலைநிலம்தான்.

6. 2500 சதுர மீட்டரில் உணவுப் பிரச்னையைத் தீர்க்க விவசாய நிலங்கள். ஆய்வுகூடம், பட்டறை, குடியிருப்புகள், சமையலறை, உணவுக்கூடம் என எல்லாமே உண்டு. விவசாய நிலத்தில் வாழைப்பழம், பப்பாளி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பீட்ரூட், நிலக் கடலை, அவரை, பீன்ஸ், நெல், கோதுமை போன்றவையும் விளை விக்கப்பட்டன.

அத்துடன் வெளிக்காற்று உள்ளே புகாத வண்ணம் ஆய்வுக்கூடம் (Glass Frame Panels) 6500 ஜன்னல்கள், கண்ணாடிக் கூண்டுக்குள் அமைக்கப்பட்டிருப்பதால், தங்கு தடையின்றி, சூரியஒளி, மின்சாரம் கிடைக்கிறது. பகல் நேரத்தில் சூரிய வெப்பத்தினால் ஏற்படும் கதிர்வீச்சுக் காரணமாகக் காற்று சூடாக்கி, கடுமையான குளிரால் சுருங்கி, கண்ணாடிகள் உடைந்துவிடாமல் இருக்க ஒரு நீண்ட சுரங்கப் பாதை 'லங்' என்கிற கூடத்திற்கு இட்டுச் செல்கிறது. குழாய் வழியாகச் சூடான தண்ணீர், குளிர்ந்த நீர், இணைப்புக் குழாய்கள் மூலம் சென்று வெப்பக் காற்று, குளிர்காற்று வெளியேற / உள்ளே புகும் வண்ணம் விதானம் சுருங்கி விரிகிறது.


கண்ணாடி மாளிகையில் வளரும் தாவரங்கள்

இந்தச் சோதனைக் கூடத்தில் இரண்டு முறை மட்டுமே ஆய்வுகள் நடைபெற்றன. முதல் சோதனை 1991 செப்டம்பர் 26 அன்று ஆரம்பிக்கப் பட்டு 1993 செப்டம்பர் 26–இல் முடி வுற்றது. ஒரு மருத்துவர், 7 விஞ்ஞானி கள் அடங்கிய குழு இந்த சோதனைக் கூடத்திற்குள் அனுப்பப்பட்டனர். வெளியுலகத் தொடர்பே இல்லாமல் இந்தச் சோதனைக் கூடத்திற்குள் வசித்தனர்.

அவர்களுக்குத் தேவையான வற்றை அவர்களே பயிரிட்டு, உணவு தயாரித்து, சாப்பிட்டு வாழ்ந்தனர். ஆனால், இந்தச் செயற்கை விவசாய முறையில் அவர்களுக்குத் தேவையான உணவில் 83 சதவிகிதம் மட்டுமே கிடைத்தது. போதை தரும் பொருட்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

மனிதர்கள், மிருகங் களின் கழிவுகள் சிறுநீர் உட்பட தண்ணீர்த் தேவைக்காக மறுசுழற்சி முறையில் செய்து கொண் டனர். இதனுள் உள்ள கட லிலிருந்து 70% பிராணவாயுவும், மீதி 20% செடிகொடிகள், மரங்களி லிருந்தும், எஞ்சிய 10% பாலைவனச் செடிகளிலிருந்தும் கிடைக்கின்றன. முதல் வருடத்தில் எட்டுப் பேர்களும் கடுமையான பசியினால் அவதி யுற்றனர். அவர்கள் குறைந்த காலரி உள்ள உணவையே புசித்து வந்ததால், அவர்களது உடலில் ரத்த அழுத்தம், கொழுப்பு முதலிய தொல்லைகள் இல் லாமல் ஆரோக்கியமாகவே வாழ்ந் ததை மருத்துவர் சொன்னார். இரண்டு வருடக் காலத்தில்

அவர்களின் எடை 16% குறைந்ததாம்.

முதல் கட்டச் சோதனையின்போது, நான்கு ஆப்பிரிக்கக் குள்ள ஆடுகள், 35 கோழிகள், 3 காட்டு ஆடுகள், 2 பன்றிகள், ஒரு காட்டுப் பன்றி, திலாப்பியா என்கிற மீன் வகைகளும் வளர்க்கப்பட்டனவாம். Hydro ponic முறையில் ஸ்பிரே செய்யப்பட்டு வளரும் செடிகளை வளர்த்தனர். இது மிகப்பெரிய உலக சாதனை என்றாலும் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும், செயலாற்றினாலும் பல இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. சில வீட்டு விலங்குகளும், பயிர்களும் மடிந்தன. இவை முதலிலேயே எதிர்பார்க்கப்பட்டதுதான்.


விண் எரிகல்

இருப்பினும் இந்தச் சோதனைக் கூடத்திற்குள் இருந்தவர்களுக்கு வெளி உலகுடன் இரண்டு வருடங்களுக்கு தொடர்பே இல்லாமல் இருந்ததால் பல உளவியல் தொடர்பான நோய்களுக்கு ஆளாகினர். மன அழுத்தம், தேவையில்லாத கோபம், நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களுடன் சண்டை போன்றவை நிகழ்ந்தன.

பிராண வாயுவின் அளவு 20.9 சதவிகிதத்திலிருந்து 14.5% ஆகக் குறைந்தது. இரண்டாவது சோதனை முற்றுப்பெறாமல் 7 மாதங்களே நீடித்தன (1994 மார்ச் முதல் செப்டம்பர் வரை). அப்போது, உணவுப் பற்றாக் குறை, பிராணவாயுக் குறைவுகள் எதுவும் ஏற்படவில்லை. இருந்தாலும் ஜூன் 94–இல் பல சொல்ல முடியாத தொல்லைகளினால் இதனை நிர்வகித்து வந்த அமைப்பு கலைக்கப்பட்டது. பெரும் பொறுப்பில் இருந்தவர்கள் பதவி விலகினர். சோதனை முயற்சிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டு, அனாதரவாக நின்றன.

எனவே 1995–இல் கொலம்பியா பல்கலைக்கழகம் இதை நிர்வகிக்க முன் வந்தது, 2003 வரைதான் அது நிர்வகித்தது. அதன் பின்னர் ஒரு பயங்கரமான முடிவு எடுக்கப்பட்டது. இந்த இடம் விலை பேசப்பட்டது! சோதனைகளைக் கைவிட்டு முழுவதையும் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டுக் குடியிருப்புகளாகவும், வணிகக் கேந்திரமாகவும் மாற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த நேரத்தில் 2007–இல் யூனிவர்சிட்டி ஆப் அரிசோனா தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டு நடத்த முன்வந்தது.

2011–இல் முழு சோதனைக்கூடம், கட்டடங்களைப் பராமரிக்கும் முழு உரிமையையும் பெற்றது. (அரிசோனா யூனிவர்சிட்டி என்பது வேறு). இப்போது இது பொதுமக்களுக்கு ஒரு காட்சிக்கூடமாகச் செயல்படுவதுடன் LEO (Landscape Evaluvation Observatory), Lunar Green House-இல் சுழற்சி முறையில் தண்ணீர் சுத்திகரிப்பு, செவ்வாய் கிரகத்தில் எப்படிப் பயிர்களை வளர்ப்பது போன்ற ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆய்வுகள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காவிட்டாலும் கனவில்கூட நினைக்க முடியாத ஆய்வை செயல்படுத்த முயன்ற அவர்கள் மனஉறுதி வியப்பை அளிக்கிறது.

நுழைவு வாயிலில் ஒரு மிகப் பெரிய விண் எரிகல்லும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. நான் இந்தச் சோதனைக்கூடத்தைப் பார்வையிடச் சென்றபோது, மரங்கள் உட்பட முழுவதும் உறை பனியால் மூடியிருந்தது கண்கொள்ளாக் காட்சி. 7 வருடங்களுக்குப் பிறகு இப்படி மூடியிருந்தது இப்போதுதானாம். அருமையான ஆய்வுகூடத்தைக் கண்ட மனநிறைவோடு வெளியில் வந்தோம். ●



வள்ளலார் கூறிய அற்புதமான வாழ்க்கைப் போதனை

1. வாழ்வென்பது உயிர் உள்ளவரை மட்டுமே!
2. தேவைக்குச் செலவிடு.
3. அனுபவிக்கத் தகுந்தன அனுபவி.
4. இயன்றவரை பிறருக்குப் பொருளுதவி செய்.
5. ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடி.
6. இனி, அநேக ஆண்டுகள் வாழப் போவதில்லை.
7. உயிர் போகும்போது, எதுவும் கொண்டு செல்லப் போவதுமில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை.
8. மடிந்த பின் என்ன நடக்கும் என்று குழம்பாதே.
9. உயிர் பிரியத்தான் வாழ்வு. ஒரு நாள் பிரியும். சுற்றம், நட்பு, செல்வம் எல்லாமே பிரிந்துவிடும்.
10. உயிர் உள்ள வரை ஆரோக்கியமாக இரு.
11. உடல்நலம் இழந்து பணம் சேர்க்காதே.
12. உன் குழந்தைகளைப் பேணு. அவர்களிடம் அன்பாய் இரு.
13. அவ்வப்போது பரிசுகள் அளி.
14. குழந்தைகளிடம் அதிகம் எதிர்பாராதே. அடிமையாகவும் ஆகாதே.
15. பெற்றோர்களை மதிக்கும் குழந்தைகள்கூட, பாசமாய் இருந்தாலும், பணி காரணமாகவோ, சூழ்நிலைக் கட்டாயத்தாலோ, உன்னைக் கவனிக்க இயலாமல் தவிர்க்கலாம். புரிந்துகொள்.
16. அதைப்போல, பெற்றோரை மதிக்காத குழந்தைகள், உன் சொத்துப் பங்கீட்டுக்குச் சண்டை போடலாம்.
17. உன் சொத்தைத் தான் அனுபவிக்க, நீ சீக்கிரம் சாக வேண்டுமென வேண்டிக் கொள்ளலாம். பொறுத்துக்கொள்.
18. அவர்கள் உரிமையை மட்டும் அறிவர்; கடமை மற்றும் அன்பை அறியார்.
19. அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி என அறிந்துகொள்.
20. இருக்கும் போதே குழந்தைகளுக்குக் கொடு.
21. நிலைமையை அறிந்து அளவோடு கொடு. எல்லாவற்றையும் தந்துவிட்டு, பின் கை ஏந்தாதே.
22. எல்லாமே நான் இறந்த பிறகுதான் என உயில் எழுதி வைத்திராதே. நீ எப்போது இறப்பாய் என எதிர்பார்த்துக் காத்திருப்பர்.
23. எனவே கொடுக்க நினைப்பதை மட்டும் முதலில் கொடுத்து விடு; மேலும் தர வேண்டியதைப் பிறகு கொடு.
24. மாற்ற முடியாததை மாற்ற முனையாதே.
25. மற்றவர் குடும்பநிலை கண்டு பொறாமையால் வதங்காதே!
26. அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு.
27. பிறரிடம் உள்ள நற்குணங்களைக் கண்டு பாராட்டு.
28. நண்பர்களிடம் அளவளாவு.
29. நல்ல உணவு உண்டு, நடைப்பயிற்சி செய்து, உடல்நலம் பேணி, இறைபக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உறவாடி, மன நிறைவோடு வாழ்.
30. அதனால் இன்னும் இருபது, முப்பது, நாற்பது ஆண்டுகள் சுலபமாக ஓடிவிடும்.
31. வாழ்வைக் கண்டு களி.
32. ரசனையோடு வாழ்.
33. வாழ்க்கை வாழ்வதற்கே.
34. **நான்கு நபர்களைப் புறக்கணி :** மடையன், சுயநலக்காரன், முட்டாள், ஓய்வாக இருப்பவன்.
35. **நான்கு நபர்களுடன் தோழமை கொள்ளாதே :** பொய்யன், துரோகி, பொறாமைக்காரன், மமதை பிடித்தவன்.
36. **நான்கு நபர்களுடன் கடினமாக நடக்காதே :** அனாதை, ஏழை, முதியவர், நோயாளி.
37. **நான்கு நபர்களுக்கு உனது கொடையைத் தடுக்காதே :** மனைவி, பிள்ளைகள், குடும்பம், சேவகன்.
38. **நான்கு விசயங்களை ஆபரணமாக அணி :** பொறுமை, சாந்த குணம், அறிவு, அன்பு.
39. **நான்கு நபர்களை வெறுக்காதே :** தந்தை, தாய், சகோதரன், சகோதரி.
40. **நான்கு விசயங்களைக் குறை :** உணவு, தூக்கம், சோம்பல், பேச்சு.
41. **நான்கு விசயங்களைத் தூக்கிப் போடு :** துக்கம், கவலை, இயலாமை, கஞ்சத்தனம்.
42. **நான்கு நபர்களுடன் சேர்ந்து இரு :** மனத் தூய்மை உள்ளவன், வாக்கை நிறைவேற்றுபவன், கண்ணியமானவன், உண்மையானவன்.
43. **நான்கு விசயங்கள் செய் :** தியானம் – யோகா, நூல் வாசிப்பு, உடற்பயிற்சி, சேவை செய்தல்.

– நன்றி : 'தர்மசக்தி' 7.7.2019

கல்வி எனும் செல்வம்

கு. பிச்சைமுத்து



கல்வி என்றவுடனேயே நமது கவனத்தில் முதலில் வருவது இன்று "பிரி கே.ஜி. முதல் பி.ஜி. வரை" மாணவர்களின் மனப் போராட்டமும் பெற்றோர்களின் பணத் திண்டாட்டமும்தான்.

மனத்திற்கும் பணத்திற்கும் அல்லலைத் தரும் இக்கல்வியானது, வேலையெனும் பறவையை வேட்டையாடும் வேடனின் கதையாகவே தொடர்கிறது. இத்தொடர் கதையை எங்கே, எப்படி, எப்பொழுது, எவர் முடிப்பார்?

கல்வியினால் பிழைப்பதும் வாழ்வதும் : கற்ற கல்வியினால் கைநிறையச் சம்பாதித்து மன மகிழ்ச்சி





யில் திளைப்பவன் நன்றாகப் பிழைப்பவன். ஆம், இதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் அவன் ஆன்ம சுத்தியுடன் அன்றாடம் சமூக மனிதனாக வாழ்கிறானா என்பதில் தான் நாம் சறுக்கி வீழ்ந்து விடுகிறோம்.

அவ்வாறாயின் இன்றைய கல்வியினால் பலர் பிழைக்கிறார்கள். சிலரே வாழ்கிறார்கள்.

ஏன் இது நிகழ்கிறது? நாம் நமது குழந்தைகள் நன்றாகப் பிழைப்பதற்கான கல்வியையே நாடுகிறோம். அவர்கள் வாழ்வதற்கான கல்வியைப் பெறுவதற்கான வாசற்படியைக்கூட நாம் எட்டிப் பார்க்கத் தயாராக இல்லை என்பதுதானே எதார்த்தமான உண்மை. இதன் விளைவு, மனப்பாடக் கல்வியும், மதிப்பெண் போட்டியும். மன மகிழ்ச்சி சிலருக்கு. நெகிழ்ச்சி பலருக்கு.

இவ்வாறு தனி மனிதனின் மகிழ்ச்சியையும் முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தி, பணத்தை வேட்டையாடுவதற்கான ஆயுதங்களைத் தயாரித்துத் தரும் பிழைப்புக் கல்வியிலேயே "பிழை" எனும் சொல் இடம் பெற்றிருப்பது சிந்தனைக்குரியது.

இப்பிழைப்புக் கல்வியிலுள்ள பிழையைத் திருத்தி, மானுடம் வாழ்வதற்கான வளமான வாழ்வியல் கல்வியை நாம் வழங்குவது எப்போது?

உண்மையான கல்வி : "ஒரு மனிதனுக்கு ஒழுக்கத்தைக் கொடுத்து மூளைத்திறனை முடுக்கி விட்டு, அறிவினைக் கூராக்கி, அதன் பயனாய் அவனைச் சொந்தக்காலில் நிற்க வைப்பதே கல்வியாகும். அது மட்டுமன்று. ஒவ்வொரு தனி மனிதனின் ஆன்மாவையும் விழிப்படையச்

செய்து அவனைச் சமூக மனிதனாக மலரச் செய்வதே மனித உருவாக்கக் கல்வியாகும்." கல்வியென்பதைக் கச்சிதமாய் வரையறுத்துள்ள சுவாமி விவேகானந்தரின் கூற்றேயிது. இந்த உண்மையான–உன்னதமான கல்வியை நம் உள்ளம் எப்போது நாடப்போகிறது?

கல்வியெனும் செல்வம் : "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார் வள்ளுவர். எவ்விதக் குறையுமில்லாத வாழ்வின் விழுமியங்கள் நிறைந்த மேன்மை பொருந்திய செல்வம் கல்வி என்பதால்தானே அதனைக் "கற்க கசடற" என்றார்.

கசடறக் கற்கிறோமா அல்லது கசடுடன் நிற்கிறோமா என்பதிலேயே நாம் தெளிவில்லாமல் இருக்கும் பொழுது "கற்பவை கற்றபின் நிற்க" என்பதற்கு நாம் எங்கு போய் நிற்பது.

முத்துக்குளியலில் சிப்பிகளை அள்ளிக் குவிக்கும் சிந்தனைப் போக்கிலேயே நாம் இன்னும் எத்தனைக் காலம் இருக்கப் போகிறோம்?

கல்வியென்பது காசுருவாக்கும் கருவியல்ல. அது மானுடம் வாழ்வதற்கான பண்பு நலன்களை உருவாக்கும் பாசறை என்பதையும், அதுதான் கேடில்லா விழுச்செல்வம் என்பதையும் நாம் உணரும் நாள் எந்நாளோ!

புதியன விரும்பு : பிழைப்பதற்கான கல்வியைப் பயிலும் மாணவர்கள் பிற்காலத்தில் தாம் வாழ்வதற்கான வளமான கல்வியையும் தம் வசப்படுத்திக் கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், ஆடிட்டர்களாகவும், அதிகாரிகளாகவும், ஆசிரியர்களாகவும், இன்ன பிற என்ன தொழில் செய்தாலும், அவரவரது சமூகப் பொறுப்பை உணர்ந்து சக மனிதனை மதித்து வாழும் தகைமைசால் கல்வியை அவர்கள் தவறாமல் பெற வேண்டும்.

இத்தகைய கல்விமுறை மந்திரத்தால் விளையும் மலிவான மாங்காயல்ல. மாற்றமெனும் ஏற்றத்தில் மாடாய் உழைத்துத்தான் மானுடக் கல்விக்கு மாண்புகளை ஊட்ட வேண்டும்.

கல்வி பற்றிய இச்சிந்தனை ஒவ்வொருவரின் சிந்தையிலும் பாரதியின் அக்கினிக் குஞ்சாகி அன்றாடம் கனன்றால் மட்டுமே இது சாத்தியம். ●

பாவலர் கருமலைத் தமிழாழனுக்குப் பாராட்டு!

எழுத்துலகில் 50 ஆண்டுகளாக இலக்கியப் பணி ஆற்றிவரும் பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்களுக்கு 7.7.2019 அன்று ஓசூரில் பாராட்டு விழா நடைபெற்றது. அவருடைய 50 ஆண்டுக்கால இலக்கியப் பணியைப் பாராட்டும் வகையில் அஞ்சல் தலை மற்றும் அவர் எழுதிய 'அகமுகம்', 'கால் முளைத்த கனவுகள்' எனும் இரண்டு கவிதை நூல்கள் வெளியிடப்பட்டன. விழாவில் கர்நாடகம், ஆந்திரம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடுவாழ் கவிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்துகொண்டு பாவலரை வாழ்த்தினர்.



விழாவில் பாவலரைப் பாராட்டும் கவியருவி அப்துல்காதர், தளி எம்.எல்.ஏ. ஒய். பிரகாசு, ஓசூர் எம்.எல்.ஏ. எசு.ஏ.சத்யா, ஓசூர் மேனாள் எம்.எல்.ஏ. கே.ஏ. மனோகரன், அறம் கிருட்டினன், மா. கருண் ஆகியோர்.



சிறுகதை

பொள்ளாச்சி
வாமனன்



முள் மூஞ்சிக்காரி...

“தமயந்தி... தமயந்தி... ஏய் தமயந்தி இங்க வா... ஐம்பது அடி நடந்து வர்றதுக்கு... இவ்வளவு நேரமா...? ஆடி அசைஞ்சு அன்னநடை நடந்துக்கிட்டு. வேலைக்கு வந்தா வேலை மேல நினைப்பு இருக்கணும். எறும்பு மாதிரி சுறுசுறுப்பா ஓடணும், ஓடியாரணும்... கூப்பிட்டா உடனே வந்து முன்னாடி நிற்கணும் தெரிஞ்சுதா...? அந்த வவுச்சர் ஃபைல எடுத்துத் தா... வருகைப் பதிவேடு கொண்டா...”

– ஏனோ என்னைக் கண்டாலே சுகுணாம்மாவுக்கு அப்படியொரு கசப்பு. என்னைப் புடிக்கலையா...? என் பேரைப் புடிக்கலையான்னே தெரியலே. அவங்க ஆயிரம் பெண்கள் படிக்கிற இந்தப் பள்ளிக்கூடத்துக்குத் தலைமை ஆசிரியை... பெண்கள் விடுதிக்கு சுகுணாம்மாதான் வார்டனும்.

அவங்க என்கிட்டே எரிஞ்சு விழறதுக்குத் தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லையே... என்கிட்டேன்னு மட்டும் இல்லை... பொதுவாகவே எல்லார்கிட்டேயும் கொஞ்சம் ‘கடு... கடு...’ – ‘சிடு... சிடு...’தான். அது, அவங்க தோரணை. குணமே அப்படித் தான்.

எங்க பள்ளியில வேலை செய்யிற மத்த ஆசிரியைகளுக்கு சுகுணாம்மா வின் பேரைக் கேட்டாலே வேப்பெண் ணெய்க் கசப்பு... தலைமை ஆசிரி யரம்மா கூப்பிடுவதாகச் சொன்னால்... அவ்வளவுதான் நடுநடுங்கிப் போவார்கள்.

“இந்த அம்மா கலியாணம் ஆனவங்களா...? விதவையா...? விவாகரத்து ஆனவரா...? இந்தப் பொம்பளையோட கொடுமை தாங்காம புருசன் விட்டுட்டு ஓடிப் போய்ட்டாரோ...?” ஆசிரியை களுக்குள் நடைபெறும் விவாதமேடை, பட்டிமன்றத்தில் இதுதான் விவாதப் பொருள்.

தினமும் காலையில் பள்ளிக்கூட மணி அடித்துவிட்டால் போதும்; பிள்ளை களுக்கு ஆசிரியைகள் வகுப்பெடுக்கிற ஒலிகள், பிள்ளைகள் பாடம் படிக்கிற ஒலிகள் தவிர வேறு ஓசைகளோ, கூச்சல்களோ கேட்காது. கேட்கவும் கூடாது. பள்ளியின் தாழ்வாரங்களில் ஒரு குப்பையோ, தூசியோ, ஒட்டடையோ கண்ணில்படக் கூடாது.



அடி மட்டும் என் வயிற்றின் மேல் அல்லது முதுகின் மேல் விழுந்திருந்தால்... நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. என் வயிற்றில் அசைந்து கொண்டிருக்கும் ‘கரு...’ ரத்தச் சேற்றில் பிண்டமாய் உதிர்ந்திருக்குமே. மனம் பதறுகிறது. ஆனால், “ஏய்... ஏய்... நிறுத்து... நிறுத்து...”

“பள்ளிக்கூடம் கோயில் மாதிரி தூய்மையாக இருக்கணும்...” சுகுணா மேடத்தின் கண்டிப்பான உத்தரவு ஊழி யர்களை எச்சரித்தது.

மேடத்தின் நடை, உடை, உடல் மொழி அனைத்திலும் ஓர் ஆம்பிளைத் தனம். கறார், கண்டிப்பு, தூள்பறக்கிற அதிகாரம்.

“இந்த அம்மாவின் இயல்பே இப்படித்தானா? இல்லே ஒரு முகமூடி போட்டுக்கிட்டுப் பூச்சாண்டி காட்டுதோ...?”

“அடிபட்ட புலியா...? தெனாலி ராமன் பூனையா...? தாங்க முடியாத தோல்வியில துவண்டு போனதுதான் காரணமோ...? அப்படியில்லைன்னா எல்லார் மேலயும் எதுக்கு இத்தனை கோபம், எரிச்சல், வெறுப்பு, அவ நம்பிக்கை...?”

ஆசிரியைகளும், சில ஊழியர் களும் அவரவர் மனதில் முளைவிட்ட

கேள்விகளுக்கு விடை தேடித் தவித்தனர்.

“நீ மட்டும் எப்படி தமயந்தி, இந்த முள்ளு மூஞ்சிக்காரிய சகிச்சுக்கிற. நெருப்புக் கங்குகளா வீசியடிக்கிறா... ஒண்ணுமே நடக்காதது மாதிரி, வேற யாரையோதான திட்றாங்கிற மாதிரி – பொறுமையா தாங்கிக்க முடியுது உன்னால. நீ வாங்கி வந்தது வரமா? சாபமான்னே தெரியலடி தமயந்தி...”

மல்லிகா டீச்சர் எனக்காக அனுதாபப்பட்டுப் பேசினாலும், சுகுணாம்மாவைக் குறித்துத் தங்கள் மனக்குறைகளை என்னிடம் பகிர்ந்து கொண்டாலும், ஏனோ என்னால் சுகுணாம்மாவை வெறுக்க முடியவில்லை.

அந்தக் கரடுமுரடான முள் முகத்துக்குள் என்னென்ன கவலைகளோ... எத்தனை எத்தனை காயங்களோ...? அதன் ரணமும் வலியும்தான் இப்படி வெளிப்படுகின்றனவோ...?

“ஆயிரந்தான் நல்லது கெட்டது நடந்திருக்கட்டுமே. அதுக்காக எல்லார்கிட்டேயும் இப்படியா... ‘வள்... வள்னு...’ கத்துவாங்க. எனக்கென்னவோ இந்தப் பொம்பளை பாதி மறை கழண்ட... சைக்கோவா (மனநோயாளி) இருக்குமோன்னு தோணுது...”

ஈசுவரி டீச்சர் சொன்னதை “இருந்தாலும் இருக்கும். சுகுணா மேடத்தின் பேச்சு நடவடிக்கைகளைப் பார்த்தா அப்படித்தான் நினைக்கத் தோணுது...” என்று அனுசூயா, தமிழரசி, எலிசபெத், நசீலா, காமாட்சி டீச்சர்கள் அங்கீகாரம் செய்தது வேதனை அளித்தது.

“சுகுணாம்மா என்ன திட்டுத் திட்டினாலும் கடுகடுவென எள்ளும் கொள்ளும் வெடிக்க முகங்காட்டினாலும் அந்த அம்மா முன்னால் பணிவாகப் போய் நிற்க வேண்டிய பணியாள், ஸ்வீப்பர், சமையல்கூட உதவியாள், பள்ளிக் குழந்தைகளுக்கு ஆயா... எல்லாம் நீதானே..?

இந்த மேடம்கள் போல தூக்கியெறிஞ்சு பேச ஒரு கடைநிலை ஊழியரான உன்னால் முடியுமா...?” என்றது என் மனது.

பள்ளி வளாகத்தையொட்டி அதன் இணைப்பாகச் செயல்படுகிறது பெண் பிள்ளைகளுக்குக்கென்று தங்கும்விடுதி. உணவுக் கூடமும் அதற்குள்ளேயே உள்ளது. கலியாணமாகாத சில இளம் ஆசிரியைகளும் அதில் தங்கியிருந்தனர். இந்த விடுதிக் காப்பாளரும் சுகுணாம்மாதான். அவங்களும் இங்கேதான் தங்கியிருக்காங்க.

அவங்க அனுமதியில்லாமல் ஒருத்தரும் உள்ளே வரவும் முடியாது; நினைத்த நேரத்தில் வெளியே போகவும் முடியாது. மூக்கு விட்டத்தின் பாதியில் சரிந்திருக்கும் கண்ணாடியின் வழியே அரைப் பார்வைப் பார்க்கும்போது, அந்தப் பார்வை உள்ளே ஊடுருவிப் பாயும்போது எவரும் பொய் சொல்லவோ, தப்பு செய்யவோ முடியாது. அச்சப்படவே செய்வார்கள். அதன் கூர்மை அப்படி.

விடுதி உணவுக் கூடத்தில்...

காலைச் சிற்றுண்டியை, மதிய உணவை, இரவு உணவை மூன்று வேளையும் சுகுணாம்மா உண்ட பின்தான் பிள்ளைகளுக்கும், விடுதியில் தங்கியுள்ள மற்ற ஆசிரியைகளுக்கும் பரிமாற வேண்டும்.

சுகுணாம்மாவின் எல்லா நடவடிக்கைகளையும் போலவே இதையும் விமர்சித்தார்கள்.

“பசி வந்திட்டா... நீ – நீயாகவே இருக்க மாட்டே!” தொலைக்காட்சி விளம்பரத்தில் வரும் இந்த வசனம் சுகுணாம்மாவைக் கேலி பேச ஆசிரியைகளுக்குப் பயன்பட்டது.

“தானாத்தின்னிக்கு முதல் மரியாதை, படையல் போட்டாச்சா...?” ஏளனக் குரல்கள், கேலிப் பேச்சுகள் உணவு விடுதியில் அவ்வப்போது மெலிதாக ஒலிக்கும். இந்தப் புரணிகளும் வம்பளிப்புகளும் சுகுணாம்மாவின் காதுகளில் விழுந்தாலும் தெரிந்தது போலக் காட்டிக் கொண்டதுமில்லை.

அந்தச் சம்பவம் நிகழும்வரை சுகுணாம்மாவின் முதல் ருசி, முதல் படையல், முதல் மரியாதையின் காரணம் எவருக்குமே விளங்கவில்லைதான். கேலி பேசியவர்களின் வாய்கள் அடைபட்டுப் போயின அதற்குப்பின்.

வழக்கம் போல அன்று மதியமும் நண்பகல் 12.30 மணிக்கு சுகுணாம்மாவுக்கு உணவு விடுதியில் உணவுப் பரிமாறியிருக்கிறாள் சமையல்காரி கமலம்.

''இன்னிக்கு என்ன குழம்பு... பொறியல் என்ன? ரசம் வெச்சியா? தயிர் புளிச்சுப் போகலையே...?''

வழக்கமான கேள்விகள். வழக்கமான பதில்கள். ''சாம்பார்ல எதுக்குடி இத்தனை உப்பு...? உப்பு அதிகம் போட்டா குழந்தைக்கு உடம்பு என்னத்துக்கு ஆகும்? கொஞ்சம் சுடுதண்ணி ஊத்திக் கரிப்பைக் கம்மி பண்ணு...''

கத்தரிக்கா வாங்க வேண்டாம்னு சொல்லியிருக்கேன்ல... அதுல பூராவும் மருந்து. அதுவும் 'எண்டோசல்பான்' மாதிரி கொடிய நஞ்சு அடிச்சிருப்பானுக... இப்ப வாழைக்காய், தக்காளி, வெண்டைன்னு காய்கறிகளிலயும், கீரையிலுங் கூடப் பூச்சிக்கொல்லி பூஞ்சாண மருந்துன்னு தெளிக்கிறாங்க...

''உணவெல்லாமே பூச்சி, பூஞ்சாண மருந்துகளால நஞ்சாயிருச்சு... விலை கூடிப் போனாலும் பரவாயில்ல, மருந்துக தெளிக்காத காய்கறிக, கீரைகளைப் பார்த்து வாங்கணும்னு சொல்லியிருக்கேன்ல... இந்தச் சாம்பார்ல ஒரே மருந்து வாசம்...''

இரண்டு மூன்று கவளம் சாம்பார் ஊற்றிய சாதத்தை சில கத்தரிக்காய்த் துண்டுகளோடு கொஞ்சம் வெண்டைக்காய் பொறியலை... பிசைந்து உண்டபின் சுகுணாம்மா ஒரு மிடறு தண்ணீர் குடிச்சிருக்காங்க...

''குடிக்கிற தண்ணியில எப்படிக் குளோரின் வாசம் அப்பப்பா... உணவே மருந்தாயிருந்த காலம் போய்... இப்போ மருந்துதான் உணவுன்னு ஆயிருச்சு. இந்தப் பூமியையும் பாழாக்கி, தன்னையும் பாழாக்கிக்கிட்டான் மனிதன்...ம்.''

கமலம் கொடுத்த கைத்துண்டில் கையைத் துடைத்துக் கொண்டே ''அந்தக் காத்தாடியைப் போடு கமலம். வியர்க்குது... எனக்கென்னமோ பண்ணுது... வாந்தி வர்றாப்புல இருக்குது... தலை சுத்துதுடி கமலம்...''

சொல்லிக் கொண்டே எழுந்தவங்க... கொட கொடன்னு வாந்தி எடுத்திருக்காங்க. அப்படியே மயங்கி சாஞ்சிருக்காங்க. கமலமும் மத்த ஆளுகளும் சேர்ந்து உடனடியா மருந்துவமனையில கொண்டு போய் சேர்த்திருக்காங்க. அரை நினைவோடு இருக்கிறப்பக்கூட கையசைச்சு கமலத்தைக் கூப்பிட்டு, ''அந்த சாம்பார், பொறியல் எல்லாத்தையும் குழியில போட்டு மூடிப் போடுங்க... நாயோ, பூனையோ, காகங்களோ தின்னா அதுகளுக்கும் பாதிப்புதானே... குழந்தைகளுக்கு வேற பாத்திரத்தில களிம்பு புடிக்காம தேய்ச்சு கழுவிப் போட்டு புதுசா சமையல் செஞ்சு குடுக்கணும். இந்தக் காய்களையும் தூக்கிக் குப்பையில போடுங்க'ன்னு சொல்லியிருக்காங்க சுகுணாம்மா.

அந்த மருத்துவமனையிலயும் சுகுணாம்மாவோட வாந்தி பேதிக்கு (ஃபுட் பாய்சன்) நஞ்சான உணவுதான் காரணம்னு சொல்லியிருக்காங்க. ரெண்டு நாள் கழிச்சு வீடு திரும்பியிருக்காங்க சுகுணாம்மா.

''நல்ல வேளையா என் ஒருத்தியோட போச்சு... இன்னும் ஒரு மணிநேரம் கழிச்சு எனக்கு வாந்தி, பேதி ஏற்பட்டிருந்தாக் கூட குழந்தைகளும் பாதிப்புக்கு ஆளாயிருக்குமே. குழந்தைகளுக்குப் பாதிப்பில்லையே... அது போதும்; அதுவே நிம்மதி...''

சுகுணாம்மா சொன்னதைக் கேட்டதும் ''கல்நெஞ்சுக்காரி, குழந்தை அருமை தெரியாத மலட்டு ஜென்மம், லேடி ஹிட்லர்'' – என்றெல்லாம் உளறிய வாய்கள் மௌனமாயின. அடுத்த நாள் நான் வேலைக்குப் போனபோது எல்லா விவரமும் கமலம் சொன்னாள். நான் சுகுணாம்மாவைக் காண விடுதி அறைக்குப் போனேன்.

''அம்மா... இப்போ எப்படியிருக்கீங்க...? உங்க உடம்பு சுகமில்லாமப் போயிருச்சுன்னு கேள்விப்பட்டேன். எனக்குத் தலைசுத்தல், வாந்தி. அதனாலதான் ரெண்டு நாள் விடுப்பு எடுக்கும்படி ஆயிருச்சும்மா...''

''இப்போ எப்படியிருக்குடி...? பரவாயில்லையா? டாக்டர்கிட்டே காட்டினியா...? என்ன சொன்னாங்க; மருந்து எழுதிக் குடுத்தாங்களா, பணம் கையில இல்லேண்ணு மருந்துச் சீட்டை சும்மா வெச்சுட்டயா...?''

நிறையக் கேள்விகள் சுகுணா அம்மாவிடமிருந்து.

''மூணு மாசம்''னு டாக்டர் கலைச்செல்வி சொன்னாங்க...'' தயக்கமும் வெட்கமுமாக நான் சொன்னதும்.

''ஓ...! அப்படியா! நல்லது.... நல்லது. கவனமாக இருடி; தலைச்சன் பிள்ளைக்காரி.'' ஒரு தாயின் கனிவான பாசமுள்ள முகம் முட்களின் நடுவே குவிந்துள்ள மலர்ந்தும் மலராத ரோஜா மொட்டுப் போலத் தோன்றியது. அந்தச் சொற்களில் வெளிப்பட்ட அக்கறை எனக்கு நெகிழ்ச்சியூட்டியது. என் அம்மா தெய்வானையின் முகம் கண் முன்னே காட்சியளிப்பது போலிருந்தது. அம்மா இறந்து இரண்டு ஆண்டுகள் ஆயிற்று.

''வேலையில் இருக்கும் போதே மாரடைப்பில் அம்மா இறந்து போனதால், வாரிசு அடிப்படையில் இந்த வேலைக்கு உன் பெயரைப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். நீ இந்த வேலையில இருந்துக்கிட்டே பி.எட்., படி. பிறகு டீச்சர் வேலைக்கு முயற்சி செய்.'' நல்ல மனம் படைத்த அந்த அதிகாரி வழிகாட்டினார். ஆனால், அவ்வளவு எளிதாக எதுவும் நடந்துவிடவில்லை.

இதற்கு ஏகப்பட்ட சிபாரிகள், குறுக்கீடுகள். உள்ளூர் வட்டச் செயலாளர் முதல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரை நேரில் சந்தித்து விண்ணப்பம் கொடுத்து... நடையாய் நடந்து ஒரு வழியாய் இந்த ஸ்வீப்பர் – ஆயா – எடுபிடிப் பணியாள் வேலை கிடைத்தது. ஒருகட்டத்தில் என்னுடைய முதுகலைப் பட்டப்படிப்பு கல்வித் தகுதி வேறு தடையாய் குறுக்கீடு செய்தது. எப்படியோ எல்லாத் தடைகளையும் தாண்டி இந்தப் பள்ளியில் பணி கிடைத்தது.

வேதனை நிறைந்த நினைவுகளின் சுழல் என்னை இழுத்தது. சட்டென்று விடுவித்துக் கொண்டு, ''அம்மா இப்ப எப்படியிருக்கீங்க...? பயப்படுகிற மாதிரி ஒண்ணுமில்லையே; டாக்டர் என்ன சொல்றாங்க...?'' முழுவதுமாக நலம் விசாரிக்க முடியவில்லை. கண்களில் வழியத் தொடங்கிய கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் தவித்தேன்.

''ஏய்... தமயந்தி என்னாச்சுடி உனக்கு...? எனக்கு வியாதி ஒண்ணும் இல்லடி. சாப்பாடு ஒத்துக்கல... வாந்தியும் வயிற்றுப்போக்கும்தான். ரெண்டு நாள்ல சரியாப் போச்சு. இதுக்குப் போயி அழுதுகிட்டு. இன்னும் என்கிட்ட எத்தனை திட்டு வாங்கறது உனக்குப் பாக்கியிருக்கு. கண்ணைத் துடை.''

தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்து காக்காய்ப் பார்வை பார்த்துப் புன்னகைத்தார் சுகுணாம்மா. அதில் அதிகாரத்தின் சாயலோ, வெறுப்பின் வெம்மையோ சிறிதும் தென்படவில்லை.

''ஏண்டி தமயந்தி, வேலைநிறுத்தம், ஊர் வலம், மறியல்னு சொன்னாங்களே; என்னாச்சு...? நாளைக்கா...?''

''ஆமாம்மா... நாளைக்குத்தான்னு பேசிக்கிறாங்க. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும், கல்வியமைச்சர், நிதியமைச்சர்கள்கூட நடத்தின பேச்சுவார்த்தை தோல்வி''ன்னு செய்திலே சொன்னாங்க.

''அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தவறாமல் பேரணியிலும், போராட்டத்திலும் கலந்துக்கணும்னு தொழிற்சங்கங்கள் கூட்டா அறிக்கை விட்டிருக்காங்கன்னும் செய்தியில சொன்னாங்க. நாளைக்கு எதுவேணும்னாலும் நடக்கலாம்.''

''ஆசிரியருக, அரசாங்க ஊழியருக கோரிக்கையில் நியாயம் இருக்கு. ஒத்துக்கறேன். ஆனா பத்து, பன்னெண்டு (+2) வகுப்புப் பிள்ளைகளுக்குப் பொதுத் தேர்வுகள் நெருங்கி வரும் சமயத்தில் நாம போராட்டம் நடத்தினா படிக்கிற பிள்ளைகளுக்குப் பாதிப்பாயிருமே... பெற்றோர்களும் ஆசிரியர்கள் மேல கோபப்படுவாங்களே...''

''ஏம்மா... அப்படின்னா இந்தப் போராட்டமே வேண்டாங்கறீங்களா...?''

''அப்படிச் சொல்லலேடி தமயந்தி. நாம ஒண்ணும் அரசாங்கத்துக்கிட்ட பிச்சைக் கேக்கலே. நம்முடைய உரிமைகளைத்தான் கேட்கிறோம். ஆனா போராடறதுக்கு இது சரியான சமயமில்லைங்கிறதுதான் என் கருத்து, புரிஞ்சுதா...?''

''நம்ம டீச்சருக காலையில 7 மணி முதல் 8 மணிவரைக்கும் கணக்கும், விஞ்ஞானப் பாடங்களும் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரலாமே... மாலையில 5 மணிக்கு மேல 6 மணி வரைக்கும் மத்த பாடங்களைச் சொல்லிக் கொடுக்கலாமில்லையா...?

''நம்ம டீச்சர்களைக் கூப்பிட்டு இப்படிச்

சொல்லலாம்னு நினைக்கிறேன். டீச்சருக ஒத்துழைச்சா... புள்ளைங்கப் படிப்புக் கெடாதில்லையா...''

பொதுத் தேர்வுகள் நெருங்கி வரும் வேளையில் பிள்ளைகளின் படிப்புக் கெட்டுவிடக் கூடாது. போராட்டத்தைப் பிறகு வைத்துக் கொள்ளலாமே என்கிற சுகுணாம்மாவின் அக்கறையை மற்ற ஆசிரியர்கள் எப்படிப் பார்க்கப் போகிறார்களோ... எதிர்மறையா என்னவெல்லாம் பேசப் போகிறார்களோ என்று நினைத்து அமைதியாயிருந்தேன்.

''மனிதர்களைப் புரிந்துகொள்வது கடினம். ஆனாலும் சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும்தான் ஒருவரைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகின்றன. அப்போதுதான் அவர்களுடைய உண்மையான முகம்... வெளிச்சம் வரும்போது பளிச்சென்று புலப்படும் காட்சிகளைப் போல் துலங்குகிறது.''

எப்போதோ படித்தது இப்போது நினைவுக்குள்ளிருந்து வெளிவந்தது.

அன்று காலை முதலே பள்ளியில் பரபரப்பு நிலவியது. ஆசிரியைகளும், அலுவலக ஊழியர்களும் பள்ளிக்கூட மணி ஒலித்ததும் வகுப்புகளுக்குச் செல்லாமல் புறக்கணிப்புச் செய்துவிட்டு முன்புறவாயில் அருகில் கூடினர்.

வேலைநிறுத்தத்திற்கான காரணங்களை விளக்கியும், கோரிக்கைகளை வரிசைப்படுத்தியும் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு, முழக்கங்களை எழுப்பியபடி பேரணியாகச் செல்ல முயன்றனர். அந்த முயற்சியை முறியடிக்க... வந்து நின்றன காவல்துறை வாகனங்கள்.

கோழிக்குஞ்சுகளைத் தூக்கிச் செல்லும் பருந்துகளைப் போல அதிலிருந்து தடதடவென இறங்கிய காவலர்கள் கைகளில் குண்டாந்தடிகளுடன் ஆசிரியைகளையும், ஊழியர்களையும் நகரவிடாமல் தடுத்தனர். காவலர்கள் வீதிகளின் குறுக்கே இரும்புத் தடுப்பணைகளையும் வைத்து மறித்தனர். தெருவில் என்ன நடக்கிறதென்பதைப் பார்க்கப் பொதுமக்களும் கூட்டமாகக் கூடியது காவலர்களுக்கு இடையூறாகத் தோன்றியது. சிறிது நேரத்தில் பேரணி செல்ல முயன்றவர்கள் முழக்கங்களை எழுப்பியது காவல்துறை அதிகாரிகளுக்கு எரிச்சல் ஊட்டியது.

போராட்டக்காரர்களையும், பொதுமக்களையும் கலைந்து செல்லும்படி எச்சரிக்கை விடுத்தார். ஆனால், கோரிக்கை முழக்கங்களுடன் முன்னேறிச் செல்ல முயன்றவர்களுக்கும், காவலர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு உண்டானது.


சில நிமிடங்களில் காவலர்களின் குண்டாந்தடி பலப்பிரயோகம் பேரணி சென்றவர்கள் மேல்... அதைத் தொடர்ந்து அடிபட்டவர்களின் கூச்சலும், ஓலமும் எங்கும் எதிரொலித்தது. ''அரெஸ்ட்...'' அதிகார உறுமல் அதையும் மீறிக் கேட்டது.

ஆசிரியைகளைக் காவல்துறைக் காவலர்கள் தரதரவென இழுத்துச் சென்று பேருந்துகளில் ஏற்றி – அப்போது கூட்டநெரிசலில் மூச்சுத்திணறி மயங்கிக் கீழே சரிந்த சுசீலா டீச்சரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த என்னை, ''ஏய்... விலகிப் போடி...'' என்று நெட்டித் தள்ளினாள் ஒரு போலீஸ்காரி. என்னை நோக்கிச் சுழன்று வந்தது அந்தப் போலீஸ்காரிகளுக்கு அருகிலிருந்த காவலரின் குண்டாந்தடி.

அந்த அடி மட்டும் என் வயிற்றின் மேல் அல்லது முதுகின் மேல் விழுந்திருந்தால்... நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. என் வயிற்றில் அசைந்து கொண்டிருக்கும் 'கரு...' ரத்தச் சேற்றில் பிண்டமாய் உதிர்ந்திருக்குமே. மனம் பதறுகிறது. ஆனால், ''ஏய்... ஏய்... நிறுத்து... நிறுத்து...'' கோபாவேசமான குரலுடன் ஒரு பூஞ்சையான உடல் அந்த அடியை என்மேல் விழாமல் தன்மேல் வாங்கிக் கொண்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் சுகுணா மேடத்தின் தோளையும், மண்டையையும் பதம் பார்த்தது அந்தக் குண்டாந்தடி.

''உங்களுக்கெல்லாம் ஈவு இரக்கமில்லையா? நீங்கெல்லாம் மனுசங்களா...? உணர்ச்சியில்லாத இயந்திரங்களா...? மிருகங்க... மிருகங்க. கர்ப்பிணிப் பெண்ணுன்னுகூடப் பாக்காம. அராஜக அடக்குமுறை... ஒழி...க..!'' நினைவு தப்பிப் போயிருந்த சுகுணாம்மாவின் தலையிலிருந்து கொட்டும் குருதியை என் சேலைத் தலைப்பைக்

தொடர்ச்சி 94–ம் பக்கம்



அத்தி வரதரின் அற்புத தரிசனம்

ஆங்கிலத்தில் "எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கியே செல்கின்றன" என்றொரு பழமொழி உள்ளது. அதுபோல் கடந்த சில நாட்களாகப் பெருந்திரளான மக்கள் ஒரே சிந்தனையுடன் காஞ்சி மாநகரை நோக்கியே பயணிக்கிறார்கள்.

காரணம், காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் அனந்தசரஸ் குளத்தில் 40 ஆண்டுகளாக சயனக் கோலத்திலிருந்த அத்தி வரதரைத் தரிசிப்பதற்காகத்தான்.

நான் ஏற்கனவே 1979–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் எனக்கு 42 வயதாக இருந்தபோது முதல்முறையாக காஞ்சிபுரம் அத்திவரதரைத் தரிசிக்கும் பேறு பெற்றேன். இப்போது எனது 82–ஆவது வயதில் இரண்டாவது முறையாகத் தரிசிக்கும் பாக்கியமும் பெற்றேன். என்னைப் போலவே பலரும் வந்து அத்தி வரதரைத் தரிசித்து ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

அத்திகிரி : காஞ்சிபுரத்திற்குப் பழைய பெயர் "அத்தியூர்" என்பதாக இருந்தது. ஆழ்வார்களின் பாசுரங்களில் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளை 'அத்தியூரான்' என்றே குறிப்பிட்டுள்ளார்கள். அக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அப்பெருமானை "திரு அத்தியூர் ஆள்வார்" என்றே குறிப்பிடுகின்றன.

காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலயம் இப்பொழுது உள்ள இடத்தில் ஆதிகாலத்தில் அத்தி மரங்கள் சூழ்ந்த வனமாக இருந்தது. அதனால் 'அத்திகிரி' என அழைக்கப்பட்டது.

பல்வேறு சிறப்புகளையும், பெருமைகளையும் கொண்ட காஞ்சிபுரம் வரதராஜர் கோவிலில் உள்ள அனந்தசரஸ் திருக்குளத்தில் கடந்த 40 ஆண்டுகளாக சுமார் 12 அடி ஆழமுள்ள கருங்கல்லால் ஆன தொட்டியில்தான் சயனக் கோலத்தில் அத்தி வரதர் வீற்றிருக்கிறார். அவர் வைரத்தன்மையுள்ள அத்தி மரத்தினால் செய்யப்பட்டவர். மரங்களில் தெய்வம் உள்ள செய்திகளைச் சங்க இலக்கியங்கள் விரிவாக விளக்குகின்றன.

யாகம் செய்த பிரம்மா : படைப்புத் தொழில் செய்து வந்த பிரம்மா, காத்தல் தொழில் செய்து வரும் பகவான் மகாவிஷ்ணுவை நேரில் காண வேண்டுமென்று ஆவல் கொண்டார். பிரம்மாவின் ஆவலை அறிந்த மகாவிஷ்ணு, "நீ ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்தால் என்னை நேரில் காண முடியும்" என்று அசரீரியாகக் கூறினார். பிரம்மா "தன்னால் ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்ய இயலாது" என்று கூறினார்.

எனவே, திருமால் பிரம்மனிடம், "பூமியில் சத்திய விரதத் தலம் என்றோர் இடம் உள்ளது. அங்கு ஒரு முறை யாகம் செய்தாலும் ஆயிரம் மடங்குப் பலன் கிடைக்கும். ஒரு பொற்காசு தானம் செய்தாலும் ஆயிரம் பொற்காசுகள் தானம் செய்வதற்கு ஈடாகும். ஒரு பொய் சொன்னாலும், ஆயிரம் பொய்கள் சொன்னதற்குச் சமமாகும். எனவே, அங்கு சென்று யாகம் செய்" என்றார்.

மனைவியில்லாமல் செய்த யாகம் : திருமாலின் அறிவுரையின்படி பிரம்மா சித்திரை மாதம் பௌர்ணமி நாள் யாகத்தைத் தொடங்கினார். யாகத்தைத் தொடங்கும்போது அங்கு வந்த

என்.ஆர். ஜெயசந்திரன்



வசிஷ்டர், "உன்னதமாக யாகம் நடத்தும்பொழுது உனக்கு உரியவளான சரஸ்வதியும் உடன் இருக்க வேண்டும்" என்று கூறினார். அதற்குப் பிரம்மா, தன்னுடன் சரஸ்வதி இல்லை என்று கூறியதால், பிரம்மாவின் மற்ற மனைவியரான சாவித்திரி, காயத்திரி ஆகிய இருவரையும் பிரம்மாவோடு அமர வைத்தார். பிரம்மா யாகத்தைத் தொடங்கினார்.

அதை அறிந்த சரஸ்வதி கடுஞ்சினம் கொண்டாள். யாகத்தைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுச் சூரியனையும் சந்திரனையும் தனக்குக் கட்டுப்பட வைத்து, அப்பகுதி முழுவதும் இருளடையச் செய்தாள். திருமால் அருளால் ஒளி கிடைத்தது. அதனால் மேலும் ஆத்திரம் அடைந்த சரஸ்வதி, ஒரு கொடிய அரக்கனைப் படைத்து யாகத்தை நடத்த முடியாதபடி செய்ய முனைந்தாள். அந்த அரக்கனையும் திருமால் அழித்துவிட்டார்.

அதனால், மேலும் ஆத்திரமடைந்த சரஸ்வதி, உடனே வேகவதி என்னும் ஆறாக உருவெடுத்தாள். ஆற்று வெள்ளம் பெருகி வந்து யாகத்தை அழிக்க முனையும் பொழுது, அந்த ஆற்றின் குறுக்கே திருமால் அணையாகப் படுத்து யாகத்தைத் தொடர்ந்து நடத்த வைத்தார்.

பின்னர் பிரம்மா, சரஸ்வதி இருவரையும் அழைத்துப் பேசிச் சமாதானப்படுத்திச் சேர்த்து வைத்தார். சரஸ்வதி, சாவித்திரி, காயத்ரி ஆகிய மூவருடன் யாகத்தைத் தொடர்ந்தார். அந்த யாகம் சித்திரை மாதம் வளர்பிறை சதுர்த்தியில், ஹஸ்த நட்சத்திரத்தில் ஞாயிற்றுக் கிழமையில் நல்லபடியாக நிறைவு பெற்றது. யாகத்திலிருந்து வரத ராஜப் பெருமாள் புண்ணியகோடி விமானத்துடன் பிரம்மாவிற்குக் காட்சியளித்தார்.

அதனால் காஞ்சிபுரம் வரதராஜர் கோயில் விமானத்தைப் "புண்ணிய கோடி விமானம்" என்று அழைக்கின்றனர். வரதராஜர் தீயில் தோன்றியபடியால், வரதராஜரின் முகத்தில் தீக்காயங்களின் அடையாளங்களை இப்போதும் காணலாம்.



யாகத் தீயால் பாதிக்கப்பட்ட அத்தி வரதர் : வரதராஜப் பெருமாளைக் கண்டு ஆனந்தப் பரவசமடைந்த பிரம்மா, தான் கண்ட அதே உருவத்தை அத்தி மரத்தில் உருவாக்கி, அங்குப் பிரதிஷ்டை செய்தார். பின்னர் அத்தி வரதர் முன்பு ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்தில் உருவான தீச்சுடர், அத்தி வரதரின் மேல் பட்டு அவரது உடலில் குறை ஏற்பட்டது. அதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பிரம்மா, தன்னால் அத்தி வரதரின் திருமேனியில் குறை ஏற்பட்டுவிட்டதே என்று வருந்திச் செய்வதறியாது கவலையுடன் இருந்தார்.

அப்பொழுது அத்தி வரதர் தன் திருமேனியில் குறை ஏற்பட்டுள்ளதால், தான் அங்கிருந்து பக்தர்களுக்குக் காட்சி தருவது முறையல்ல என்றும் யாகத்தினால் ஏற்பட்ட வெப்பத்தைத் தணிக்கத் தன்னை அந்த ஆலயத்திற்கு வடக்கே உள்ள அனந்த சரஸ் குளத்தில் இருக்கும் நீராழி மண்டபத்திற்குத் தெற்கே உள்ள நாலுகால் மண்டபத்தில் வைத்துவிடு. நான் இளைப்பாறுவேன்" என்றார்.

பிரம்மாவும் அவ்வாறே வைத்துவிட்டார். அத்தி வரதர் அவ்விடத்தில் இருப்பதால், எந்தக் காலத்திலும் அக்குளத்தில் நீர் வற்றுவதில்லை.

மூலவராக இருந்த அத்திவரதர் குளத்தில் மூழ்கிவிட்டாரே, வழிபாட்டுக்கென ஒரு சிலை வேண்டாமா? அதற்கும் அத்தி வரதரே வழிகாட்டினார். அத்தி வரதருக்குப் பூசைகள் செய்யும் ஆச்சார்யர்களில் ஒருவரின் கனவில் காட்சியளித்த வரதர், "ஆலயத்திற்குத் தென்கிழக்குத் திசையில் சில கல் தொலைவிலுள்ள பழைய சீவரம் என்ற ஊரில் உள்ள மலையின்மேல், தன்னைப் போல ஒரு வரதர் இருப்பார். அவரைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து பூசைகள் செய்யுங்கள். அனந்த சரஸ் குளத்தில் இருக்கும் என்னை நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியில் கொண்டு வந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) பூசை செய்து மீண்டும் என்னை அந்தக் குளத்தில் வைத்து விடுங்கள்" என்று தெரிவித்தார்.

அவர் தெரிவித்தபடியே பழைய சீவரத்திற்குச் சென்று பார்த்தபோது, அவரைப் போலவே ஒரு பிரதிபிம்பம் இருந்ததைக் கண்டு மகிழ்ந்து, அதைக் கொண்டு வந்து நிறுவினர். இப்பொழுதும் ஆண்டுக்கொருமுறை வரதராஜப் பெருமாள் காஞ்சியிலிருந்து பழைய சீவரத்திற்குப் பாரிவேட்டை உற்சவமாகச் சென்று வருகிறார்.

அனந்தசரஸ் குளத்திலிருந்து வெளிப்பட்ட அத்திவரதர் : 1979–ஆம் ஆண்டிற்குப் பிறகு 40 ஆண்டுகள் கடந்த பின்பு, சென்ற ஜூன் மாதம் 27–ஆம் தேதி வெள்ளிக்கிழமை அனந்த சரஸ் குளத்திலிருந்த நீர் மோட்டார் மூலம் அருகில் உள்ள பொற்றாமரைக் குளத்திற்கு மாற்றப்பட்டது. குளத்திலிருந்த மீன்களும் இடமாற்றம் செய்யப்பட்டன. குளத்திலிருந்த நீர் வற்றியதும், அத்தி வரதரின் சிலை எடுக்கப்பட்டது. பச்சை நிறத்தில் பாசி படர்ந்திருந்த அந்தச் சிலையை எடுக்கும்போது பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை.

அந்தச் சிலை சுத்தம் செய்யப்பட்டு, இரவோடு இரவாக அருகில் உள்ள வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டது. பின்னர் சாம்பிராணியைத் தைலமாகக் காய்ச்சி சிலை முழுவதும் பூசப்பட்டது. மூன்று நாட்கள் கடந்த பின்பு 1.7.2019 திங்கட்கிழமை அதிகாலை பக்தர்களின் தரிசனத்திற்கு வைக்கப்பட்டது.

வசந்த மண்டபத்தில் காட்சி தரும் அத்திவரதர், 17.8.2019 வரை பக்தர்களுக்குக் காட்சியளிப்பார். அதன்பிறகு பரிகாரப் பூசைகள் செய்யப்பட்டு மீண்டும் அனந்த சரஸ் குளத்தில் வைக்கப்படுவார். அடுத்தபடியாக 2059–ஆம் ஆண்டில்தான் மீண்டும் பக்தர்களுக்குக் காட்சி தருவார்.

ராபர்ட் கிளைவின் காணிக்கை : ஆங்கிலேயர் ஆட்சி தென்னாட்டில் வேரூன்றக் கடுமையாகப் பாடுபட்டவர் ராபர்ட் கிளைவ். அவருக்குத் திடீரென உடல் நல பாதிப்பு ஏற்பட்டது. ஆங்கிலேய மருத்துவர்களால் அவரைக் குணப்படுத்த முடியவில்லை. அவர் விரைவில் உடல் நலம் பெற வேண்டுமென்று காஞ்சி வரதரை வேண்டினார்கள். கோயில் அர்ச்சகர்கள், ஒரு செப்புப் பாத்திரத்தில் துளசித் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு ராபர்ட் கிளைவிடம் கொடுத்து, 'வரதனை வேண்டிக் கொண்டு பருகுங்கள்' என்று கூறினர்.

பெருமாளின் தீர்த்தப் பிரசாதத்தை அருந்திய ராபர்ட் கிளைவ், அன்றிரவு நன்றாகத் தூங்கினார். விடிந்த பின்பு காய்ச்சலும், உடல் அசதியும், வலியும் மறைந்து போக, பழைய உற்சாகத்துடன் பணியாற்றினார். வரதராஜரின் வல்லமையைத் தன் அனுபவத்தால் உணர்ந்த ராபர்ட் கிளைவ், தன்னிடமிருந்த விலை உயர்ந்த மகர கண்டி என்னும் தங்க நகையை வரதருக்குக் காணிக்கையாக வழங்கினார். இப்பொழுதும் விழா நாள்களில் கிளைவ் காணிக்கையாக வழங்கிய மகரகண்டியை அணிந்து வரதர் திருவுலா வருகிறார்.


●

விவாதம்

‘ஏரே, ஏரே, ஏரே’

2014–இல் பா.ஜ.க. கூட்டணி மத்திய ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு, எதிர்க் கட்சிக்கு உரிய 54 எம்.பி.க்–கள் இல்லை. 44 பேர்தான்.

இத்தகைய அரசியல் நிகழ்வு, ஆட்சியிலிருந்த மோடிக்குக் கூடுதல் தைரியத்தைத் தந்தது. வலுவான மத்திய ஆட்சி. சற்றே வலுக் குறைந்த எதிர்க்கட்சி என்றில்லாமல், வலுவே இல்லாத எதிர்க்கட்சி என ஆகிவிட்டது.



இதன் விளைவாக, இந்திய தேசம் முழுவதும் பா.ஜ.க.வின் சங் பரிவார் அமைப்புக்களான ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.), பஜ்ரங்தள், விஸ்வ ஹிந்து பரிஷத் (வி.எச்.பி.), இந்து முன்னணி, அகில பாரதிய வித்யா பரிஷத் (ஏ.பி.வி.பி.), முதலியவை காங்கிரஸ் ஆட்சியில் செயல்பட்டதைவிட, பா.ஜ.க. ஆட்சியில் துணிச்சலோடு செயல்படத் தொடங்கின.

அதனால்தான் உ.பி.யில் மாட்டுக்கறியை விற்பனையைச் செய்த இஸ்லாமியர் மீது தாக்குதல் நடந்தது. சிலர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் (Lynching). இதேபோல, கிறிஸ்தவர்கள் செய்து வந்த மதமாற்றத்தைத் துப்பறிந்து அதற்கான நிதி வாய்க்கால்களை எல்லாம், மத்திய அரசு ரகசியமாக அடைத்துவிட்டது.

வீர சாவர்க்கர், ஹெட்கேவார், கோல்வால்க்கர் ஆகியோருக்கு பா.ஜ.க. முதன்மைச் சிறப்புத் தந்து, இந்து மதத்தின்மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் மோடி, யோகாவை அறிமுகப்படுத்தி நாடு முழுவதும், உலகம் முழுவதும் பிரபலப்படுத்தினார். யோகாவை இந்து மத நோக்கம் கொண்டது என்ற விமர்சனமும் அப்போது எழத்தான் செய்தது.

2014 – 19 பா.ஜ.க. ஆட்சியை இந்து மதக் கட்சி என்றும், செக்யூலரிசத்திற்கு விரோதமானது என்றும் இந்தியாவில் மூலை முடுக்கெல்லாம் பிரச்சாரம் ஆனது.

இந்து மதத்திற்குக் காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத முக்கியத்துவம், சிறப்பு, பெருமை பா.ஜ.க. ஆட்சியில் தரப்பட்டது என்பதை மறுக்க முடியாது. அதன் காரணமாகத்தான் இந்திய அரசியலே இரு வேறு அணிகளாகப் பிரிந்தன.

ஓர் அணி செக்யூலர் எனப்படும் மதச்சார்பற்ற அணி. மற்றோர் அணி மதத்தை ஆதரித்துப் போற்றுகிற மதச் சார்புள்ள அணி. அதனை அவர்களுடைய எதிரிகள் வகுப்புவாத அணி என்று கொச்சையாகக் கூறுகிறார்கள்.

இந்தப் பின்புலத்தில்தான் 2019–இல் பிரதமர் மோடி மீண்டும் தேர்தலைச்

சந்திக்கத் தயாரானார். அத்தருணத்தில் பா.ஜ.க. ஆட்சியின்மீது பிரான்ஸ் ரஃபேல் போர் விமான ஒப்பந்தத்தில் ஊழல் நடந்திருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி உரத்த குரல் எழுப்பினார்.

அதற்கு முன்பே பண மதிப்பை இழக்கச் செய்த மோடியின் நடவடிக் கையைப் பெரும்பான்மை மக்கள் விரும்பவில்லை. அதே கட்டத்தில் கருப்புப் பணத்தை ஒழிக்க முடியாமல் போனதைப் பற்றிப் பொருளாதார நிபு ணர்கள் புள்ளி விபரங்களோடு தெளிவு படுத்தினார்கள்.

இந்தக் காலகட்டத்தில் பா.ஜ.க. ஆட்சி அறிமுகப்படுத்திய சரக்கு மற் றும் சேவை (ஜி.எஸ்.டி.) வரி பொது மக்கள் மத்தியில் மிகப்பெரிய பர பரப்பை ஊட்டி வந்தது. இது போதா தென்று இஸ்லாமியப் பெண்களுக்கான சமத்துவ உரிமை தர முத்தலாக் முறையை ஒழிப்பதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார் கள். மக்களவையில் நிறைவேற்ற முடியா மல் போனது.

இவ்வளவு பிரச்சனைகளுக்கும் மத்தியில்தான் மோடி இரண்டாவது முறையாக அமோக வெற்றி பெற்றார். அப்போது ஒரே சமயத்தில் நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக் கும் தேர்தல் நடத்தத் திட்ட மிட்டார். ஆனால், அதற் கான போதுமான ஆதரவு கிடைக்கவில்லை.

ஆனாலும் நாட்டு மக்களுக்கு இவர் விடுத்த செய்தி, ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்பதாகும். அதேபோல இந்தி மொழியை மத்தியில் ஆட்சி மொழியாக்கி, ஒரே நாடு, ஒரே மொழி என்ற கோஷத் தையும் வைத்தார்.

மத்திய ஆட்சியிலுள்ள கல்வித் துறை, நாடு முழுவதும் ஒரே கல்வி முறையைக் கொண்டுவர வேண்டு மென்று ஒரு மசோதாவை இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி கஸ்தூரி ரங்கன் தலைமையில் உருவாக்கியது. அதன் மூலம் ஒரே நாடு, ஒரே கல்வி என்பது அரசின் கொள்கையாக அறிவிப் பானது. இதேபோல, ஒரே நாடு, ஒரே ரேஷன் என்பதும் இப்போது பேசப் படுகிறது.

சிறுபான்மை மத மக்கள் தங்களு டைய சிறுபான்மை நிலைமையைத் தாங்களாகவே உணர்ந்து, பெரும்பான் மையினருக்கு ஆதரவாகச் செயல் படுவது நாகரிகம். ஆனால், சிறுபான் மையினர் பெரும்பாலும் பெரும்பான் மைக்கு எதிராகவே செயல்பட மத ரீதி யான வாக்கு வங்கிகளை உருவாக்கி யுள்ளனர்.

இதனுடைய நீட்சியாக எல்லோரும் என்ன சந்தேகப்படுகிறார்கள் என்றால், ஒரே நாடு, ஒரே கட்சியாகிவிடுமோ என்பதுதான்.

ஒரே, ஒரே என்பது இயற்கைக்கு விரோதமானது. எல்லா மனிதர்களும், எல்லா மரங்களும் ஒரே உயரத்தில் இல்லை என்கிற ஒரே உதாரணம்



போதும். சக்கரவர்த்தி அக்பர் நிறுவிய 'தீன் இலாஹி' என்ற ஒரே மதத்தில், அவருடைய உயிர் நண்பர் அபுல் பாசலே சேர மறுத்தார். இவர்கள் ஒரே சூரியன், ஒரே சந்திரன் என நினைத்துக் கொண்டு சிந்திப்பதாகத் தெரிகிறது. உண்மையில், ஓராயிரம் சூரியக் குடும்பங்கள் அண்டவெளியில் உண்டு என்கிறது விஞ்ஞானம். ஆற்றுப் படுகைகள், பீடபூமிகள், அலைகள், இலைகள், மலைகள் எவையும் "ஒரே"வாக இல்லை.

ஒரே கட்சி என்பது சித்தப்படுமானால், ஜனநாயகம் செத்துப்போகும். ஜனநாயகம் இல்லாத தேசம் தனது சுதந்திரத்தைத் தானே கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிடும்.

இந்திய மக்கள் சாதிகளுக்கும், மதங்களுக்கும், இனங்களுக்கும், மொழிகளுக்கும் இணங்கி இருப்பவர்கள். அவற்றிலிருந்து அவர்களை விடுதலை செய்வது சிரமம். ஒரே மொழி, ஒரே கல்வி, ஒரே உணவு, ஒரே மதம் என்று செய்வோமானால், அந்த முயற்சியானது வெகு சீக்கிரத்தில் ஒரே அழிவைத்தான் சந்திக்கும்.

உலக நாடுகளில் ரஷ்ய தேசத்தில் கூட ஜனநாயகத்திற்கான முழக்கங்களை எழுப்பி ரஷ்யக் குடிமக்கள் தற்போது வீதிகளில் சென்று போராடத் தொடங்கிவிட்டார்கள்.

இந்தியாவை பூகோள ரீதியில் புரிந்து கொண்டாலும், வரலாற்று ரீதியில் அறிந்து கொண்டாலும் இந்தியா ஒரு தேசமல்ல, உபகண்டம் என்று சொல்லப்பட உண்மை புரியும்.

அதேபோல இந்த இந்தியப் பிரதேசத்தில் 543 சமஸ்தானங்கள் இருந்தன. அவர்கள் எல்லாம் ராஜாக்களின் வாரிசுகளாக வந்தவர்கள். மக்களிடம் அப்போது ராஜபக்திதான் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில்தான் அடிமைப் படுத்தப்பட்ட அரசியல் இந்தியா உருவாகி, தேசபக்தி உருவானது.


இந்த தேசபக்திக்கு வயது ஏறக்குறைய 100 ஆண்டுகள்தான். இப்படிப் பட்ட தேசத்தை எப்படி ஒரே தேசமாக்க முடியும்? நூற்றுக்கும் அதிகமான தாய்மொழிகளைப் பேசும் இந்த தேச மக்களை, எப்படி ஒரே மொழி பேச வைக்க முடியும்? அரிசி, கோதுமை, ராகி, சோளம் என விதவிதமான உணவு தானியங்களை உண்கிற இம்மக்களை எப்படி ஒரே உணவு சாப்பிடச் செய்ய முடியும்? குல தெய்வங்களிலிருந்து, ஊர்க்காவல் தெய்வம் வரை பல தெய்வங்களைக் கும்பிடுகிற மக்கள் எப்படி ஒரே சாமியைக் கும்பிட முடியும்?



மலைசாதி மக்களான தோடர்களும், படுகர்களும்கூட, தங்களின் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வருகிறபோது, இலக்கியங்களைக் கொண்ட இனத்தார் எப்படி அவற்றை இழக்கச் சம்மதிப்பார்கள்?

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகளுக்கு இப்போது எந்தச் சிக்கலும் இல்லாமல்

உணவுப்பொருள் கிடைத்து வருகிற பொழுது, யாரோ சிலர் பிற ஊர்களுக்கோ, பிற மாநிலங்களுக்கோ மாறுதலாகிச் செல்வதால், இந்தக் குடும்ப அட்டையை ஒரே குடும்ப அட்டையாக்க எதற்காக முயற்சி செய்ய வேண்டும்?



'ஒரே' என்ற இந்த ஒரே வார்த்தை போதும், இந்தியாவை ஒரே தடவையில் அழிப்பதற்கு.

இதைத்தான் அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. அதனால், ஆத்திரப்படுகிற சம்பந்தப்படுகிறவர்கள், கட்சிகளையும், ஒரே கட்சியாக்கிவிட எத்தனிக்கிறார்கள். சாத்தியமற்றதைச் சட்டமாக்கினால் சர்வாதிகாரத்தால் தான் அது நிறைவேற்றப்படும். அப்படிப் பட்ட சட்டங்கள் மக்கள் சட்டங்களாக இருக்காது. உடைந்து நொறுங்கிப் போகும் மரச்சட்டங்களாகத்தான் ஆகும்.

இந்திய மத்திய ஆட்சியை ஆகப் பெரும் பெரும்பான்மையோடு கைப் பற்றியுள்ள மோடிஜியின் ஆட்சி, இந்த 'ஒரே' என்ற ஒன்றிலிருந்து விடுதலையாக வேண்டும். அவரவர் மாநிலம், அவரவர் மொழி, அவரவர் உணவு, அவரவர் கல்வி, அதேபோல அந்தந்த மாநிலத் தேர்தல் என எல்லாவற்றையும் ஒரே என்று ஆக்காமல் அவரவர் பாரம் பரியத்தைப் பராமரிப்பதுதான் சாலச் சிறந்தது.

அதுமட்டுமல்ல, மோடிஜியின் மாபெரும் மகத்தான வெற்றி என்பது கம்யூனிச சித்தாந்தம் இந்தியாவுக்குப் பொருந்தாது என்று அவர் அக்கட்சிகளுக்கு ஏற்படுத்திய தோல்விதான். 50 ஆண்டுக் காலமாக இருந்த ஒரே குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து வாரிசு ஆட்சியை மத்தியில் ஒழித்துக் கட்டியுள்ளவர் மாநிலங்களிலும் அதே நிலைமையை உருவாக்க வேண்டும்.

வெளிநாட்டு உறவைப் பொறுத்த வரையில் பக்கத்துப் பகை நாடுகளாக இருக்கும் பாகிஸ்தானும், சீனாவும் இப்போது பாரதத்தின் ராணுவ பலத்தைப் புரிந்து கொண்டுள்ளதாகவே நடந்து கொள்கின்றன. இதனையும் மோடியின் சாதனையாகக் கொள்ளலாம்.

தம்முடைய அமைச்சரவை ஒரு ரூபாய் லஞ்சம் கூட வாங்காமல் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து, அடுத்த ஐந்து ஆண்டுகளில் லஞ்சம் வாங்காதது மட்டுமல்லாமல், லஞ்சப் பேர்வழிகளைக் கண்டுபிடித்துக் கடுமையாகத் தண்டிப்பதற்கும் தயாராகி வருகிறது.

இந்தப் பின்புலத்தில் அவர் பெற்ற வெற்றிகள் எல்லாம், சிதறிப் போகாமல் மேலும் சுடர் வீச வேண்டுமானால், இந்தியா முழுவதற்குமான ஒரே அணுகுமுறையை அவர் கைவிடத்தான் வேண்டும்.

வெளிநாட்டு மூலதனம், வேலை வாய்ப்பு முதலிய மிகப்பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டுமே தவிர, இந்த 'ஒரே, ஒரே, ஒரே' என்பதற்குள் சிக்கிக் கொள்ளக் கூடாது.

அதிகாரங்களின் குவிமையமாக மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துமானால், குட்டிக் குட்டிச் சுதந்திரப் போர்கள் வெடிக்கத்தான் செய்யும். அதிகாரங்களைப் பரவல் படுத்தி மத்திய ஆட்சியைப் போலவே மாநில ஆட்சி, நகராட்சி, கிராம ஆட்சிகள் என உருவாகுமானால், அப்படிப்பட்ட கிராமக் குடியரசுகளின் ஆட்சிகள்தான் (Village Republic) காந்திஜி கண்ட கனவாகும்.

இதனைப் பற்றி வாசகர்களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ, அதை எழுதுங்கள் ஆகஸ்ட் 15–க்குள்.

– பி.சி.

பாடத்திட்டத்தில் கடவுள் வாழ்த்து இல்லை?



பழைய பாடத் திட்டத்தில்
கடவுள் வாழ்த்து

‘கடவுள் வாழ்த்து, தொழுகை, பிரார்த்தனை, பிரேயர்’ என எல்லாமே ஒன்றுதான்.

உலகப் பெரும் நீதிநூலாகவும், ஏறக்குறைய 42 அந்நிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டதுமான திருக்குறள், ‘அகர முதல’ என்ற கடவுள் வாழ்த்தோடுதான் ஆரம்பிக்கிறது. ‘உலகெலாம்’ என்றுதான் பெரியபுராணம் தொடங்குகிறது. ‘உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்’ என்று கடவுளை வாழ்த்தியே கம்பராமாயணம் தொடங்குகிறது. திங்களை, ஞாயிறை, மழையைப் போற்றுதும் என்றுதான் கடவுளை நினைந்து சிலப்பதிகாரம் தொடங்குகிறது. இவையெல்லாமே அருளாளர்கள் இயற்றிய ஞான நூல்கள்.

அதேசமயம் திருக்குரானுக்கோ, பைபிளுக்கோ, குருகிரந்தத்துக்கோ கடவுள் வாழ்த்து வேண்டியதில்லை. ஏனென்றால், அவை அனைத்துமே கடவுளைப் பற்றிய நூல்கள்.

கடவுள் என்கிற கற்பிதம் உருவான விதத்தை ஆய்வாளர்கள் கூறியது தர்க்கரீதியானது. மனிதனுக்கு அச்சம், ஆச்சரியம் என இரண்டு விதமான குணங்கள் இருந்தன. இரவு நேரத்து இருட்டு அச்சம் ஊட்டியது. பகல் அதனை நீக்கியது. நீக்கியது மட்டுமல்ல, கிழக்கே உதித்த சூரியப் பிழம்பைக் கண்டு ஆனந்த அதிர்ச்சியடைந்தான். காற்று வீசுவதை அனுபவித்திருக்கிறான். மழைக்கு நனையாமல் இருக்க மரப் பொந்துகளிலும், குகைகளிலும் ஒளிந்திருக்கிறான். அச்சமூட்டும் விலங்குகளுக்குப் பலியாகாமல் தப்பித்திருக்கிறான்.

அச்சத்திற்கும் ஆச்சரியத்திற்கும் ஆட்பட்டவனாக மனிதன் இருந்த போது அவனுக்குப் புரியாத, அவனால் புரிந்து கொள்ளவும் முடியாத ஒரு சக்தியின் முன்பு சரணாகதி அடைந்திருக்கிறான். அந்தச் சக்தியைத்தான் அன்றைய ஆதி மனிதன் முதல் இன்றைய நவீன மனிதன் வரை

அங்கீகரித்து வளர்ந்து கொண்டே வருகிறான்.

அச்சத்தையும் ஆச்சரியத்தையும் நவீன விஞ்ஞானம் முழுவதுமாகத் துடைத்தெறிந்து விட்டது. நிலாவைப் பார்த்து ஆச்சரியப்பட்ட காலம் போய்விட்டது. அங்கேயே போய் வசிப்பதற்கான ஆசை மனிதனுக்கு வந்துவிட்டது. அச்சமூட்டிய யானை, சிங்கம் முதலிய கொடிய விலங்கு களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கப் பலமான வீடுகளைக் கட்டிக் கொண் டான். அவ்விலங்குகளைத் துப்பாக்கி யால் சுட்டுக் கொல்ல முடிகிறது.

அச்சம் ஆச்சரியத்திலிருந்து விடு பட்ட இன்றைய மனிதனுக்கு இதயம் துடிப்பது நின்று, மரணமடைந்து விடு வோமோ என்ற அச்சம்தான் இப் போது அதிகரித்துள்ளது.

உரிய நேரத்தில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகளால் முழுவதும் குணமாகிவிடுவதால் அதைக் கண்டு ஆச்சரியமும் படுகிறான்.

அச்சம், ஆச்சரியங்களால்தான் இவன் வாழ்க்கை நிர்வாகம் நடக் கிறது. எவ்வளவுதான் இவனை அறு வைச் சிகிச்சை மூலம் பூரணமாகக் குணப்படுத்தி விட்டாலும், 100 சதவீத உத்தரவாதத்தைத் தரமுடியாத நிலை யில் இந்த நோயாளியைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

கடவுள் என்பது கைவிட முடி யாத நம்பிக்கையாகிவிட்டது. அதுவும் முதலும் கடைசியுமான நம்பிக்கை. ஊட்டப்படுகிற அந்த நம்பிக்கை நம்மைப் பயத்திலிருந்தும், பரபரப்பி லிருந்தும் விடுவிக்கிற உத்தியாகிவிட் டது. அதனால், அடுத்த விநாடி வாழ்க்கை நமக்கு உத்தரவாதம் செய் யப்பட்டதாக நம்புகிறோம்.

கடவுள் நம்பிக்கையை நிராகரித்து விட்டு மனிதன் வாழ முடியுமாவென் றால், ஸ்டீபன் ஹாக்கிங் போன்ற மகத்தான விஞ்ஞானிக்குத்தான் அது சாத்தியமாகும். சாமானியப் பாமர மக்களுக்குச் சாத்தியமாகாது.

சராசரி மக்களின் வாழ்க்கையைச் சரிசெய்வதற்கு நீதி போதனைகள் உதவி செய்கின்றன. நீதிமன்றங்கள் பாதுகாக்கின்றன. நீதிமான்கள் புத்தி மதி சொல்கிறார்கள். அவற்றின் உச்ச மாக நீதி தேவனாகிய கடவுள்தான் மனிதர்களின் நிரந்தர சரணாலயமாக உள்ளார்.

இவ்வாறு, வலுப்படுத்தும் கடவுள் நம்பிக்கையை இஸ்லாமியர், கிறிஸ் துவர், இந்து, சீக்கியர், பௌத்தர் அனைவருக்கும் பொதுவாக்கி, அந்தந்த மதங்களில் பிறந்திருக்கின்ற பிஞ்சுக் குழந்தைகளின் பசுமரத்து நெஞ்சுக்குள் அடிப்போமானால் அவர்களின் மன வளர்ச்சி துரிதமாக ஊக்குவிக்கப்படும்.

இங்கர்சாலும் ஸ்டீபன் ஹாக்கிங் கும் கடவுள் நம்பிக்கையற்றவராக இருந்தாலும் 50 – 60 வயதுக்குப் பிறகு தான் நாத்திகச் சிந்தனையில் நாட்டம் கொண்டார்கள். அதுவரை சாமான்ய மக்களுக்குப் போதிக்கப்பட்ட கடவுள் நம்பிக்கைதான் அவர்களுக்கும் போதிக்கப்பட்டது.

அதனால், கடவுள் நம்பிக்கை என் பது கண்டனத்திற்குரியதல்ல. பிற் போக்குத்தனம் கொண்டதல்ல. பின்னடைவை ஏற்படுத்தக் கூடிய தல்ல. அவர்கள் சுதந்திரமாக வளர்ந்த பிறகு சுயமாகச் சிந்தித்து நாத்திக ராகவோ, ஆத்திகராகவோ பின்னர் மாற விட்டுவிடலாம்.

நாற்றுப் பருவத்திலேயே அவர் களை இந்தத் திசை நோக்கித் நகர்த்தக் கூடாது என்று அந்த வழித்தடத் தையே இரும்புக் கதவு போட்டு இழுத்து அடைத்து விடுவது அச் சிறுவர்கள்மீது செய்யப்படுகிற வன் முறையாகும். இந்த வன்முறையை எதிர்த்துச் சிறுவர்கள் போராட முடி யாதவர்கள். வயதால் மூத்த பெற் றோர்களைவிடப் பலம்

குறைந்தவர்களை வலுக்கட்டாயமாக இந்த வழிக்கு இழுப்பது வன்முறை அல்லாமல் வேறு என்ன?

தமிழக அரசு 14 ஆண்டுகளுக்குப் பின் மாற்றியமைத்துள்ள புதிய பாடத் திட்டத்தில், வழக்கமாக இடம்பெற்று வந்த கடவுள் வாழ்த்து என்ற தலைப்பு, தூக்கியெறியப்பட்டு விட்டது. அப்பகுதி மொழிப் பாடம் என அமைந்துள்ளது.

முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு முடியவும், இரண்டாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு முடியவும் 'கடவுள் வாழ்த்துப்' பகுதி ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் சென்ற கல்வி ஆண்டு முதலே இடம்பெறவில்லை.



பாடத்திட்டத்தைத் தயாரித்த 30 பேர் கொண்ட தமிழறிஞர்கள், கடவுள் வாழ்த்தை இந்து சமயம் சம்பந்தப்பட்டதாக மட்டுமே புரிந்து கொண்டு, ஒரு சமயத்தை உயர்த்திப் பிடிப்பது தவறானது என்று அச்சப்பட்டிருக்கிறார்கள்.

நமது அரசியல் சாசனம், அரசை செக்யூலர் எனப்படும் சமயம் சாராத அரசு என்று கூறுகிறது. அவ்வாறு சமயச் சார்பற்றது எனச் சொல்கிற பொழுது ஒற்றைச் சமயத்தைத்தான் அரசு சார்ந்திருக்கக் கூடாதே தவிர, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாக இருக்கலாம் எனவும் அது பொருள் படுகிறது.

"உண்டென்றால் அது உண்டு. இல்லையென்றால் அது இல்லை" என்று கம்பர் பாடுவது இந்து மதத்திற்கு மட்டுமா பொருந்துகிறது? 'திங்களைப் போற்றுதும்' என்று இளங்கோ பாடுகிறாரே, அந்தத்


இயல் ஒன்று

கவிதைப்பேழை

எங்கள் தமிழ்

3BUISB

நுழையும்முன்

உலக மொழிகளில் தொன்மையானது நம் தமிழ்மொழி. அது மென்மையும் இனிமையும் வளமையும் உடையது; வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது; காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்வது. அத்தகு தமிழ்மொழியின் சிறப்பை நாமக்கல் கவிஞரின் பாடல் மூலம் அறிவோம்.

"அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்"

–நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

புதிய பாடத் திட்டத்தில்
மொழி வாழ்த்து

திங்கள் என்ன சிவபெருமான் தலையில் சூடியுள்ள திங்களா? 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்று சேக்கிழாரும், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று திருமூலரும் பாடுகின்றனரே, அவை எப்படி மற்ற சமயங்களுக்கு எதிரானவை?

கடவுள் வாழ்த்து என்பதில் சிவனையும் விஷ்ணுவையும் பற்றிப் பாடுகிற பாடல்களும் இந்து சமயத்தில் இருக்கின்றன. அவற்றைத் தவிர்ப்பது தவறல்ல. அதற்குப் பதிலாகக் கடவுளைப் பொதுமைப்படுத்துகிற பிரபலமான பாடல்களைத் தேர்ந்தெடுக்கலாமே.

"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின் மீது தனியரசு ஆணை, பொழுதெலாம் நினது பேரருளின் நெறியிலே நாட்டம், கரும யோகத்தில் நிலைத்திடல் என்றிவை அருளாய், குறி குணம் ஏதுமில்லாதாய், அனைத்தாய்க் குலவிடு தனிப்பரம் பொருளே."

இக்கவிதை ஒரு மதத்திற்குரிய கவிதையா? கடவுள் வாழ்த்தாக இது இடம் பெற்றால் அந்தப் பாடப் புத்தகத்தை இது எப்படிக் களங்கப்

படுத்தும்? உண்மையில், இந்தப் பாடல்தான் அதைப் படிக்கிற மாண வர்களின் சமய ஞானத்தை அவர்கள் பூக்கிற காலத்திலேயே புரிந்து கொள்ளச் செய்யும்.

கடவுள் வாழ்த்து என்கிற பகுதி நீக்கப்பட்டதற்கான காரணத்தைச் சொல்கிற போது பாடத்திட்டத்தின் பிற பகுதிகளில் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர், தாயுமானவர், இராம லிங்கசுவாமிகள், திருநாவுக்கரசர் என அனைத்து அருளாளர்களின் படைப்புகளும் இடம்பெற்றிருப்பதால் கடவுள் பற்றிய சிந்தனைகள் பாடத் திட்டத்தில் கைவிடப்படவில்லை. இடம்தான் மாறியிருக்கிறது.

பாடத்திட்டத்தின் உள் பகுதி களில் இவை இருப்பது என்பது உண்மைதான். ஆனால், நமது மரபு மீறப்பட்டிருக்கிறது. பொழுது சாய்ந்து விட்டால் வீடுகளில் விளக்கேற்றி வைப்பார்கள். காரணம், 'இல்லக விளக்கது இருள் கெடுப்பது'. இது நமது மரபு. இந்த மரபு நமது மாணவர் களின் பாடத்திட்டத்தில் கடவுள் வாழ்த்தாகக் கடந்த 70 ஆண்டுகளாக நீடித்து வந்த மரபாகும். "நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்கிற கடைசி வரி, சைவத்தைப் போற்று கிறது என்பதைச் சமன் செய்ய புத்தம் சரணம் கச்சாமி என்கிற கருத்துடைய பாடலை இணைத்திருக்கலாமே.

எந்தக் கட்டுமானப் பணிகளும் பூமிதேவிக்கு வழிபாடு செய்து அதன் பிறகே தொடங்கப்படுகின்றன. வீடு களுக்குப் புண்ணியார்ச்சனை செய் கிறோம். புதிய வாகனங்களுக்குப் பூசை செய்கிறோம். பிள்ளைகளைப் பள்ளியில் முதன்முதலாக அழைத்துச் சென்று எழுத்தாணியால் நாக்கில் வித்யாரம்பம் செய்கிறோம். இவை யெல்லாம் நமது சமய மரபுகள்.

இந்த மரபுகள் ஆங்கில நாகரிகத் தில் நாம் திளைத்துக் கொண்டிருந்த காலத்திலும் பின்பற்றப்பட்ட மரபு கள். விஞ்ஞானத்தின் உச்சமான சந்திராயனை ஏவுகிறபொழுதுகூட அதற்கான பூசையை நடத்தித்தான் செய்கிறோம். காரணம், மனிதனு டைய முயற்சிகள் அவனுக்கும் தெரி யாமல் பிழையாகிவிடலாம். அத னால், தோல்வியைச் சந்திக்கலாம். அதனைத் தவிர்ப்பதற்காக, தடுப்பதற் காக, தாங்குவதற்காகத்தான் இந்த மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. மாதா கோயில் மெழுகுவர்த்தியால் குத்து விளக்கை ஏற்றுவது சமய நல்லிணக் கமல்லவா?

நமது தமிழக அரசின் புதிய பாடத் திட்டத்தில் 'கடவுள் வாழ்த்து' என்ற பெயரில் அப்பாடத்திட்டம் முந்திய ஆண்டுகளில் உள்ளது போலவே அமைய வேண்டும். அதை இடம் மாற் றுவதோ, சீர்திருத்துவதோ தவறான அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுத் துவிடுவதைப் பற்றித் தமிழக அரசு பரி சீலிக்கலாம். 'ராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகை ஒன்றுதான் இது பற்றிய சுட்டிக்காட்டுக் கட்டுரை ஒன்றை ஜூலை இதழில் வெளியிட்டுள்ளது

அமெரிக்க டாலரில் I Believe in God என்ற வாசகம் எழுதப்பட்டுள் ளதை அமெரிக்க அரசு நீக்கவில்லை. கேரள தேசம் 'கடவுளின் தேசம்' என் பதை நம்பூதிரிப்பாடின் கம்யூனிஸ்ட் ஆட்சியே நீக்கவில்லை. ஸ்ரீவில்லிப் புத்தூர் ஆண்டாள் கோயிலின் கோபுரத்தை அரசு முத்திரையாகக் கொண்டுள்ள தமிழக அரசு ஒரு வேளை அதனை நீக்கிவிடுவதற்கான ஒத்திகையாகக்கூடக் கடவுள் வாழ்த்து நீக்கம் இருக்கலாமோ என்கிற சந் தேகத்தைச் சிலருக்கு ஏற்படுத்துகிறது.

மரபு வேறு, மதம் வேறு. சமயச் சார்பின்மை என்கிற 'செக்யூலர்' கோட்பாட்டைச் சமய சமத்துவமா கவும், சமய நல்லிணக்கமாகவும் நாட்டுவதுதான் சாலச் சிறந்தது.

– **சுதந்திர ஞானி**

மும்மொழிக் கல்விக் கொள்கை!

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

நம் தென்மொழி, தொன்மை மிக்க செம்மொழி. தமிழ் மொழி பயில, மும் மொழிக் கல்விக் கொள்கை அமுல் படுத்த வேண்டும். அதுபோல் தென் மாநிலங்களில் அவர்களின் தாய்மொழி யுடன் இந்தி, ஆங்கிலம் என மும் மொழிக் கல்விக் கொள்கையை நடை முறைப்படுத்திட வேண்டும்.

– **அர. கோ. குப்புசாமி,** சேலம்.

மும்மொழிக் கல்விக் கொள்கை என்பதைத் தமிழகம் மட்டுமல்ல, கர் நாடகம் உள்ளிட்ட மாநிலங்களும் எதிர்த்து வருகின்றன. தூங்குபவரை எழுப்பிட லாம். தூங்குவது போல் இருப்பவரை எழுப்பிட முடியாது என்பதைத் தான் விவாதக் கட்டுரை வெளிப்படுத்துகிறது.

– **ப. மூர்த்தி,** பெங்களூர்.

மும்பையில் மட்டும் உள்ள இரண் டரை லட்சம் தமிழர்களில் மராத்தியை விட, இந்தி மட்டும் பேசுகின்றனர். எனது 28 வருட வட மாநில, வெளி நாட்டு அனுபவத்தில் அந்தந்த மாநில மொழியோ, இந்தியோ பேசிடாமல் ஜீவிக்க இயலாது. இதற்காக நான் இந்தித் திணிப்பை ஏற்கின்றேன் என்ற கருத்து எனக்கில்லை. இந்தியைத் திணித்தால்தான் கஷ்ட மொழியாகும். இஷ்ட மொழியாக (விருப்பமாக) மாண வர்கள் படித்தால் எதிர்காலத்தில் பல்வேறு வகைகளில் உதவும்.

– **வே. முத்துக்கிருஷ்ணன்,**
தாராபுரம்.

மும்மொழித் திட்டம் முன்னேற்றத் துக்கும், ஒவ்வொரு இந்தியக் குடி மகனுக்கும் இன்றியமையாததாகும். மும்மொழிகளைக் கற்பிக்கும் நமது அண்டை மாநிலங்களைப் பின்பற்றித் தமிழகமும் தாய்மொழித் தமிழை இனி யாராலும் எந்தக் காரணத்தினாலும் தவிர்க்க முடியாத ஒரு நிலையை உரு வாக்கிட வேண்டும். மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை நமக்கு நிச்சயம் பயன் தரும்.

– **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

ஒரு மனிதன் கூடுதலாக ஒரு மொழி கற்றால், அவன் இரண்டு மனிதனுக்குச் சமம்! தமிழ், தமிழ் எனத் தமிழனை மூளை மழுங்கச் செய்வதில் திராவிடக் கட்சிக் கும்பல் வெற்றி பெற்று, தங்கள் குடும்பத்தினரைக் கோடிகளில் புரளச் செய்தது கண்கூடு!

– **மு. சுரேஷ்குமார்,** நங்கைநல்லூர்.

அடிப்படையில் மொழிக்கொள்கை இரண்டு என்பது போதுமானது. பிறி தொன்றோ, அதனையும் கடந்தோ வேற்றுமொழி பயில – அறிய விரும்பு வோர்க்கு எந்த ஓர் அரசும் உதவிடல் முறையாகும். மொழி மீதான ஆர்வம் சரியாகலாம். வெறிதான் கூடாது.

– **எஸ். ஜி. இசட்கான்,** திருப்பூர்.

பக்கத்து மாநிலங்களில் இந்தி மொழிக்கு எதிர்ப்பில்லை. பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படுகிறது. இதனால் அவர்களின் தாய்மொழி அழிந்துவிடும் என்று எண்ணுவதில்லை. இந்தி பேசும் வடமாநில மக்கள் தென் மாநிலங் களுக்கு வேலையின் நிமித்தம் வந்திருக் கிறார்கள். இதனால் இரு சாராரும் பயனடைவதுடன் ஒருவர் மொழியை ஒருவர் கற்றுக் கொள்கிறார்கள். மேலும் ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது நல்லதுதானே!

– **மு. கணபதி,** பெருந்துறை.

ஆர்வம் இருப்பின் தாய்மொழி யோடு இரண்டல்ல, எத்தனை மொழி

களையும் கற்றுத் தேர்வதில் தவறொன்றுமில்லை! கட்டாயமாகப் படிக்காமல் விரும்பிப் படிக்கும் விழைவை மனதில் உருவாக்கிப் பன்மொழி பயில முயற்சிப்போம்!

– **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

மும்மொழித் திட்டத்தில் இந்தி கட்டாயப்பாடம் இல்லாமல் ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. இந்தியாவில் அதிகம் பேசும் மொழியாக இந்தி இருப்பதால், அரசு அலுவலகங்களில் அந்தந்த மாநில மொழி உடன் இந்தியும் எழுதப் படுவது தவறல்ல!

– ப. அடைக்கலம்,
திருவில்லிப்புத்தூர்.

130 கோடிப்பேரில் 60 கோடிக்கும் அதிகம்பேர் இந்தியில் படிப்பதும், எழுதுவதும் போல் தமிழ் மக்களும் இந்தியில் தேர்ச்சி பெறவேண்டும். மும்மொழிக் கொள்கை வேண்டும். நாம் ஒரே தேசமாக இருப்பதால்தான் காவிரி நீர், பெரியார் அணை நீர், பாலாற்றில் தடுப்பணை கட்டுவதை எதிர்க்க முடிகிறது. பழையபடி 200 துண்டாக எனக்குச் சம்மதமில்லை. மும்மொழிக் கொள்கை வேண்டும்.

– **தி.ஈ.தி. ஈசுவர்மூர்த்தி,**
திருவில்லிப்புத்தூர்.

இந்தியை விருப்பப் பாடமாக மட்டுமே கொண்டு வரலாம். நம் நாட்டில் உள்ள ஒருவர் ஜெர்மனியில் பணிபுரிய வேண்டுமென்றால், ஜெர்மனி மொழியைக் கற்க வேண்டியது அவசியம். அதைப்போன்றே வடநாட்டில் வேலை தேடுவோர் இந்தி கற்றுக் கொள்ளலாம். மும்மொழித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் இந்தி மொழியைக் கட்டாயமாக்குவது மீண்டும் ஒரு மொழிப் போராட்டத்திற்கே வழிவகுக்கும்.

– **தி. குமார ராஜா,**
உடுமலைப்பேட்டை.

இந்திய நாட்டுக்குத் தேவை மும்மொழிக் கொள்கை. இந்தியை வேற்று மொழியாகப் பார்க்கக் கூடாது. ஆனால், 1 – 8 வகுப்புகளுக்குத் தாய்மொழிக் கல்வி வேண்டும். ஆகவே, 8–ஆம் வகுப்புக்கு மேல் வேறு ஒரு மொழியைக் கற்கலாம். 10 – 15 வயது வரை குழந்தை குறைந்தது 5 மொழிகள் வரை படிக்கத் திறமை உண்டு என்பது உளவியலார் கருத்து. எனவே, மும்மொழித் திட்டம் தமிழகத்திற்கு வேண்டும்.

– **தி. இராதாகிருஷ்ணன்,** அரூர்.

இந்தி கற்பித்தலை அமல் செய்திருக்கும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா முதலிய மாநிலங்களில் அவர்களது தாய்மொழி அழியவில்லை. கல்வித் திறனும் மங்கவில்லை. ஆனால், தமிழகத்தில் கல்வித்திறன் வெகுவாக மங்கியுள்ளது. மும்மொழித் திட்டத்தை எதிர்ப்பதன் மூலம் இந்தி மொழியைக் கற்காததால், தேசிய அளவில் நடைபெறும் தேர்வுகளில் பின்னடைவு அடைந்துள்ளோம்.

– **த. நாகராஜன்,** சிவகாசி.

தமிழகத்தைச் சேர்ந்த மாணவன் கர்நாடகாவில் மருத்துவம் படிக்கின்ற போது, கன்னடம் அவசியம் தேவைப்படும். அதேபோல் உ.பி.யில் படிக்கச் சென்றால் இந்தி மொழி தேவைப்படும். வேலை வாய்ப்புக்கும் அப்படியே. ஆனால், மும்மொழிக் கொள்கையில் கட்டாயப்படுத்தக்கூடாது. அது விருப்ப மொழியாக இருக்க வேண்டும். மூன்றாவது மொழியை அவரவர் தேவைக் கேற்பப் படிப்பது வருங்காலச் சந்ததிக்கு உகந்தது ஆகும்.

– **ஏ.ஏ. பாலசுப்பிரமணியம்,**
கோவை.

இந்தி என்றாலே அதை உடனே எதிர்க்க வேண்டுமென்ற மனநிலையில் தான் தமிழக அரசியல் தலைவர்கள் உள்ளனர். இவர்களும் இவர்கள் பிள்ளைகளும் இந்தி படித்துப் பயன் பெறுவார்கள். ஆனால், தமிழ் மக்கள் மேல் இந்தியைத் திணிக்காதே என்று முழங்குவார்கள். வட இந்தியாவில்தான் பெரும் நிறுவனங்களும், கம்பெனிகளும், தொழிற்சாலைகளும் உள்ளன. இங்கே படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல் நம் இளைஞர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்றால் இந்தி மொழி தெரிந்திருக்க வேண்டும். நம் இளைஞர்கள் இந்த மொழிப் பிரச்சனையில் சிக்காமல் இந்தி மொழியைக் கண்டிப்பாகப் பயில

வேண்டும். மீண்டும் இந்தி மொழியைப் பள்ளிகளில் விருப்பப்பாடமாகக் கொண்டுவர வேண்டும்.

– **பே. சண்முகம்,** செங்கோட்டை.

ஆஸ்திரேலியாவிலிருந்து சென்னை ஐ.ஐ.டி. வந்திருந்த ஓர் ஆராய்ச்சியாளர் பேசிய தமிழ், ஆளுக்கும் பேச்சிற்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது அனைவரையும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதையெல்லாம் பார்க்கும் போது, தமிழ் மாணவர்களுக்கு இந்தி கட்டாயம் வேண்டும். நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பது நிதர்சன உண்மை. ஆகவே, மாணவர்களுக்கு எந்த மொழியையும் கற்கும் வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

– **சி. பிரகாஷ்,** முத்தரசநல்லூர்.

மும்மொழிக் கல்விக் கொள்கை என்பது காலத்தின் கட்டாயம். ஏனைய நாடுகளைப் போல் ஒரே மொழி, ஒரே மதம் என்பது இந்தியாவில் இல்லை. ஒரு மொழியை அதிகப்படியாகக் கற்பதால் நன்மையே அன்றித் தீமை ஏற்படாது. ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியில்தான் கற்பிக்க வேண்டும். ஆரம்பக் கல்விக்கு அடுத்த நிலையில் உலகத் தொடர்புக்கு ஆங்கில மொழியையும், இந்தியத் தொடர்புக்கு இந்திய மொழிகளில் ஒன்றையும் கற்பது சாலச் சிறந்தது. எனவே, மும்மொழிக் கல்விக் கொள்கைதாம் ஏற்புடையது.

– **புலவர் கருமலைத் தமிழாழன்,** ஒசூர்.

நம் தாய்மொழி நாம் இருக்கும் இடத்தில் மட்டும்தான் உதவும். எனவே, வேறு இடங்களுக்குச் சென்றால் அங்குள்ளவர்கள் மொழி நமக்குத் தெரியாது என்பதால், அம்மொழியினைக் கற்க வேண்டிய கட்டாயம். அதேபோல் நாம் செல்லும் இடங்களில் நம் கருத்துக்களைச் சொல்ல எந்த மொழியினையும் கற்கலாம். அதில் மும்மொழிக்

மறுப்புரை

ஜூலை 2019 இதழில் 'திருக்குறளில் பாலியல் வன்முறை இல்லை' எனத் திரு. க.சி. அகமுடைநம்பி கூறியுள்ள கருத்து மறுப்புக்குரியது. உதாரணத்திற்கு ஒன்று மட்டும் குறித்துள்ளேன்.

''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்

தீமை புரிந்தொழுகு வார்'' (143)

என்ற குறட்பொருளே மறுப்புக்குரிய சான்று.

நம்பிய நண்பரின் மனைவியிடம் விருப்பம் கொண்டு தகாத முறையில் ஒழுக்கம் தவறினால் அவன் உயிருடன் இருந்தாலும் செத்தவனே என்கிறது குறள்.

இதில் தெளிந்தார் இல் தீமை புரிதல் என்பது, பழகிய வீட்டில் துரோகம் செய்தல் ஆகும். இந்தத் துரோகம் காமவெறியான பாலியல் வன்முறை உணர்வால் தூண்டப்பட்ட தீமையன்றோ!

இக்குறள் நீதி சொல்வதற்காக அதாவது, இப்படி இருக்கக் கூடாது என்பதற்காகக் கூறப்பட்டது மட்டும் அன்று. இப்படிச் சமூகத்தில் இருந்ததை மனதில் கருதித்தான் வள்ளுவர் தான் ஓர் எழுத்தாளன் என்ற சமூகப் பிரக்ஞையுடன் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இப்பிறனில் விழைந்ததில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற நேர் சீரான பண்பு சிதைந்து விட்டதையும் உணர முடிகிறது. ஆடவன் பிறனில் விழையும்போது தன் மனைவிக்கும், அப்பிறனின் மனைவி பிறனை மறுக்காமல் ஏற்கும்போது தன் கணவனுக்கும் துரோகம் செய்கிறார்கள் என்பது கருத்து. ஆக, பாலியல் வன்முறை பற்றிய சிந்தனைத் துளிர்ப்பு குறளில் உண்டு என்றே கூறலாம்.

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

கொள்கை நமக்கு உதவும் என அறிந்து கற்பது நமக்கு நல்ல பலனைத் தரும். அதற்காக நம்மை ஒரு மொழியினைக் கற்கக் கட்டாயப்படுத்தக்கூடாது. கட்டாயப்படுத்திக் கொடுக்க மொழி ஒன்றும் மாத்திரையோ, மருந்தோ இல்லை.

– **உஷா முத்துராமன்,** திருநகர்.

மும்மொழித் திட்டம் வேண்டும் தான். ஆனால், அதில் ஒன்று இந்தியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்பது தனி மனிதனின் விருப்பம். குறிப்பிட்ட ஒரு மொழியைத் தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்தான் அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் இந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் பிற மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கையின் அடிப்படையில் சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியைக் கற்கும்படி ஏன் வற்புறுத்துவதில்லை? மேலும் இந்திய அரசியலமைப்போ அல்லது எந்த ஓர் இந்தியச் சட்டமோ தேசிய மொழி என்று எதனையும் வரையறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

அரசு தம் அதிகாரங்கள் மூலம் வேற்று மொழிகளைத் தங்கள் மீது ஆதிக்கம் செலுத்த வைப்பதை, அதாவது கட்டாயமாகத் திணிக்கப்படுவதையே தமிழர்கள் எதிர்க்கிறார்கள், மறுக்கிறார்கள். தமிழக அரசு எந்த வொரு விருப்பிற்கும், வெறுப்பிற்கும் இடம் தராது, தமிழகத்திற்கு ஏற்ற மொழிக்கொள்கை எது என்பதை ஒரு கருத்துக் கேட்பு நடத்தி, அதில் 3–இல் 2 பங்குப் பெரும்பான்மையோரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு முடிவைத் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிச் சட்டமாக்கி அதையே கடைப்பிடித்து வர வேண்டும்.

– **மேலை. தமிழ்க்குமரன்,**
முத்தரசநல்லூர்.

மும்மொழிக் கல்விக் கொள்கை ஏற்றுக்கொள்ளப் பட வேண்டிய விஷயமே. மும்மொழிக் கொள்கையில் தாய்மொழியை முதலிடமாகவும், ஆங்கிலம் இரண்டாவது இடத்திலும், மூன்றாவது இந்தியையும் வைத்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைப் பலவந்தமாகத் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவில் உள்ள சில மாநிலங்களில் மும்மொழியை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மும்மொழிக் கொள்கையைக் கைவிடாமல், யாருக்கும் எவ்விதமான பாதகங்களும் இல்லாமல் நாட்டின் ஒற்றுமையை மேம்படுத்துவதே ஒவ்வொரு குடிமகனின் கடமை.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

தமிழ் மற்ற மாநிலங்களில் பயிற்றுவிக்காத நிலையில் தமிழர்கள் இந்தியைப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் பள்ளிகளில் இந்தி கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்தியை எதிர்க்கும் கட்சிக்காரர்களின் பிள்ளைகள் இந்தியைப் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அரசுப்பள்ளிகளிலும் இந்தி கற்பிப்பதனால் தமிழுக்கு எதிரான விளைவுகள் வரப்போவதில்லை. தமிழ்நாட்டிற்குள்ளே பயணித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு இந்தியைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், மற்ற மாநிலங்களுக்குப் பயணம் செய்யும்பொழுது இந்தி அறியாததன் விளைவுகளை அனுபவிக்க நேரிடும். எனவே, கூடுதலாக ஒரு மொழியான இந்தியைக் கற்பது தவறில்லை.

– **என்.ஆர்.ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.

ஏதற்காக இந்தி படிக்க வேண்டும்? இந்தி பேசும் இடங்களிலும் ஆங்கிலம் செல்லும். ஆனால், இந்தி ஆங்கிலத்தின் பக்கத்தில்கூட வர முடியாது. மூன்று மொழிகளைப் படிப்பதைவிட, தாய் மொழி, ஆங்கிலம் என இரு மொழிகள் படித்தால் போதும், நுண்கலைகளைப் படிக்கலாம். எவரோ இந்திக்காரர் சொன்னதையெல்லாம் தலையாட்டிப் பொம்மைகள் போல் நாம் கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. அது முட்டாள்தனத்திலும் அதி மூடத்தனம்.

– **ம.பெ. சுதந்திரக்குமார்,** சென்னை



வாஸ்து சாஸ்திரம்

ஓர் அறிமுகம்



நம் நாட்டு வாழ்வியல் சாத்திரங்கள் பலவற்றில் குறிப்பிடத்தக்கது 'மனைநூல் சாத்திரம்.' இது வடமொழியில் 'வாஸ்து சாஸ்திரம்' என்று வழங்கப்படுகிறது. தமிழில் மனைநூல், மனையடி சாத்திரம், மய நூல் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.

மனைநூல் சாத்திரமானது சோதிட சாத்திரத்தின் ஓர் அங்கம் என்று கூறலாம். அதேபோல இதை ஓர் அறிவியல் துறை என்றும் சொல்லலாம். இதுவும் கற்கக் கற்க விரிந்து கொண்டே போவதாகும். இதை ஏற்றுக் கொள்வோரும் உண்டு, பழித்துப் பேசுவோரும் உண்டு.

''வாழ்வு தரும் வாஸ்து'' என்ற நூலில் திரு. எண்ணம் மங்களம் பழநிசாமி அவர்கள், ''பூர்வ புண்ணியம் + பாக்கிய பலம் இருந்தால், வாஸ்துவின் அதிர்ஷ்ட அமைப்புப்படி வீடு கட்ட முடியும் அல்லது கட்டிய வீட்டில் மாற்றங்கள் செய்ய முடியும் அல்லது இயற்கையாகவே நல்ல வீடுகள் அமைந்துவிடும்'' என்று கூறுகிறார். எனினும் வாஸ்து பற்றி அறிந்து கொண்டால், 'இறையருளால் விதியை மதியால் வெல்லலாம்' என்று முன்னோர் கூறியபடி தீங்குகள் நேராவண்ணம் நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

மனையடி சாத்திரத்தில் வீட்டின் நில வடிவ அமைப்பு, அடி அளவு, வீடு அமையும் திசைகள், எந்தெந்தத் திசைகளில் என்னென்ன அறைகள் அமையலாம்? வாயில்கள், கதவுகள் – சாளரங்கள் எங்கெங்கு அமையலாம்? வீட்டின் உள் அமைப்பு, வெளி அமைப்பு, தெருப்பார்வை, முற்றம், மாடி, பால்கனி, திண்ணை, மாடிப்படிகள் அமைவிடம், நீர்நிலை அமைவிடம், கழிப்பறைகள் அமைவிடம், வண்டிகள் நிறுத்துமிடம், மாட்டுத் தொழுவம், தோட்டம், மரங்கள் எங்கெங்கு இருக்க வேண்டும் என வீட்டு அமைப்புக் கூறுகள் வளர்ந்து கொண்டே செல்லும்.

வாஸ்து சாத்திரம், வீட்டிற்கு, தொழிற்சாலைகள், கடைகள், பிற தொழில் நிறுவனங்கள் முதலியவற்றிற்கு எனப் பலவகையாக விரிந்துள்ளது. நம் தேவைக்கேற்ப இவற்றை அறிந்து நாம் கட்டடங்களைக் கட்டி வாழவும், தொழில், பணி செய்யவும் வேண்டும்.

மனைநூல் சாத்திரத்தில் நமது வீடு அமைய உள்ள இடம் நாற்புறமும் சமமான சதுர வடிவம் அல்லது நீள் சதுரம் என்னும் செவ்வக வடிவம் இருப்பதே நல்லது என வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

அதேவேளை சீன வாஸ்து சாஸ்திரமான பெங்சூயியில் வட்ட வடிவம், அரை வட்ட வடிவம் முதலிய இட அமைப்புகள் சிறப்பானவை எனப்படுகின்றன.

வீடு கட்டும் இடம் ஒழுங்கில்லாத இடமாக இருந்தால், அந்த இடத்தை நாம் சரி செய்து கொள்ள வேண்டும். அதனால் நமது இடம் சிறிது இழக்கப்பட்டாலும் பரவாயில்லை. ஒழுங்கான வடிவத்தில் இருப்பதுதான் முதன்மையானது.

ஒழுங்கற்ற வடிவமாக இருப்பதில், வடகிழக்குத் திசையில் மட்டும் கிழக்கிலோ, வடக்கிலோ வெளிப்புறம் நீண்டதாக இருப்பது நல்லதாகும். அதேவேளை உள்ளே ஒடுங்கியதாக இருத்தல் நல்லதல்ல.

திசைகள் நான்கு என்பது உலக வழக்கு.

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

இவற்றோடு மூலைத் திசைகள் நான்கைச் சேர்த்து எட்டு என்போம். ஆனால், வாஸ்து சாஸ்திரத்தில் 16 திசைகள் உள்ளன. இவற்றை அறிவதற்கு முன், திசைகளுக்கு வாஸ்து சாத்திரத்தில் கூறப் படும் பெயர்களை அறிந்து கொள்ள வேண்டும்.

நேர்த் திசைகளான கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு இவற்றுடன் மூலைத் திசைகள் நான்கு உள்ளன. வடகிழக்குத் திசை ஈசான்யம், நீர் மூலை, சனிமூலை எனப்படுகிறது. தென்கிழக்குத் திசை அக்னி மூலை, தேஜஸ் மூலை, ஆக்நேயம் எனப்படும். தென்மேற்குத் திசை நிருதி அல்லது நைருதி, கன்னி மூலை எனப்படுகிறது. வட மேற்குத் திசை வாயு மூலை, காற்று மூலை, வாயவியம் எனப்படுகிறது.


மூலைத் திசைகளை மூலையின் இருபுறமு மாகக் கணக்கிட்டால் இரண்டு திசைகள் ஆகி ன்றன. சான்றாக, ஈசான்யத்தில் கிழக்கு ஈசான் யம் என்றும், வடக்கு ஈசான்யம் என்றும் இரண் டாகும். இந்த வகையில்தான் 16 திசைகள் ஆகின்றன.

ஒரு சதுரம் அல்லது செவ்வக வடிவத்தில் 360 பாகைகளைப் பிரித்தால், ஒவ்வொரு திசை யும் 90 பாகை இருக்கும். இவற்றில் கிழக்குத் திசை 25 + 25 என 50 பாகைகளும், கிழக்கு எல்லையின் வடகிழக்கில் 20 பாகையும், கிழக்கு எல்லையின் தென்கிழக்கில் 20 பாகையுமாக மொத்தம் 90 பாகைகள் வருகின்றன. இவ்வாறே நான்கு பக்கமும் 90 பாகைகளாக மொத்தம் 360 பாகைகள் வருகின்றன.

இவற்றில் சுப இடம், அசுப இடம் என இரண்டு உள்ளன. கிழக்குத் திசையில் கிழக்கு ஈசானம் 20 பாகையும், அதையொட்டியுள்ள கிழக் கின் சரிபாதிக்கும் வடக்கே உள்ள 25 பாகையும் சுப இடங்கள். கிழக்குச் சுப இடத்தையடுத்து கிழக்கின் சரிபாதிக்குத் தெற்கில் உள்ள 25 பாகை கிழக்கு அசுப இடமாகும். கிழக்கு அக்னி யும் அசுப இடமாகும்.

தெற்குத் திசையில் உள்ள அக்னி 20 பாகை சுப இடம். அதையொட்டி உள்ள தெற்குத் திசை யின் சரிபாதிக்குக் கிழக்கில் 25 பாகை தெற்குச் சுப இடமாகும். அதையடுத்துள்ள தெற்குத் திசை 25 பாகை தெற்கு அசுப இடமாகும். தெற்கு நிருதி 20 பாகையும், மேற்கு நிருதி 20 பாகையும் அசுப இடங்களாகும். அதையடுத்து மேற்குத் திசையில் சரிபாதிக்குத் தெற்கில் உள்ள 20 பாகை மேற்கு அசுப இடமாகும்.

மேற்குத் திசையில் நடுப்பகுதிக்கு வடக்கி லுள்ள 25 பாகை மேற்கு சுப இடமாகும். அதை யடுத்துள்ள மேற்கு வாயு மூலை 20 பாகை சுப இடமாகும். அடுத்து வடக்குத் திசையில் வடக்கு வாயு 20 பாகையும், அதையடுத்துள்ள வடக்கின் சரிபாதிக்கு மேற்கிலுள்ள 25 பாகையும் அசுப இடங்களாகும். அடுத்து வடக்கு நடுப்பகுதிக்குக் கிழக்கிலுள்ள 25 பாகை வடக்கு சுப இடமாகும். அடுத்துள்ள வடக்கு ஈசான்யம் 20 பாகை சுப இடமாகும். இவற்றைப் படத்தில் தெளிவாகக் காணலாம்.



இந்தச் சுப இடங்களில் வாசல்கள் வைத்துக் கொள்வது நல்லதாகும். அசுப இடங்களில் வாசல் வைப்பது கெடுபலன்களைக் கொடுக்கும். கிழக் குப் பார்த்த வீட்டிற்குக் கிழக்கு ஈசான்யத்திலும், தெற்குப் பார்த்த வீட்டிற்குத் தெற்கு அக்னியிலும், மேற்குப் பார்த்த வீட்டிற்கு மேற்கு வாயுவிலும், வடக்குப் பார்த்த வீட்டிற்குக் கிழக்கு ஈசான்யத் திலும் வாசல்கள் வைத்துக்கொள்வது நல்ல பலனைக் கொடுக்கும்.

மாடிப்படிகள் வீட்டின் வடமேற்கு அல்லது தென்கிழக்குத் திசைகளில் அமைக்க வேண்டும். வீட்டின் உட்புறமானாலும், வெளிப்புறமானாலும் வடகிழக்கிலும், தென்மேற்கிலும் அமைக்கக் கூடாது.

வீடுகளில் ஈசான்யம் என்னும் வடகிழக்குத் திசையில் கூடம் (ஹால்), வரவேற்பறை, படிப்பறை, பூசையறை முதலியன அமைக்கலாம். தென் கிழக்குத் திசை அறை எப்போதும் சமையல் அறை யாகப் பயன்படுத்த ஏற்றதாகும். அக்னி மூலையில் சமையலறையும், அடுப்பும் வைக்க வேண்டும். அதையொட்டி மேற்கில் பொருள்கள் வைப்பறை அமைக்கலாம். சமையலறையை ஒட்டி வடக்கிலோ, மேற்கிலோ உணவு உண்ணும் அறை அமைக்கலாம்.

அப்படித் தென்கிழக்கு அக்னி மூலையில்

சமையலறை அமைக்க முடியாத நிலையில், வட மேற்கு வாயு மூலை அறையில் சமையல் அறை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், அந்த அறையில் தென்கிழக்கு மூலையில் அடுப்பு வைத்துச் சமைக்க வேண்டும்.

தென்மேற்கு அறையும், வடமேற்கு அறையும் படுக்கை அறையாக அமைத்துக் கொள்ளலாம். தென்மேற்கு அறைக்கோ, முழு வீட்டிற்கோ எப்போதும் தென்மேற்கு மூலையில் கதவு, சன்னல்கள் வைக்கக்கூடாது. ஏனெனில், நம் நாட்டில் தென்மேற்குப் பருவக்காற்று மிகவும் வேகமாக வீசுவதுடன், உடல் நலனையும் தாக்குவதாக இருக்கும்.

தென்மேற்குத் திசை அறை மற்ற அறைகளை விட மேடாக அல்லது சமமாக இருக்க வேண்டும். தாழ்வாக இருக்கக்கூடாது. அதேபோல், வீட்டிற்கு வெளியேயும் தென்மேற்குப் பகுதி உயரமாக இருக்க வேண்டும். தென்மேற்குத் திசையில் மேடாகவும், அதைவிடச் சற்றுத் தாழ்ந்ததாக அக்னி மூலையும், அதைவிடச் சற்றுத் தாழ்வாக வாயு மூலையும், எல்லா இடங்களையும் விடத் தாழ்வாக ஈசான மூலையும் இருக்க வேண்டும்.

இவ்வாறு இல்லாமல் எல்லா அறைகளும் சமமான அளவில் இருக்கலாம். ஆனால், வெளியில் காலியிடத்தில் ஈசான்ய மூலைப்பகுதி தாழ்வாகவும், கட்டடம் இன்றிக் காலியான இடமாகவும் இருத்தல் நல்லது. இந்தப் பகுதியில் நீர்நிலைகளான கிணறு, ஆழ்குழாய்க்கிணறு, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியன இருக்கலாம். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தென்மேற்குத் திசையான நிருதியில் இருக்க வேண்டும்.

பொதுவாக, சாலை அல்லது தெருவைவிட, வீடும் வீட்டுக் காலியிடமும் உயரமானதாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் மழைநீர் வீட்டில் தேங்காமலும், வீட்டின் உள்ளே புகுந்துவிடாமலும், வடிகாலில் வெளியேறும்.

கழிப்பறைகள் வடமேற்குத் திசையில் அல்லது தென்கிழக்குத் திசையில் இருக்க வேண்டும். வீட்டினுள்ளும் அறைகளில் இத்திசைகளில் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், தென்மேற்குத் திசையில் கழிப்பறை அமைக்கக்கூடாது.


வீடு கட்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் தெருக்குத்து அல்லது தெருப்பார்வை என்பது மிகவும் முக்கியமானது. வீட்டின் உள் அமைப்புகளுடன், வீட்டிற்கு வெளியே உள்ள அமைப்புகளும் நன்றாக இருத்தல் வேண்டும். வீட்டுமனையின் உள்ளேயும் வெளியேயும் நன்றாக உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து வீடு கட்டுவதே உத்தமம். தீய அமைப்புள்ள இடத்தைத் தவிர்ப்பதே நலம்.

ஒரு மனையின் நான்கு புறத்திலும் நல்ல, தீய தெருபார்வைகள் உண்டு. வீட்டின் அல்லது மதிற்சுவரின் ஏதேனும் ஒரு பாகத்தை ஒரு தெரு பார்த்தால், அது தெருப்பார்வை என்கிறோம். அதாவது, தெருவின் போக்கில் வீடு குறுக்கிடுதல் அல்லது ஒரு தெருவின் முடிவில் எதிர்ப்புறமாக வீடு இருத்தல் எனலாம். இதனைப் படத்தில் தெளிவாகக் காணலாம்.

ஒரு வீட்டின் வடக்குத் திசையிலிருந்து ஒரு தெரு தெற்குப் பார்த்து, அவ்வீட்டின் மதிற்சுவரையோ, இடத்தையோ, வீட்டையோ கிழக்கு ஓரமாகப் பார்த்தால், அது சுபத் தெருப்பார்வையாகும். அதேபோல, வீட்டின் கிழக்கிலிருந்து ஒரு தெரு, அவ்வீட்டின் வட கடைசியைப் பார்த்தால் அது சுபத் தெருப்பார்வையாகும்.

ஒரு வீட்டின் தெற்கில் ஒரு வீட்டின் மதிலையோ, வீட்டையோ, இடத்தையோ கிழக்கு ஓரத்தில் பார்த்தால் அது சுபப்பார்வை. அதேபோல், மேற்கிலிருந்து ஒரு தெரு, வீட்டின் மேற்குத் திசையின் வட கடைசியைப் பார்த்தால் அது சுபப் பார்வையாகும். இந்த அமைப்புகள் அந்த வீட்டிலுள்ளோருக்கு நல்ல பலன்களைக் கொடுக்கும்.

சுபமான தெருப் பார்வைகள்




இதுவே, கிழக்கிலிருந்து ஒரு தெரு, வீட்டின் கிழக்கு மதிற்சுவரையோ, வீட்டையோ, இடத்தையோ, வீட்டின் தெற்கு ஓரத்தில் அல்லது தெற்கிலிருந்து ஒரு தெரு, வடக்கு முகமாக வீட்டின் மேற்கு ஓரத்தில், அல்லது மேற்கிலிருந்து ஒரு தெரு, வீட்டின் மேற்குத் திசையின் தெற்கு ஓரத்தில் அல்லது வடக்கிலிருந்து ஒரு தெரு

தென்முகமாக, வடக்குச் சுவரின் மேற்கு ஓரத்தைப் பார்ப்பது அசுபப் பார்வைகளாகும்.

இவ்வாறு அசுபப் பார்வை உள்ள வீடுகளை வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். அல்லது, அவ்வீட்டில் வாழ்பவர்கள் வாஸ்து வல்லுநர்களின் ஆலோசனைப்படி அவ்வீட்டில் உரிய மாறுதல்களைச் செய்து கொள்ளுதல் வேண்டும். இல்லாவிடில் அசுபப் பார்வையால் தீங்குகளை எதிர்கொள்ள நேரிடும்.

அசுபமான தெருப் பார்வைகள்



இவையன்றி, ஒரு வீட்டின் அகல நீளங்களுக்கான அடிக்கணக்கு மிகவும் முக்கியம். எத்தனை அடி அளவில் வீடுகள், அறைகள் கட்டுவது நல்லது என்பதும், எத்தனை அடி அளவுகள் தீய பலன்களைத் தருபவை என்பதும் வாஸ்து நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை சாதாரணமாக நாட்காட்டிகளிலேயேகூட அட்டையின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவற்றைப் பார்த்து நமக்குத் தேவையான மற்றும் நமக்கு ஏற்ற அளவுகளில் நல்ல பலன்களைத் தரும் அளவுகளைத் தேர்ந்தெடுத்து வீடுகளையும், கடைகளையும், தொழிலகங்களையும், பிற கட்டடங்களையும் கட்டிக் கொள்ளலாம்.

சான்றாக, 6 அடி நன்மை உண்டு. 7 அடி மத்திம பலன், தரித்திரம், 8 அடி ராச்சியம் உண்டு, 9 அடி செல்வம் சிதையும், 10 அடி பாலும் சோறும் பெருகும். 16 அடி செல்வம் செழிக்கும், 17 அடி நாளுக்கு நாள் வளர்ச்சி, 18 அடி நஷ்டம் காட்டும், 19 அடி புத்திரர் சோகம் என இப்படிப் பட்ட அடிக்கணக்குப் பலன்கள் பல கூறப்பட்டிருக்கும். இவற்றை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

வீட்டின் மதிற்சுவரானது, மேற்கு மற்றும் தெற்குப் பக்கம் உயரமாகவும், கிழக்கு மற்றும் வடக்குப் பக்கம் அதைவிடச் சற்றுத் தாழ்வாகவும் இருத்தல் வேண்டும். வடக்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் மேற்கு மற்றும் தெற்குப் பகுதியைவிட மதிற்சுவர் உயரமாக இருத்தல் கூடாது.



வீட்டிற்கு வெளியே கிழக்கு, வடக்குத் திசைகளில் நீர் நிலைகள், நீரோடும் ஆறு, ஓடை, குளம், ஏரி, கடல் முதலியன இருத்தல் நல்லது. மேற்கு மற்றும் தெற்குத் திசைகளில் நீர் நிலைகள் இல்லாமல், மலைகள், மேடான இடங்கள் இருத்தல் நல்லது.

மதிற்சுவருக்கும் வீட்டிற்கும் இடையேயான காலி இடமானது, மேற்கில் உள்ள இடத்தைவிடக் கிழக்கிலும், தெற்கில் உள்ளதை விட வடக்கிலும் அதிகமாக இருக்க வேண்டும்.

கதவுகள், சாளரங்கள் அமைக்கத் தேவையான மரங்கள் குற்றமில்லாத மரங்களிலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். அத்தி, அரசு, ஆல், இச்சி, இலவு, முருங்கை, இலந்தை, சிறுசின்னி, புரசு, விளா, மகிழ், இலுப்பை, வெண்குட்டை முதலான மரங்கள் வீட்டு வேலைக்குக் கூடாது.

மேலும் கோவில் மரங்கள், தீப்பட்ட மரங்கள், கொடிகள் சுற்றிப் படர்ந்த மரங்கள், புழுக்கள் சேர்ந்த மரங்கள், வண்டு துளைத்த மரங்கள், காற்றில் சாய்ந்த மரங்கள், சுடுகாட்டில் வளர்ந்த மரங்கள், பாழ் மனையில் வளர்ந்த மரங்கள், வேர் அறுந்த மரங்கள் முதலியன வீட்டு வேலைகளுக்கு ஆகாதவை.

கோவில்களுக்கு நாவல் மரக்கதவு நல்லது. வீடுகளுக்குத் தேக்கு, வேம்பு, இலுப்பை, தென்னை முதலிய மரங்கள் நல்லவை. அவரவர் வசதிக்கேற்ப நல்ல மரங்களைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு, வாஸ்து சாஸ்திரம் ஒரு வீட்டின் அல்லது பிற கட்டடங்களின் ஒவ்வொரு பாகத்திலும் எவையெவை எப்படி எப்படி இருக்க வேண்டும் என்று சொல்கிறது. இது மிகவும் விரிவானதாகும். இங்கே இடம் கருதி மிகச் சுருக்கமான செய்திகளே சொல்லப்பட்டுள்ளன. புதிதாக வீடு கட்டுவோரும், வீடுகளில் மாற்றம் செய்ய விரும்புவோரும் வாஸ்து எனும் மனைநூல் வல்லுநர்களின் ஆலோசனைப்படிச் செயல்பட்டால் நல்ல வீடு அமைந்து நலமாக வாழலாம்.

அன்னிபெசன்ட் அம்மையார் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். இங்கிலாந்தின் மூன்று ராஜாங்கங்களில் அதுவும் ஒன்று. அந்த நாட்டிலிருந்து இந்தியாவிற்குக் கிடைத்த இருபெரும் பொக்கிஷங்களில் ஒருவர் அன்னி பெசண்ட். இன்னொருவர் சகோதரி மார்கரெட் என்கிற நிவேதிதா. விவேகானந்தரின் தலைமைச் சீடர்.

இவர்கள் இருவரைப்போல் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் பாஸ்வெல் என்ற வாழ்க்கை வரலாறுகளைப் பதிவு செய்து வந்த எழுத்தாளர். ஆங்கில எழுத்தாளர்களில் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்த டாக்டர் சாமுவேல் ஜான்சன் அவர்களைப் பேட்டி கண்டு எழுதினார்.

இலக்கிய விமர்சகர்கள் அந்த வாழ்க்கை வரலாற்று நூலின் சிறப்பைக் காட்டும் வகையில் "டாக்டர் ஜான்சன் என்பவர் மட்டுமே அபூர்வமானவர் அல்ல. அவர் வரலாற்றை எழுதிய பாஸ்வெல் என்பவர் அதிக அபூர்வமானவர்" (Johnson are rare, Boswell are rarer) என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த அன்னிபெசண்ட், 1917-இல் காங்கிரஸ் தலைவராக இருந்தார். ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கியவர். இத்தகைய அன்னிபெசண்ட், தியோபிசிகல் சொசைட்டி எனப்படுகிற பிரம்மஞான சபையின் தலைவராக இருந்து அதை வளர்த்தவர். இவருடைய இரண்டு வளர்ப்பு மாணவர்கள் உலகப் புகழ் பெற்றவர்கள். ஒருவர் ஜே.கே. என்ற ஜிண்டு கிருஷ்ணமூர்த்தி. இன்னொருவர் வி.கே.கிருஷ்ண மேனன். ஒருவர் ஆன்மிகத்திலும், இன்னொருவர் அரசியலிலும் இருந்தவர்கள்.

அன்னிபெசண்ட் பற்றி பாரதியின் "பொன் வால் நரி" புனைவு இலக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்திகள் நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்குபவை. அநேகருக்குத் தெரியாதவை என்றே கூறலாம். அரவிந்தரின் அறிவுரைப்படிதான் பொன்வால் நரி என்ற தொன்மக்கதையை பாரதியார் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். ஒருவேளை அன்னிபெசண்ட்டிற்கும் அது நேரடியாகப் புரிய வேண்டும் என்பதற்காகவும் இருந்திருக்கலாம்.


பொன்வால் நரியின் உள்ளடக்கத்தை அதன் உரையாசிரியரைப் போல விளக்கம் தந்து நமக்குத் தெளிவு படுத்தியுள்ளார் தமிழறிஞர் பெ.சு. மணி அவர்கள். 'பத்ம விருது'க்குத் தகுதியானவர் பெ.சு. மணி அவர்கள். பழுதுபட்ட நிலையில் பாசமிக்க மகளின் அரவணைப்பில் டெல்லியில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

– இ.ஆர்.


'பொன் வால் நரி' ஒரு வரலாற்றுப் பின்னணி

மகாகவி பாரதியார் (1882–1921) உரைநடை வகைகள் பலவற்றை ஆண்டுள்ளார். அவற்றுள் நையாண்டி உரைநடை, உருவக உரை நடை முதலானவற்றையும் ஆண்டு புகழ்பூத்துள்ளார்.

சமகால நிகழ்வுகளில் ஒன்றான, தியோசாபிகல் சொசைட்டி (பிரம்மஞான சபை)யையும் அதன் தலைவராக வரலாற்றுப் புகழ் கொண்ட அன்னி பெசண்ட் அம்மையாரையும் (1847–1933) அவர் தலைமையேற்று நடத்திய தியோசாபிகல் சொசைட்டியைப் பற்றியும் ஆன்மீக – அரசியல் காரணங்கள் சிலவற்றிற்காக விமர்சனம் செய்ய நையாண்டி பாணியில் 'பொன் வால் நரி' என்ற பெயரில் ஒரு படைப்பை ஆங்கிலத்தில் "The Fox with the Golden Tail" (Sataric Story) எனும் பெயரில் எழுதினார். அவர் அதில் பொன் வால் நரி கூறுவதாகப் பின்வருமாறு கூறியுள்ளார்.



பெ.சு.மணி



("The said" I am the great she - Fox of the Golden Tail the wisest among all the foxes of fox land. They asked me over there to be their ruler".)

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசண்ட் அம்மையாரின் பங்களிப்பு பெரிதும் பாராட்டுதலைப் பெற்றது. எனினும் அவர் தீவிரவாத தேசியத்தைப் பரப்புரை செய்த திலகரையும், அரவிந்தரைப் பற்றியும் லண்டனில் கண்டித்துப் பேசிவிட்டார். இதற்குரிய எதிர்ப்பு தமிழகத்தில் பாரதியார், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, திரு.வி.க. முதலானோரால் வெளிப்படுத்தப் பட்டது.

பாரதியாரிடம் அரவிந்தர் தமது சார்பில் அன்னிபெசண்ட் அம்மையாரின் அறிக்கையை மறுத்து எழுதக் கூறியதாக சென்னை இந்து நாள் இதழுக்கு 1914 டிசம்பரில் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் தமது நையாண்டிப் படைப்புக் கதைக்கு The Fox with the Golden Tail என்று பெயர் சூட்டியதற்கான காரணம் வியப்பிற்கு உரியது.

உலகத் தொன்மங்களில் பொன் வால்கள் கொண்ட நரிகளைப் பற்றிக் குறிப்புகள் தொல் பழங்கால நாகரிகங்களில் ஒன்றான சீன நாகரிகத் தொன்மங்களில் முதல் முறையாகக் கூறப் பெற்றுள்ளன.

கி.மு. 9–ஆம் நூற்றாண்டில் தொடுக்கப்பட்ட SHANHAIAING எனும் பழம்பெரும் நூலில் 9 பொன் வால்கள் கொண்ட நரிகளைப் பற்றிய செய்திகள் கூறப் பெற்றுள்ளன என்று ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். நரியும், வால்கள் மட்டுமல்ல, உடலும் பொன்நிறம் கொண்டவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பொன் வால் நரி சொற்றொடர் சீனாவில் தோற்றம் கொண்டது என்பதைத் தெரிந்து தெளிய முடிகின்றது. இதே சொற்றொடர் பாரதியாரால் ஆளப்பட்டுள்ளது என்பது வியப்பைத் தருகின்றது.

இந்தப் பொன் வால் நரியைப் பற்றிய தொன்மங்கள் ஜப்பானில் மேலும் வளர்த்து எடுக்கப்பட்டன. நரி உணர்வுகள் பற்றிய நம்பிக்கைகள் பல்கிப் பெருகின. கோயில்களும் வழிபாடுகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஜப்பானைத் தொடர்ந்து ஆசிய நாடுகள் பலவற்றிலும் நரிகள் பற்றியும் செய்திகள், நம்பிக்கைகள் பல்கிப் பெருகின. தெய்வீகப் பண்புகளையும் பெற்றவை எனும் நம்பிக்கையும் நிலவின.

மிருக நிலையிலிருந்து மானுட நிலைக்கு உருவம் பெறும் அற்புதச் சக்திகளும் கைவரப்பட்டன என்பது நாட்டுப்புற இலக்கியங்களில் வேர் பிடித்தது. ஒரு நரி ஐம்பது வயதில் பெண்ணாகவும் நூறு வயதில் அழகிய பெண்ணாகவும் அல்லது ஆணாகவும் மாறும் தெய்வீக ஆற்றல் பெறும்; ஓராயிரம் ஆண்டுக் காலம் வாழும் நரி, தெய்வீக நிலையை எய்திவிடும் எனும் நம்பிக்கையும் தொன்மங்களில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

நரி முகத்தில் விழிப்பது நல்ல சகுனம் என்றும் நன்மை தீமைகள் இரண்டையும் விளைவிப்பன என்றும், தந்திரம் அதன் இயல்பான பண்பு என்றும் பரவலாகத் தொன் மங்களில் கூறப் பெற்றுள்ளன. பாரதியாரின் பொன் வால் நரியில் அன்னிபெசண்ட் அம்மையார் நரியா கவும் தியோசாபிகல் சொசைட்டி பொன் வாலாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளது.

பாரதியாருக்குச் சீன இலக்கியம் பற்றிய அறிமுகம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. அவர் சூச்சூ எனும் சீன மொழிச் சிறுகதையை தமது 'இந்தியா' வார இதழில் எழுதியுள் ளார். அதைக் கண்டெடுத்து இக் கட்டுரையாளர் முதல் முதலில் வெளி யிட்டுள்ளார். கட்டுரைப் பகுதியில் அவர் ஒரு சீனப் புரட்சிப் பெண் ணைப் பற்றியும் அவர்கள் கவிதையை யும் வழங்கியுள்ளார் என்பதும் அறியத் தக்கது.

9 வால்களைக் கொண்ட நரி பற்றிய நாடகங்கள், கட்டுரைகள், நாவல்கள், விமர்சனங்கள் உலக இலக்கியங்களில் நிறைந்துள்ளன.

பாரதியார் ஒரே ஒரு பொன் வால் கொண்ட நரியை நவீனத் தமிழ் இலக் கியத்திற்கு அறிமுகம் செய்துள்ளார். சமகால உணர்வுடன், சமகால நிகழ்வு ஒன்றைத் தெளிவுற அறிந்து, தெளிவுற மொழிந்து, நையாண்டிச் சிறுகதையில் பாரதியார் அளித்துள்ளது தனித் துவம் வாய்ந்தது. இது சிறுகதை வர லாற்றிற்கு அவர் வழங்கிய புகழ் மணக்கும் பெரும் கொடையாகும்.

பண்டைய கிரேக்கத்தில் கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் ஈசாப் எனும் ஓர் அடிமையால் புனையப்பட்ட கதைகள் 'ஈசாப் கதைகள்' என உலகப் புகழ் கொண்டன. மனிதர்களுக்குப் பதிலாக மிருகங்களை வைத்துப் புனையப்பட்டவை, ஈசாப் கதைகள். பாரதியாரின் நவ தந்திரக் கதைகளில் ஈசாப் கதைகளின் சாயல்களைக் காணலாம்.

பாரத நாட்டின் பஞ்சதந்திரக் கதைகளும் இவ்வகையில் உலகப்புகழ் எய்தியவை. பாரதியார், "பொன் வால் நரி" எனப்படும் ஆங்கிலக் கதை யில் – மிருகங்களை வைத்துப் பின்னப் பட்ட ஒரு கதையில் – பரபரப்பான தமது சமகால நிகழ்ச்சியைத் தமக்கே உரிய வழியில் விமர்சனம் செய் துள்ளார்.

பாரதியாரின் புகழ்பெற்ற "The Fox with the Golden Tail" எனும் நையாண்டிச் சிறப்புமிக்க கதைக்கு ஓர் அரசியல் – ஆன்மிக வரலாற்றுப் பின் னணி உண்டு. இந்தப் பின்னணியின் மையமாகத் திகழ்பவர் அன்னி பெசண்ட் அம்மையார். இந்திய அரசியலிலும், ஆன்மிகத் துறையிலும் தனிச் சுவடுகளைப் பதித்தவர் அன்னிபெசண்ட் அம்மையார். "ஹோம் ரூல்" இயக்கம் எனும் அரசி யல் அமைப்பு வழியாகவும், 'தியோசா பிகல் சொசைட்டி' எனும் ஆன்மீக அமைப்பு வழியாகவும் செல்வாக்குப் பெற்றவர்.

திலகர், அரவிந்தர் தலைமையில் தோன்றிய தீவிரவாத தேசியத்தை அன்னிபெசண்ட் எதிர்த்தார். இதன் எதிர்விளைவாகத் தீவிர தேசியவாதி கள், பெசண்டைக் கடுமையாகத் தாக்



அன்னி பெசன்ட்

கினார்கள். குறிப்பாகத் தமிழகத்தில் பாரதி, சுப்பிரமணிய சிவா, வ.உ.சி. மூவரும் பெசண்ட் எதிர்ப்பு இயக் கத்தில் முன்நின்றனர்.

பாரதியாரின் "இந்தியா" வாரப் பத்திரிகை பெசண்ட்டின் அரசி யலைச் சாடியது. 1908, அக்டோபர் 31 ஆம் தேதியிட்ட இதழில் அன்னி பெசண்ட் என்ற தலைப்பின்கீழ் அன்னிபெசண்ட் அம்மையார் இந்திய சுதந்திர விருப்பத்திற்கு எதிராகச் செய்து வந்த முயற்சிகளை எல்லாம் வரிசைப்படுத்திக் கூறினார்" எனப் பாரதியாரைப் பற்றி பாரதி அன்பர் அமரர் ப. கோதண்டராமன் அவர்கள், புதுவையில் பாரதி (1980) எனும் அரிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1909 ஜூன் 5–இல், 'இந்தியா'வில் (பக்.) "மிஸஸ் அன்னிபெசண்டுக்கும் அவள் இனத்தாருக்கும்" எனும் தலைப்பில் "கல்கி" எனும் புனைபெயரில் (பிற்காலத்தில் எழுதிய 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அல்ல, இவர்) ஒருவர் பெசண்டைக் கடுமை யாகத் தாக்கி எழுதினார். இதில் ஒரு பகுதி வருமாறு :

"சுதேசியம் முதலிய விஷயங்களில் பெனாரஸ் ஹிந்து மாணவர்கள் தலை யிடக் கூடாதென்று கடுமையான உத்தரவு செய்தார்... போதாததற்குப் புல்லடிமைத் தனத்தையும் அனாரிய நாகரீகங்களையும் போதிக்க "இந்தியா புத்திரர்கள்" (Sons of India) "இந்தியா புத்திரிகள்" (Daughters of India) எனும் சங்கங்களும் ஏற்படுத்தி வருகின்றனர். இவளது ஸமாஜங்கள் துப்பும் போலீ சுக்குத் துணைபோன ஏற்பாடுகளே... நாளாக நாளாக நம்மவர்கள் பேடித் தனத்தையும் கவர்ன்மெண்டின் கொடுங்கோன்மையையும் பார்த்து வரும் இவ்வம்மை, வரவர நமது சுதேசியத்தையும் தேசாபிமானிகளை யும் பிரத்தியக்ஷமாகத் தூஷிக்கத் தலைப்பட்டு விட்டாள்."

அன்னிபெசண்ட், அரவிந்தரைப் பற்றி லண்டனில் வெளியான "டெய்லி கிரானிகல்" எனும் இதழில் வெளியிட்ட கருத்தையும் எடுத்துக் காட்டி 'கல்கி' மேலும் குறிப்பிட்டு விட்டதாவது :

"....இவன் தான் வெள்ளையர் விரோத முயற்சிக்கு மூல ஹ்ருதயம்... இவன் ஓர் அபாயகரமான மனிதன். பிரிட்டிஷ் இராஜாங்கத்தைப் புரட்ட எவ்வித முயற்சியும் செய்யக் கூடி யவன்... நேயர்களே மேற்கூறியவை அவளது சொந்த வசனங்களே. ஸ்ரீயுத அரவிந்தர் விடுதலையானதும் சில ஆங்கிலேயப் பத்திரிகைகள் இவரைத் தேசப் பிரஷ்டம் செய்யத் தூண்டும். இச்சமயத்தில் அவரைப் பற்றி மட்டு மரியாதையின்றிப் பேசும் பேச்சைப் பார்த்தீர்களா? ஒரே சமுத்திரத்தில் அம்ருதமும் ஹால ஹால விஷமும் பிறந்தாற் போல் மிஸ்டர் பிராட்லா வும் இந்த அன்னிபெசண்டும் உண்டானார்கள்."

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப் பினரும், நாத்திகவாதத் தலைவரு மான சார்லஸ் பிராட்லா, இந்திய தேசிய இயக்கத்தை ஆதரித்தவர். இங்கிலாந்தில் பிராட்லாவின் நாத்திக இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர் பெசண்ட். பிற்காலத்தில் 'ஹோம் ரூல்' இயக்கத்தைக் கொண்டு இந்திய தேசியத்தை வளர்ப்பதில் திலகருடன் ஒத்துழைத்தார். புதுச்சேரியில் வெளி யான 'விஜயா' (ஆசிரியர் – பாரதி) எனும் நாளிதழும் பெசண்ட் எதிர்ப்பில் பங்கேற்றது.

அக்டோபர் 30, 1909–ஆம் இதழில் "விஜயா" அன்னிபெசண்ட் எதிர்ப்புப் பிரசாரத்தில் தியோசாபிகல் சொசைட்டியின் உட்குழு கொண் டாடிய "மகாத்மாக்களை"ப் பற்றிய கண்டனத்தை வெளியிட்டது. "சென்ட்ரல் ஹிந்து காலேஜ் மேகஸைன்" எனும் தமது இதழில் பெசண்ட் அம்மையார் அரவிந்தர் மீதான மகாத்மாக்களின் கருத்தை வெளியிட்டார். ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைக்க மறுக்கும் அரவிந்தர் போக்கு "மகாத்மாக்களுக்கு" ஆத்திர மூட்டியதாம். (p.34. Native News Paper Report) இந்த மகாத்மாக்கள் பற்றிய

செய்திகள் எல்லாம் பொய்யுரைகளே என்றும் 'விஜயா' சாற்றியது.

தேசிய திரிசூலத்தின் (பாரதி, வ.உ.சி., சிவம்) ஒரு முனையாகிய சிவம் அவர்கள் பெசண்ட் எதிர்ப்புப் பிரசாரத்திற்கான காரணங்களைத் தொகுத்து மிகக் கடுமையாகத் தாக்கி ஆயிரக்கணக்கில் "வந்தே மாதரம்" எனும் துண்டறிக்கைகளை வெளியிட்டுப் பரப்பினார். இந்த அறிக்கையின் வாசகங்களைக் கண்டித்து பெசண்டின் 'நியூ இந்தியா'–வில் (25.5.1920) திரு. ஏ. ரங்கசுவாமி அய்யர் என்பவர் எழுதியிருக்கிறார்.

1920 மே 24, 25 தேதிகளில் சாத்தூரில் நடைபெற்ற மதுரை – ராமநாதபுர மாவட்ட அரசியல் மாநாட்டில் சேலம் பி.வி. நரசிம்மய்யர், வ.உ.சி., சிவம், பெசண்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் பெசண்ட் அம்மையார் கலந்து கொள்வதை எதிர்த்து 'வந்தே மாதரம்' குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு :

"அன்னிய வஸந்து" அணங்கு இப்பொழுது இங்குக் கூடவிருக்கும் மாநாட்டிற்கு வருகிறாள். இவர் நமது தேசத்திற்கு வந்தது முதல் நமக்குச் செய்துள்ள தீங்குகள் எண்ணற்றவை... 1907 – 08 வருஷங்களிலே நடந்த தேசியக் கிளர்ச்சியில் இவ்வணங்கு சமூகத் தலைவர்களான ஸ்ரீமான் களாகிய திலகர், அரவிந்த கோஷ் முதலானவர்களைப் பலவாறு நிந்தித்து அக்கிளர்ச்சிக்கு விரோதமாகப் பல வேலைகளைச் செய்து அரசாங்கத்தோடு உறவு கொண்டாடினார். தாம் நடத்தி வந்த "சென்ட்ரல் ஹிந்து காலேஜ்" பத்திரிகையில் அரவிந்த கோஷ் அவர்களை இந்தியாவைக் கெடுக்கவென்று பிறந்திருக்கும் சனீஸ்வரன் என்று படமிட்டு வர்ணித்தும் பழித்தார்....

... தேசம் முழுவதும் மஹாத்மா என்று போற்றுகிற ஸ்ரீமான் காந்தியவர்களை ஆட்டுத் தோலெடுத்த சிங்கமென்று ஒரு சமயத்தும், அராஜகத்திற்கு வழி திறந்து காட்டுகிறாரென்று மற்றொரு சமயத்தும், ராஜீய விஷயத்தில் ஸ்ரீமான் காந்தியவர்களைக் குழந்தையே என்று வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றியும் நிந்தித்தும் பரிகசித்தும் வந்திருக்கிறார்... பழுத்த தேசாபிமானியான ஸ்ரீமான் பால் அவர்களை, தூற்றுகிறவரென்றும், நிந்தனைக்காரரென்றும் பழி கூறியுள்ளார்.

இந்தியாவின் கண் போன்ற திலகர் மஹாராஜரையும், சென்னை மாகாணத் தலைவரான ஸ்ரீமான் கஸ்தூரி ரெங்கையங்கார் அவர்களையும் இந்தியாவின் அபிவிருத்திக்குப் பயங்கரமான இடையூறுகளென்றும் சொன்னார். தமிழ்நாட்டுத் தலைவரான ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளை அவர்களை ஏதோ தன்னால் ஜெயிலுக்கு அனுப்ப முடியுமென்றும் ஆனால் அப்படிச் செய்யத் தமக்கு விருப்பமில்லையென்றும் கையினால் ஆகாத கைம்பெண் கூறுவது போலக் கூறியுள்ளார்... நமது தலைவர்களான திலகர் பெருமானென்ன, கபர்தே என்ன, இவர்கள் இவ்வணங்கை பூதனையென்று வர்ணித்திருக்கிறார்கள்.

பெசண்ட் எதிர்ப்பு இயக்கத்தின் பிரசாரக் கிளர்ச்சியை சென்னை மாநில அரசு ஊக்கமுடன் அறிந்தது. மாநில அரசின் தலைமைச் செயலாளர் "Pleasing Polemics" எனும் குறிப்பையும் ஒரு ரகஸ்ய அறிக்கையில் எழுதியுள்ளார். ஆளுநர் அவையின் ஓர் உறுப்பினர், லெட்பீட்டரை, பெசண்ட் சேர்த்தது தவறென்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை இந்து பத்திரிகை பெசண்ட் எதிர்ப்பு இயக்கத்தின் போர்முரசாக ஒலித்தது. சென்னையில் தீவிரவாத தேசியத் தலைவர்களின் புரவலராக உதவிய வரும் "The Fox with the Golden Tail"-ன் பிரதிகள் ஐந்நூற்றை வாங்கி உதவிய வருமான டாக்டர் எம்.சி. நஞ்சுண்டராவ் அவர்கள் பங்கும் பெசண்ட் எதிர்ப்பு இயக்கத்தில் குறிப்பிடத்தக்கது.

(மீதி அடுத்த இதழில்)

வாசகர் கடிதம்

'ஓம் சக்தி' ஜூலை 2019 இதழ் அட்டைப்படம் 'ஒடிசா லிங்கராஜா கோவில்' வணங்கத்தக்கதாக இருந்தது. அதுபற்றிய கட்டுரையும் அருமை!

– **இரா.வளையாபதி,** தோட்டக்குறிச்சி.

'ஓம் சக்தி' ஜூலை இதழில் 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியிருந்த 'மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும்' எனும் அருட்செல்வரின் கட்டுரை இன்றைய கணினி உலகத்திற்குப் பொருத்தமான சிந்தனை!

– **ஏ. பாஸ்கர்,** சேலம்.

பழகிப் பார்த்ததில் இவர்கள் பகுதியில் கவிஞர் இளந்தேவனின் சிந்தனைகளை நன்கு பகிர்ந்தளித்திருந்தார் கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா.

– **இராம. கண்ணன்,** திருநெல்வேலி.

'சமயவெளியில் ஒரு சமவெளி' ஸ்ரீ ராமானுஜர் தொடர்பான கட்டுரை, அறியாதவர்கள் அறிந்துகொள்ளவும், அறிந்தவர்கள் நினைவுபடுத்திக் கொள்ளவுமான பயனுள்ள கட்டுரை.

– **ப.மூர்த்தி,** பெங்களூரு.

'ஓம் சக்தி'யில் வெளியாகும் விவாதக் கடிதங்களின் மூலம் பல விடை காணாத பன்முகக் கோணங்கள் புரிபடுகின்றன. சிறப்பான விவாதக் களம் அமைக்கும் ஓம் சக்திக்கு நன்றி!

– **என்.ஜே. கந்தமாறன்,** சென்னை.

ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிப்பாட்டை எஸ். கோகுலாச்சாரியின் 'உலக்கைக் கொழுந்து' சிறுகதை நன்கு உணர்த்தியது. நெஞ்சில் நிலைக்கும் சிறப்பான சிறுகதை.

– **மேலை.தமிழ்க்குமரன்,** மேலைச்சிவபுரி.

பேரா.இரா.மோகன் காலமான செய்தியைப் பத்திரிகைகளும் ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்தது வருத்தமளிக்கிறது. கேரள அரசும், கர்நாடக அரசும் எழுத்தாளர்கள் காலமானால் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி கௌரவிக்கின்றன. தமிழக அரசும் அப்படிச் செய்யலாமே!

– **ஜி. சுப்பையன்,** திருவனந்தபுரம்.

பொன்னீலனின் 'லஜ்ஜை' சிறுகதை, கூச்சம் ஒரு மனிதனை எப்படி அல்லல்பட வைக்கிறது என்று சொல்லும் சிறப்பான சிறுகதை.

– **உஷாமுத்துராமன்,** திருநகர்.

'சொல்லில் அமுதூறும் காலம்' பயனுள்ள படைப்பு. பாராட்டுகள்!

– அ. முரளிதரன், மதுரை.

ஸ்ரீராமானுஜரின் மாபாகுவை கட்டுரையாளர் மலர்மகன் தொட்ட விதம், அவரது போற்றலின்படி "சமய வெளியில் ஒரு சமவெளி" மட்டுமல்ல, அவர் பூரண ஒளிப்பிரகாசம் என்றே மொழியலாம்.

– **எஸ்.ஜி.இசட்கான்,** திருப்பூர்.

புலவர் அடியன் மணிவாசகன் கூறிய பெண்கள் பற்றிய கருத்துகள் விஞ்ஞான உலகில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருத்து. மூடநம்பிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

தமிழகப் பருத்திக்கு ஆங்கிலேயர் பெற்ற பரிசு கட்டுரையை நன்கு விவரமாக விளக்கியுள்ளார் கட்டுரையாளர் இடைப்பாடி அமுதன்.

– **என்.ஆர். ஜெயசந்திரன்,** காவேரிப்பட்டணம்.

ஆலந்தூர் கோ. மோகனரங்கனின் "அன்பும் அறனும் அறிவாய்" கவிதையும், கவிஞர் சென்னிமலை தண்டபாணியின் "சொல்லில் அமுதூறும் காலம்" "கவிதையும் சொல்லோடு பொருளும் பூரணமாய்ப் பொருந்திய சுவைக் கவியாய் இனித்தன.

– **மு.இராமு,** முத்தரசநல்லூர்.

தமிழறிஞர் இரா. மோகனின் மறைவை செய்தி ஊடகங்கள் கண்டுகொள்ளாமல் விட்டது பற்றி 'ஓம் சக்தி' தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறது, நன்றி!

– **இரா.கல்யாணசுந்தரம்,** மதுரை.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE
4.4.4
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940



கட்டுரை

பன்முகக் கலைஞர்

ஏ.பி. நாகராஜன்

1937–இல் நாடக உலகில் ஸ்திரீ பார்ட் நாகராசாக ஒன்பது வயதில் அறிமுகமாகித் தனது உழைப்பால், திறமையால், செயலாற்றலால் திரை உலகில் நடிகராக, வசனகர்த்தாவாக, தயாரிப் பாளராக, இயக்குநராக, அருட்செல்வராக, ஏ.பி.என். எனத் திரை உலகினரால் அழைக்கப் பட்டு, மிளிர்ந்து, தமிழ் மக்களின் மனத்தில் தனக்கெனத் தனி இடம்பிடித்தவர் ஏ.பி. நாகராஜன்.

24.2.1928–இல் அருட்செல்வர் ஏ.பி. நாக ராஜன், சேலம் மாவட்டம் சங்ககிரிக்கு அருகில் உள்ள அக்கம்மா பேட்டை என்னும் கிராமத்தில், பரமசிவம் – லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் குப்புசாமி.

அவரது தந்தை ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர். வசதியான குடும்பம். இளம் வயதிலேயே தாய் – தந்தையரின் மறைவு, குடும்பத்தை வறுமையில் தள்ளியது. தொடக்கக் கல்வியைக் கூடத் தொடர முடியாத நிலை. அவரை வளர்த்த பாட்டியார், அக் காலத்தில் ஊர் ஊராக நாடகம் நடத்த வரும் நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்த்துவிட்டார்.



1937–இல் டி.கே.எஸ். சகோதரர்களின் மதுரை ஸ்ரீ பாலசண்முகானந்தா சபாவில் இணைந் தார். அந்நாடகக் குழுவில் ஏற்கனவே குப்புசாமி என்ற பெயரில் ஒருவர் இருந்ததால், தனது பெயரை நாகராஜன் என மாற்றிக் கொண்டார். தனது பிறந்த கிராமமான அக்கம்மாபேட்டை 'ஏ', தந்தையின் பெயரான பரமசிவத்தின் 'பி' சேர்த்து ஏ.பி. நாகராஜன் என ஆனார்.

டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவில் இவர் சேர்ந்தபோது வயது 9. கோவலன் நாடகத்தில் மாதவி – கண்ணகியாக 'ஸ்திரீ பார்ட்' வேடத்தில் நடித்ததில் மக்களின் பேராதர வைப் பெற்றார்.

1940–இல் டி.கே.எஸ். சகோதரர்களின் 'குமாஸ்தாவின் பெண்' நாடகத்தில் தொடர்ந்து கதாநாயகியின் தோழியாக ஸ்திரீ பார்ட்டாக நடித்தார். இந்நாடகக் குழுவே, இதே நாடகத்தைத் திரைப்பட மாகப் படமாக்கியபோது திரையிலும் ஸ்திரீபார்ட்டாகவே நடித்தார். அவர்

கோ.எழில்முத்து

நடித்த முதல் திரைப்படமும் இதுவே. இப்படத்தில் கதாநாயகனாக டி.கே.எஸ்., அவரது சகோதரர் டி.கே. பகவதி, எம்.வி.ராஜம்மா, டி.எஸ். ராஜ லட்சுமி, பிரண்ட் ராமசாமி, கே.ஆர். ராமசாமி, ஏ.ஆர். சகுந்தலா ஆகியோர் நடித்தனர்.

திரை உலகம், நாடகங்களில் நடித்துக் கொண்டே பள்ளிக்குப் போகாத வருத்தம் தீர, தமிழ் நூல்களைத் தேடிப் படித்தார். இலக்கியத் தாகத்தில் மூழ்கினார். நன்றாகப் பாடவும் ஆற்றல் கொண்ட இவர், நாடகங்களை எழுதியும், அதனை இயக்கியும் தன் திறனை வளர்த்துக் கொண்டார்.

நாடகங்களில் நடிக்க வாய்ப்புக் குறையும் பட்சத்தில் சில காலம் தீயணைப்புத் துறையில் பணியாற்றினார். ஆனாலும், நாடகப் பித்துத் தொடர, 'நால்வர்', 'மாங்கல்யம்' நாடகங்களை இயக்கியதோடு, நடிகராகவும் தொடர்ந்து நடித்தார்.

சில ஆண்டுகளில் சக்தி கிருஷ்ணசாமியின் 'சக்தி நாடக சபா'வில் இணைந்து நாடகங்களில் நடிப்பதைத் தொடர்ந்தார். அப்போது சிவாஜி கணேசன் கதாநாயகியாகவும், ஏ.பி.என். கதாநாயகனாகவும் நடித்த வரலாறும் உண்டு. தொடர்ந்து யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை நாடகக்குழுவிலும் சிவாஜிகணேசன், வி.கே. ராம சாமி, எம்.ஆர். ராதா, டி.ஆர். மகாலிங்கம், ஆகியோருடனும் நாடகப் பணியைத் தொடர்ந்தார்.

சிறிது காலம் நாடகத்திலிருந்த ஏ.பி.என். மாடர்ன் தியேட்டர்ஸில் உதவி ஒளிப்பதிவாள ராகச் சேர்ந்தார். ஆயினும் நாடகம் அவரைவிட்டு விலகவில்லை. 'மச்சரேகை' நாடகத்தோடு, 'விதியின் வெற்றி' எனும் சத்தியவான் சாவித்திரி கதையையும் நாடகமாக்கினார்.

1953–இல் ஏ.பி.என். ஏற்கனவே எழுதிய 'நால்வர்' நாடகம் திரைப்படமானது. அப்படத் திற்குக் கதை, திரைக்கதை, வசனத்தை எழுதிய தோடு கதாநாயகனாகவும் நடித்தார். இப்படத் திற்கு கே.வி. மகாதேவன் இசையமைத்திருந்தார். தஞ்சை இராமையாதாஸ், மருதகாசி, கா.மு. ஷெரீப் ஆகியோர் பாடல்களை எழுதினர். வி. கிருஷ்ணா (கிருஷ்ணன் – பஞ்சு) இயக்கத்தில் ஏ.பி.என். அவர்கள் ஒளிப்பதிவை மேற் கொண்டார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் இருந்து வில கிய எம்.ஏ. வேணு, எம்.ஏ.வி. பிக்சர்ஸ் எனும் திரைப்படத் தயாரிப்பைத் தொடங்கினார். அவர் ஏ.பி.என். அவர்களின் 'மாங்கல்யம்' நாடகத்தைத் திரைப்படமாக்கினார். அதில் கதை, திரைக்கதை, வசனம் எழுதியதோடு கதாநாயகனாகவும் நடித்தார்.

1955–களில் ஏ.பி.என். பங்களிப்பில் ஐந்து திரைப்படங்கள் வெளிவந்தன. 'நல்ல தங்கை'யில் கதை, வசனகர்த்தாவாகவும், 'பெண்ணரசி'யில் கதை, வசனத்தோடு கதாநாயகனாகவும், 'நம் குழந்தை' படத்தில் ஆர்.எஸ். மனோகர் கதா நாயகனாகவும், ஏ.பி.என். வில்லனாகவும் நடித் தார். 'டவுன் பஸ்' படத்திற்குக் கதை, வசனம், 'நல்ல தங்காள்' படத்தில் ஒரு பாத்திரம், கதை, வசனம் எனத் திரையில் மிளிர்ந்தார்.

1956–இல் ஏ.பி.என். வசனத்தில் வெளிவந்த சிவாஜிகணேசன் நடித்த 'நான் பெற்ற செல்வம்' வெற்றிப்படமாக வலம் வந்தது.

1957–இல் நடிகராகவும், வசனகர்த்தாவா கவும் மிளிர்ந்த ஏ.பி.என். தயாரிப்பாளராக மாறி, சிவாஜிகணேசன் நடித்த 'மக்களைப் பெற்ற மகராசி' மூலம் வி.கே. ராமசாமியுடன் இணைந்து படத்திற்குக் கதை, வசனம் எழுதியதுடன் தயாரிப்பாளராக ஆனார். தமிழ்த் திரையுலகில் முதன்முறையாக வட்டார மொழியில் கொங்கு நாட்டு வழக்கு மொழியில் வசனம் எழுதப்பட்டது. இப்படத்தில் 'மணப்பாறை மாடுகட்டி, மாயவரம் ஏரு பூட்டி' என்ற பாடல் தமிழகமெங்கும் ஒலித்தது. இப்படத்தை இயக்கியவர் கே. சோமு.

1958–இல் 'நல்ல இடத்துச் சம்பந்தம்' வி.கே.ஆர்., ஏ.பி.என். தயாரிப்பில் வி.கே.ஆர். கதையில் ஏ.பி.என் வசனத்தில் சோமு இயக் கத்தில் வெளியானது. இப்படத்தில் பிரேம் நசீர் கதாநாயகனாகவும், சவுகார் ஜானகி கதா நாயகியாகவும் நடித்தனர்.

இதே ஆண்டில் ஏ.பி.என். வசனத்தில் உருவான 'சம்பூர்ண ராமாயணம்' பெரும் வெற்றிப் படமாக அமைந்தது. 37 வாரங்கள் அதாவது, 264 நாட்கள் ஓடிச் சாதனை படைத்தது.

சமூகப் படங்களுக்குக் கதை, வசனம் எழுதி வந்த ஏ.பி.என். முதன்முதலாகப் புராணப் படத் திற்குக் கதை, வசனம் எழுதித் தமிழ் மழை பொழிந்தார் என்றே சொல்ல வேண்டும். இதில் பரதனாக நடித்த சிவாஜிகணேசன், தம்முடைய கணீர் குரலால் ஏ.பி.என். வசனத்திற்கு மெரு கூட்டினார். இப்படத்தைப் பார்த்த மூதறிஞர்

இராஜாஜி, ‘நான் பரதனையே கண்டேன்’ எனச் சொன்னார். இதில் ராமனாக என்.டி. ஆரும், சீதையாக பத்மினியும் நடித்தனர்.


டி.கே.எஸ். சகோதரர்கள்

தொடர்ந்து அதே ஆண்டில் ‘பெற்ற மகனை விற்ற அன்னை’ ஏ.பி.என். கதை, ஏ.வி.பி. ஆசைத்தம்பி வசனத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் வி. இராமநாதன் இயக்கினார். இதே ஆண்டில் ஏ.பி.என். கதை வசனத்தில் ‘நிலாவுக்கு நெறைஞ்ச மனசு’ வெளிவந்தது.

1959–இல் ஏ.பி.என்., வி.கே.ஆர். இணைந்து ‘தாயைப் போலப் பிள்ளை நூலைப் போல சேலை’ லட்சுமி பிக்சர்ஸ் தயாரிப்பில், ஏ.பி.என். கதை வசனத்தில் கே. சோமு இயக்கத்தில் சிவாஜி கௌரவ வேடத்தில் நடித்தார். தொடர்ந்து ஏ.பி.என். வசனத்தில் ‘அல்லி பெற்ற பிள்ளை’ என்ற படம் திரைக்கு வந்தது. இப்படத்தைப் பாடலாசிரியர் மருதகாசி, இசையமைப்பாளர் கே.வி. மகாதேவன், வயலின் மகாதேவன், வி.கே. முத்துராமலிங்கம் ஆகிய நால்வரும் இணைந்து தயாரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தில் எஸ்.வி. சகஸ்ரநாமம் கதாநாயகனாகவும், பண்டரிபாய் கதாநாயகியாகவும் நடித்தனர்.

1960–இல் பிரபல நாவலாசிரியர் அகிலன் எழுதிய ‘பாவை விளக்கு’ சாகித்ய அகாதெமி விருது பெற்ற நாவல் படமாக்கப்பட்டது. அகிலனின் கதைக்கு ஏ.பி.என். வசனம் எழுதினார். சிவாஜிகணேசன் கதாநாயகனாகவும், பண்டரிபாய் கதாநாயகியாகவும் நடித்தனர்.

அதன் பின்னர் ஓராண்டுக்காலம் திரைப்படத்திலிருந்து விலகி இருந்த ஏ.பி.என். இனி, தாம் எடுக்கும் படங்களைத் தாமே இயக்கும் முடிவுக்கு வந்தார். சிவாஜிகணேசன், சாவித்திரி நடித்த ‘வடிவுக்கு வளைகாப்பு’ படத்தை இயக்கினார். ஆயினும் அது வெற்றிப்படமாக அமையவில்லை.

1963–இல் மீண்டும் நாவலாசிரியர் அகிலனின் ‘சினேகிதி’ என்ற நாவலைத் தழுவி, ‘குலமகள் ராதை’ படத்தை இயக்கினார். சிவாஜிகணேசன், சரோஜா தேவி நடித்த இப்படமும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. ஆயினும், ஏ.பி.என்.னுக்குத் தனிப் பெருமையைத் தந்த படம் இது எனலாம்.

1964–இல் ஏ.பி.என். வாழ்வில் முக்கியமான ஆண்டு என்றே சொல்ல வேண்டும். சிவாஜிகணேசனின் பன்முக ஆற்றலை வெளிப்படுத்திய ‘நவராத்திரி’ திரைப்படம். நவரசங்களான அற்புதம், பலம், கருணை, கோபம், சாந்தம், அருவருப்பு, சிங்காரம், வீரம், ஆனந்தம் என மனிதனின் நவரசங்களைக் கொட்டித் தன் நடிப்பால் புதிய அத்தியாயத்தை வெளிப்படுத்தினார் சிவாஜி கணேசன். இது நூறு நாட்களுக்கு



மேல் திரையரங்குகளில் ஓடிப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தது. இதன் மூலம் சிறந்த இயக்குநராக மிளிர்ந்தார் ஏ.பி.என்.

1965–இல் ஏ.பி.என்.னின் புகழுக்கு மேலும் மகுடமாக அமைந்தது ‘திருவிளையாடல்’. வெள்ளி விழாக் கண்ட படம். ஆண்டு தோறும் இன்றும் பட்டி தொட்டி எங்கும் எப்போதும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். சிவனின் திருவிளையாடலை விறுவிறுப்போடு, அழகோடு, தமிழ்ச் சுவையோடு, இசை வெள்ளத்தோடு ஒரு திரைப் படத்தைத் தர முடியும் என்பதற்கு இப்படம் ஓர்



ஏ.பி.என்னின் மற்றொரு பக்திப்படம் 'திருவருட்செல்வர்.' சேக்கிழாரின் வரலாற்றை, 63 நாயன்மார்களின் வரலாற்றைப் பதிவு செய்த படம். சேக்கிழாராக, திருநாவுக்கரசராக வாழ்ந்து காட்டினார் சிவாஜி கணேசன். இதன் மூலம் 63 நாயன்மார்களின் சரிதம் தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

உதாரணம். தமிழ்த் திரை உலகிற்குக் கிடைத்த அற்புதப் பொக்கிஷம் என்றே சொல்லத்தகும்.

"நான் சடைமுடி தரித்துப் புலித்தோல் உடுத்திச் சிவனாக வந்தால் யார் பார்ப்பார்கள்? வேண்டாம், வேறு யாரேனும் நடிக்கட்டும்" என முதலில் சிவாஜி நடிக்க மறுத்தார்.

"இந்தப் படம் வெளிவந்தால் தமிழக மக்கள் உங்களைத்தான் சிவ வடிவமாக எண்ணுவர். இந்தப் படம் தோல்வி அடைந்தால் நான் எழுதுவதையே நிறுத்திக் கொள்கிறேன்" என்று ஏ.பி.என். சவால்விட, அவர் சொன்னது போலவே வெற்றிப் படமானது.

இப்படத்தில் சிவன், புலவராக தருமியோடு (நாகேஷ்) வாதம் செய்யும் காட்சியும், பல ஆண்டுகளுக்குப் பிறகு நடிக்க வந்த ஏ.பி.என். நக்கீரராக வரும் காட்சியும் இன்றளவும் என்றும், எப்போதும் பேசப்படும் திரை உலகப் பதிவுக் காட்சி என்பது நிதர்சனம்.

திரை உலகில் தொடர்ந்து பயணிக்க முடிவு செய்த ஏ.பி.என்., வாத்தியார் நடராஜன் நாடகமாகத் தந்த 'சரஸ்வதி சபதத்தைத்' திரைப் படமாக்கினார். இதுவும் வெற்றிப்படமாக உலா வந்து, இன்றும் எங்கும் ஒலிக்கிறது.

தமிழ்க் கடவுள் முருகனின் திருவிளையாடல்களைப் பதிவு செய்யும் முகமாகத் தயாரித்தது 'கந்தன் கருணை' திரைப்படம். இப்படத்தின் மூலம் முருகன் என்றால் நடிகர் சிவக்குமார்தான் என்ற அடையாளத்தைக் காட்டியது.

தொடர்ந்து 1967–இல் ஜெமினி கணேசனின் 100–ஆவது படமான 'சீதா', ஏ.பி.என். திரைக்கதை இயக்கத்தில் வெளியானது. இதனை, வயலின் மகாதேவன் தயாரிக்க, கே.வி. மகாதேவன் இசையமைத்திருந்தார்.

வைணவ இலக்கியத்தைத் திரையில் பதிவு செய்யும் முகமாக உருவான ஏ.பி.என். இயக்கத்தில் உருவான மற்றொரு திரை ஓவியம், 'திருமால் பெருமை.' பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் வரலாற்றை, வைணவத் தமிழ்ப் பெருமையை, மொழி வளமையை இணைத்துத் தந்த அற்புதத் திரைக்காவியம் என்றே இதனைக் கூறலாம். இதில் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களை இசைத்து மெருகூட்டினார்.

1968–இல் தனது சொந்தத் தயாரிப்பில், இயக்கத்தில் எடுத்த படம் 'தில்லானா மோகனாம்பாள்.' எழுத்தாளர் கொத்தமங்கலம் சுப்பு ஆனந்தவிகடனில் தொடராக எழுதியது. ஜெமினி வாசனிடமிருந்து உரிமையைப் பெற்றுத் திரைப்படமாகத் தயாரித்தார்.

தமிழின் தொன்மைக் கலையான பரத நாட்டியம், நாதஸ்வரம் இணைந்து அக்கலைஞர்களின் வாழ்வியலைப் படமாக்கிக் காட்டியது. இதனை சிவாஜிகணேசன், பத்மினியின் அற்புதமான நடிப்பாற்றலும், இசையும், நாட்டியமும் கலந்துறவாடிய அற்புதத் திரைக்காவியம் என்றே இதனைச் சொல்லலாம்.

தொடர்ந்து சிவாஜி துணையுடன் 'குரு தட்சணை', 69–இல் 'வா ராஜா வா' மாமல்லபுரத்தில் அழகிய சிற்பக் காட்சிகளைப் படம் பிடித்து டூரிஸ்ட் கைடான ஒரு சிறுவனின் வாழ்க்கையைக் காட்டியது. இதில் இடம் பெற்ற 'கல்லெல்லாம் சிலை செய்தான் பல்லவ ராஜா' என்ற பாடல் இன்றும் மக்களால் முணுமுணுக்கப்படும் பாடல் ஆகும்.


1970–களில் விளையாட்டுப் பிள்ளை, திருமலைத் தென்குமரி ஏ.பி.என்னின் இயக்கத்தில் உருவானவை. தொடர்ந்து 1971–இல்

‘கண்காட்சி.’ இது இயல்பாக சென்னையில் நடந்த கண்காட்சிக்குள்ளேயே இரவு நேரத்தில் திரைப் படமாக ஆக்கப்பட்டது. இசை, குன்னக்குடி வைத்தியநாதன்.

1972–இல் தமிழ் இசைப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜனை முக்கியப் பாத்திரமாக நடிக்க வைத்து எடுத்த படம் ‘அகத்தியர்’. இதில் அகத்தியராகவே நம் முன் தோன்றினார் சீர்காழி. தொடர்ந்து ‘காரைக்கால் அம்மையார்’, ‘திருமலைத் தெய்வம்’, ‘ராஜராஜ சோழன்’ எனத் தமிழின் செழுமையை, தமிழின் சிறப்பை, தமிழனின் வரலாற்றைப் பதிவு செய்த இவரது இயக்கத்தில், தயாரிப்பில், வசனத்தில் உருவாயின. தமிழ்த் திரைப்பட உலகில் இவரது ஆழ்ந்த தமிழ்ப் பற்றையும், இலக்கியப் புலமையையும், தமிழறிவாற்றலையும் இவர் படைத்த திரை ஓவியங்கள் அடையாளமிட்டுக் காட்டின.

1973–இல் தமிழ்த் திரை உலகில் ‘சினிமாஸ்கோப்’ எனும் பெரும் திரைவடிவில் வெளிவந்த வரலாற்றுத் திரை ஓவியம் ‘ராஜராஜ சோழன்’ எனலாம். இது ஏற்கனவே டி.கே.எஸ். சகோதரர்களால் நாடகமாகத் தமிழகமெங்கும் வெற்றிக் கொடி நாட்டியது. இது, பெரும் பொருட் செலவில் பிரமாண்ட அரங்குகள் அமைத்து உருவாக்கப்பட்ட திரைப்படமாகும். தஞ்சையை ஆண்ட ராஜராஜசோழனின் வரலாற்று ஆவணம் என்றே இதனைச் சொல்லல் தகும்.

எப்படி ‘வீரபாண்டிய கட்ட பொம்மனில்’ வீர பாண்டியன் என்றால், சிவாஜியின் உருவம்தான் நினைவுக்கு வருமோ, அதுபோல் ராஜராஜ சோழன்


டி.ஆர். மகாலிங்கம்


கே.ஆர். ராமசாமி


எம்.ஆர். ராதா


ஆர்.எஸ். மனோகர்

சிவாஜியே நினைவுக்கு வரும் வகையில் பாத்திரமாக வாழ்ந்து காட்டித் தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்திக் காட்டிய வரலாற்றுப் பெட்டகம் என்றே இப்படத்தைச் சொல்லலாம்.

புராண, வரலாற்றுப் படங்களை இயக்கி வந்த ஏ.பி.என். சமூகப் படமாக 1975–இல் ‘மேல் நாட்டு மருமகள்’ எனும் திரைப்படத்தைத் தயாரித்து இயக்கினார். அதனிலும் புதுமையைக் கொண்டுவரும் முகத்தான் சென்னைக்குப் பரத நாட்டியம் பயில வந்த பிரான்சு நாட்டுப் பெண் லாரன்ஸை மேல் நாட்டு மருமகளாக நடிக்க வைத்துத் தமிழ்க் கலாச்சாரத்தில் மூழ்கித் திளைத்த பெண்ணாக யதார்த்தமாகப் படம் பிடித்துத் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புகள் இத்திரை ஓவியத்தின் மூலம் படைக்கப் பட்டது.

‘சிலம்புச்செல்வர்’ மா.பொ.சி.–யின் கட்சியான தமிழரசுக் கழகத்தின் கலைப் பிரிவில் ஏ.பி. நாகராஜன் முதன்மையானவராகத் திகழ்ந்தார். கவிஞர்கள் கா.மு. ஷெரீப், கு.ம. பாலசுப்பிரமணியம், மேலும் பலர் தமிழரசுக் கழகத்தில் முன்னணிக் கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

தி.மு.கழகத்தின் திரைப் படக் கவிஞர்கள், கலைஞர்கள், வசனகர்த்தாக்களுக்கு இணையாக இருந்த இவர்கள், இந்தியாவை நேசித்தவர்கள். பிரிவினைவாதிகளோ, பகுத்தறிவுவாதிகளோ அல்லர்.

25 ஆண்டுகள் தமிழ்த் திரை உலகில் தனக்கெனத் தனி அடையாளத்தோடு திகழ்ந்த ஏ.பி.என்., 1.4.1977–இல் தம் மூச்சை நிறுத்திக் கொண்டார். ●

கட்டுரை

ஹைட்ரோகார்பன் திட்டம்

ஓர் ஆழ்பார்வை



அறிவியலின் கூற்றுப்படி ஹைட்ரோ கார்பன் என்பது நிலத்தின் கீழ் இருக்கும் ஹைட்ரஜன் மற்றும் கார்பன் வாயுக்களின் கூட்டுப் பொருள். இது ஆக்ஸிஜனுடன் சேரும்போது பெரும் இயந்திரங்களை இயக்குவதற்கான ஆற்றலைப் பெறுகிறது. பெட்ரோல், டீசல், நாப்தா, நிலக்கரி, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து எரிபொருள் வகைகளும் இந்த ஹைட்ரோகார்பனில் அடக்கம்.

மேலும் இந்த ஹைட்ரோகார்பன் களில் ஆல்கேன் (Alkanes), ஆல்கீன் (Alkenes), ஆல்கைன், சைக்ளோ ஆல் கைன் (Cycloalkanes) என 14 வகைகள் உள்ளன.

சுருக்கமாகச் சொல்வதென்றால் மீத்தேன் (Methane) வகை வாயுக்களின் பொதுப் பெயரே ஹைட்ரோகார்பன் என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் ஆல்கேன் என்பது ஒற்றைப் பிணைப்பு வகையாகும். மீத்தேன் இவ்வகையைச் சார்ந்ததுதான். இதன் சூத்திரம் CH_4 ஆகும்.

இந்த மீத்தேன் ஆனது கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் சாண எரிவாயுவில் காணப்படும். அதேபோல் எரியும்போது மீதமின்றி முழுவதுமாக எரிந்துவிடும் தன்மையும் இதற்குண்டு. மீத்தேன் விஷத்தன்மை பொருந்திய வாயுவாகும்.

இலை, மரங்கள், உயிரின உடல்கள் மட்கி பாக்டீரியாவினால் அழிக்கப்பட்டுக் கார்பனாக மாறி, காற்று மாசிலுள்ள ஹைட்ரஜனுடன் சேர்ந்து மீத்தேனாக மாறுகிறது. பூமிக்குள் இருக்கும் இந்த மீத்தேன் வாயுவானது தொடர்ச்சியாக நகரும் பண்புடையது. இவ்வாறு நகரும் மீத்தேன் இறுதி யில் பூமிக்கு அடியில் உள்ள படிவுப்பாறைகளில் தங்கிவிடுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு அருகே நெடுவாசல் உள்ளிட்ட 13 இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான திட்ட ஆய்வுக்கு மத்திய அமைச்சரவை கடந்த ஜூன் 15ஆம் தேதி ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தமானது 15 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் (வேதாந்த) நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

வேதாந்த தனியார் நிறுவனம் மற்றும் ஓ.என்.ஜி.சி. பொது நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து 341 கிணறுகளைத் தோண்டி ஹைட்ரோகார்பன் எடுக்கத் திட்ட மிட்டுள்ளனர். அதிலும் அவர்கள் பெரும்பாலும் காவேரிப்படுகையைத் தான் குறிவைத்துள்ளனர்.

வேதாந்த நிறுவனத்துக்கு 1794 சதுர கி.மீ., ஓ.என்.ஜி.சி.–க்கு 731 சதுர கி.மீ. இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் வேதாந்தாவுக்கு விழுப் புரத்தில், புதுச்சேரியில், கடல் பக்கத்தில் ஒதுக்கப் பட்டுள்ளது.

வேதாந்தா தோண்ட உள்ள கிணறுகள் 116. ஓ.என்.ஜி.சி. தோண்ட உள்ள கிணறுகள் 40. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 5600+1400 = ரூ. 7 ஆயிரம் கோடி. கால அவகாசம் 12 ஆண்டுகள்.


இதற்காகக் கடந்த இரண்டு மாதத்தில் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் இருந்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை அறியவும் ஆய்வு நடத்த உத்தரவு வாங்கியுள்ளனர். அதிகரித்து வரும் மக்கள்தொகையை கணக்கில்கொண்டு அவர்களுக்கு உண்டான தேவையைப் பூர்த்தி செய்ய ஆற்றல் வளங்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய ஆற்றலை நிவர்த்தி செய்ய ஹைட்ரோ கார்பன் திட்டம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

மேலும் ஆண்டுக்கு 3.40 சதவீத அளவில் பெட்ரோலியப் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அவைமட்டுமின்றி கச்சா எண்ணெய் விலையின்

ஏற்றம் மற்றும் இறக்கம் அவ்வப்போது நம் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. 2015–16 ஆம் ஆண்டில் ரூ.4,16,579 கோடிக்கு 202.85 மெட்ரிக் டன் அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. அதுவே 2016–17 ஆம் ஆண்டில் அதிகரித்து ரூ.4,70,159 கோடிக்கு 213.93 மெட்ரிக் டன் அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது.

மீத்தேன், ஈத்தேன், ஷேல் கேஷ் அனைத்தும் ஹைட்ரோகார்பன் உபபொருட்கள்தான். இவற்றை வெளியே கொண்டுவர நீரியல் விரிசல் (Hydraulic Fracking) என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட இருக்கிறது.

மேலும் மீத்தேன் வருவாய் பற்றி மட்டுமே பேசும் நிறுவனங்களும் அரசும் இந்த நச்சு நீரை எங்குக் கொண்டு போய்ப் பாதுகாப்பாக வடிக்கப் போகின்றன என்பதைப்பற்றி ஏதும் சொல்ல



வில்லை. இவை நீர் நிலைகளில் கலக்கும் போதும், பாசனக் கால்வாய்கள் மூலம் வெளியேற்றப்படும்போதும் சுற்றுச்சூழலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தொடர்ந்து நிலத்தடி நீரை வெளியேற்றுவதால் கடல் நீர் உள்புகும் வாய்ப்பும் அதிகம்; கடல்நீர் உள்ளே புகுவதினால் விளைநிலம் தரிசாகும். மேலும், மீத்தேனை வெளியில் எடுக்கும் கிணறுகளில் இருந்து கதிர்வீச்சு பாதிப்பு ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது.

செ. சரத்



இதுதவிர, ஒரு கிணற்றுக்கு சுமார் 400 டேங்கர் லாரிகள் நீர் எடுத்து வருவதற்கும் கழிவு நீரை அப்புறப்படுத்தவும் தேவைப்படும். தொடர்ச்சியான நீரியல் விரிசல் பூமிக்கடியில் அசாதாரணமான சூழலை உருவாக்கும். அதன் விளைவாக நிலநடுக்கம், மற்றும் பெருமளவிலான மண் உள்வாங்குதல் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்படக்கூடும்.

கூடுதலாக, இந்த ஹைட்ரோகார்பன் எரிவாயு பிரித்தெடுத்தலில், மீத்தேன் கசிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்று; வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, கனடா மற்றும் இங்கிலாந்தில் கூட இன்றும் ஏராளமான கசிவுப் பிரச்சினைகளைச் சீர்செய்ய முடியாமல் தவிக்கின்றன.

அமெரிக்காவின் மிஸ்ஸிஸிப்பி மற்றும் மிஸ்ஸோரி இரு ஆறுகளும் அமெரிக்காவின் 41 மாகாணங்களின் குடிநீர் வாழ்வாதாரத்திற்கானது. கனடாவின் இரு மாகாணங்களும் இதனால் பயனடைகின்றன. எரிவாயு எடுப்பதால் நீர் மாசுபடுவதுடன், தாங்கள் பாதிக்கப்படுவோம் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தார்கள்.

“இயற்கை எரிவாயு செயல்பாடுகள் – பொது சுகாதாரக் கண்ணோட்டத்தில்” (Natural Gas Operation from a Public Perspective) என்ற தலைப்பில் 2010ஆம் ஆண்டில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரை மொத்த உலகத்தையும் திரும்பிப் பார்க்கவைத்ததோடு அல்லாமல், அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளையும் இந்தத் தொழில்நுட்ப உபயோகம் பற்றி மறுபரிசீலனை செய்யவைத்தது.

இந்த அறிக்கை, நீரியல் விரிசல் செயல்முறைக்குச் சராசரியாக 353 வேதிப் பொருட்கள் பயன் படுத்தப்படுவதாகவும், இந்தத் தொழிற்சாலைகளின் கழிவுகள் தோல், கண், தொடு உணர்வு அழிதல், சுவாசக் கோளாறு, செரிமான மண்டலங்களின் நோய் தாக்கம், ஈரல், மூளை மற்றும் நரம்புக் கோளாறுகள் என 12 பெரும் நோய்களுக்கான சாத்தியப்பாடுகளை ஆதாரங்களுடன் பட்டியலிடுகிறது.

இம்மாத ராசி பலன்

**"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.8.2019 அன்று கோள்கள் நிலை

			ராகு புதன்
	03.8.2019 புதன் – கடகம் 08.8.2019 செவ். – சிம்மம் 16.8.2019 சுக். – சிம்மம் 17.8.2019 சூரி. – சிம்மம் 26.8.2019 புதன் – சிம்மம்		சுக்கிரன் செவ்வாய் சூரியன் சந்திரன்
சனி (வ) கேது	குரு		

மேஷம்



மேஷ ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் 4, 5–ஆம் வீடுகளில் சஞ்சரிப்பதால் அலைச்சல், பிரயாணம், தேக நலிவு, சுபச்செலவு, குழந்தைகளால் செலவு, அவ்வப்போது காரியங்கள் தடையாவது, முடிவெடுக்கும் ஆற்றல் குறைந்து போவது முதலிய பலன்களை அடைய நேரிடும். 8–ஆம் தேதி வரை செவ்வாய் நீசம் பெற்றிருப்பதால் சற்றுச் சோர்வாகக் காணப்படுவீர்கள். 8–ஆம் தேதி முதல் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்கள் உடல்நலம் சீர் பெறும். ஆனால், முடிவுகளை ஸ்திரமாக எடுத்துச் செயல்பட முடியாது.

8–ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் குரு உங்களுக்குப் பொருளாதார ரீதியான முடக்கத்தையும், காரியங்களில் தடைகளையும் கொடுத்துக் கொண்டிருக்கும். 3–இல் இராகு சஞ்சரிப்பதால் சிறு சிறு பயணங்கள் சிலருக்கு ஏற்படலாம். துணிவுடன் செயல்படும் காரியங்களில் வெற்றி கிட்டும். சந்தேக மனப்பான்மையுடன் செய்யப்படும் காரியங்களில் தோல்வி கிட்டும். 9–இல் கேது, சனி சஞ்சரிப்பதால் தொழில் ரீதியான குழப்பங்கள் பிதுர் வர்க்கத்தாருடன் கருத்து பேதம், ஆன்மிகத்தில் பற்றுக் குறைதல் முதலிய பலன்களை ஏற்படுத்தக்கூடும். சுப காரியங்கள் தற்சமயம் கைகூடி வரும் என்று கூற இயலாது. புது முயற்சிகளைப் புரட்டாசி மாதம் தொடங்க நன்மையுண்டு.

ரிஷபம்



ரிஷப ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் உங்களுக்குத் தொழில், உத்தியோகத் துறைகளிலும், பொருளாதார விஷயங்களிலும் ஓரளவு சாதகமான பலன்களைத் தரலாம். புதிய முயற்சிகளில் இறங்கலாம். ஆடி மாதம் என்று கருத வேண்டாம். செவ்வாய், ரத்த சம்பந்தம் உடைய உறவினர்களைச் சந்திக்க வாய்ப்புண்டு. 7–இல் குரு சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குத் திருமண வாய்ப்புகள் கூடி வரும். ராகு இரண்டில் சஞ்சரிப்பதால் தன வரவு ஏற்படும். செலவுகளும் அதற்கேற்றாப்போல் இருந்து வரும். முதலீடுகள் செய்வதில் கவனம் வேண்டும்.

8–இல் சனி, கேது சஞ்சரிப்பதல் இன்னும் சில காலம் தொழில், உத்தியோகத் துறைகளில் சிக்கல்கள் ஏற்படலாம். சிலர் தொழில், உத்தியோகத் துறைகளை விட்டுவிட எண்ணம் கொள்ளலாம். குடும்பச் சூழ்நிலைகளிலும் சில அதிருப்திகள் ஏற்படலாம். பொறுமை அவசியம்.

8–ஆம் தேதி முதல் செவ்வாய் 4–இல் சஞ்சரிப்ப தாலும் 16–ஆம் தேதி முதல் சுக்கிரன் இணைவ தாலும் போக்குவரத்துகளிலும், வாகனங்களைக் கையாள்வதிலும் போதிய கவனம் தேவை. புதிய முயற்சிகள் எதுவாயினும் வரும் ஐப்பசிக்கு மேல் செய்வது நல்ல பலனை ஏற்படுத்தும். கண்களில் ஒரு சிலருக்குப் பாதிப்பு ஏற்படும்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் வாழ்க்கைத் துணைவரால் செலவினங்களை ஏற்படுத்தக்கூடும். உங்களது பணத்தேவை அதிகரிக்கலாம். சொந்த பந்தங்களால் நன்மை, தீமையுண்டு. 7–இல் சனி – கேது சஞ்சரிப்பதால் கூட்டுத்தொழில் கூட்டாளிகள் சம்பந்தமாகக் கருத்து வேற்றுமை ஏற்படும். ராசிக்கு 3–ஆம் வீட்டில் மாதத்தின் பிற்பாதியில் சூரியன் சஞ்சரிக்க இருப்பதாலும், செவ்வாய் இணைவு பெறுவதாலும் தொழில், உத்தியோகத் துறைகளில் உங்களுக்கு நற்பலன் ஏற்படலாம். சுபக்கிரக திசை நடைபெறுபவர்களுக்கு உயர்வு ஏற்படும்.

ராசி மீது ராகு சஞ்சரிப்பதால், உடல் நலத்தில் கவனம் வேண்டும். உங்களது முயற்சிகளில் அவ்வப்போது தடைகளையும் ராகு ஏற்படுத்தக்கூடும். அடுத்தடுத்த தொடர் முயற்சிகளால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். குரு 6–இல் இருப்பதால் ஏற்கனவே நீங்கள் கடனாளி தான். இல்லையெனில் நோய், நொடி தோன்றும் என்று பொதுவாகக் கூறுவர். சுப காரியங்கள் நவம்பர் 2–இல் குரு 7–ஆம் வீட்டில் சஞ்சரிக்கத் தொடங்கிய பின்னரே ஈடேறும். செவ்வாய் 8–ஆம் தேதி வரை நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிரிகளாயினும், நண்பர்களாயினும் எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் பிற கிரகங்களின் சேர்க்கை பெற்று ராசி மீது சஞ்சரிப்பதால், மனக் குமுறல் ஏற்படும் வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் இரண்டில் சூரியன், செவ்வாய் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் சில அனுகூலமான பலன்களை அடையலாம். உங்களது அதிகாரம் ஓங்கும் வாய்ப்புண்டு. ஆனால், தடித்த வார்த்தைகளைப் பிரயோகம் செய்யாமல் இருப்பது நல்லது. தண்டச் செலவு ஒன்றும் வரக்கூடும்.

வாழ்க்கைத் துணைவர் போர் செய்வார். இயற்கையிலேயே அதிகம் விவாதம் செய்வார். எதையும் ஊடுருவிப் பார்ப்பார். எனவே, சம யோசிதமாக நடந்து கொள்வது நல்லது. ராகு 12–இல் சஞ்சரிப்பதால் மறைமுக எதிர்ப்புகள் தோன்றக்கூடும். ஆனால், அதைப் பொருட்படுத்த வேண்டாம். 6–இல் சனி, கேது சஞ்சரிப்பதால், வாழ்க்கை வசதிகள் முன்பைவிட அதிகப் பட்டிருக்கும். இன்னும் அதிகப்பட வாய்ப்புள்ளது. சுப காரியங்களும் ஈடேறலாம். 5–இல் குரு சஞ்சரிப்பதால் அரசாங்கக் காரியங்கள், குழந்தைகள் மூலம் நன்மை அடையலாம். மாதத்தின் பிற்பாதியில் ஒரு சிலருக்குப் பல வழிகளில் தன லாபம் ஏற்படலாம்.

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுபச் செலவு, விரயம், அரசாங்கப் பீடை, புத்திர வர்க்கத்தாரால் கஷ்ட நஷ்டம், தீயவர்களால் இழப்பு முதலிய பலன்களை அடையக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் மன உற்சாகம், தெளிவு, சுகம், தனம் பொருள் லாபம், தொழில், உத்தியோக வழியில் நன்மை, நல்ல தோற்றத்தை வெளிப்படுத்துவது, பிறர் சந்திப்பு முதலிய பலன்கள் ஏற்படக்கூடும். ராகு 11–இல் சஞ்சரிப்பதால், தக்க உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

சனி, கேது 5–இல் சஞ்சரிப்பதால் தொடர்ந்து குழந்தைகளின் நலன் குறித்துக் கவலை இருந்து வரும். சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணைவரோடு இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. குரு 4–இல் சஞ்சரிப்பதால் சுய தொழில் செய்பவர்கள் இனி முன்னேற்றம் அடைவர். அபிவிருத்தி செய்ய ஏற்ற காலம். தேவைப்பட்டால் இடமாற்றம் செய்யலாம். ராசி மீது செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன் கூட்டாகச் சஞ்சரிப்பதால், நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்றாலும் கோபதாபங்கள், வரம்பு மீறிய செயல்களில் ஈடுபடுவது நல்லதல்ல. சூரியன் உங்கள் ராசியதிபதியாவதாலும், ஆட்சி பெற்றுச் சஞ்சரிப்பதாலும் சுப காரியங்களில் ஈடுபடலாம்.


கன்னி



கன்னி ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் பிற கிரகங்களின் சேர்க்கையோடு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பல வழி லாபமுண்டு. தொழில் துறையிலும் வேண்டப்பட்டவர்களாலும், உடன் பிறந்தவர்களாலும், பெண்களாலும் லாபம் உண்டாகலாம். மாதத்தின் பிற்பாதியில் விரயஸ்தானத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் சுபச்செலவு ஏற்படும். செவ்வாய் 8–ஆம் தேதி முதல் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஞாபக மறதி ஏற்படும். எக்காரியத்திலும் நிதானத்துடனும், கவனத்துடனும் செய்ய வேண்டும்.

சுக்கிரனும் மாதத்தின் பிற்பாதியில் விரயத்தில் சஞ்சரிப்பதால் வாகனக் கெடுதி, ஆடம்பரப் பொருள் பின்னம் ஏற்பட வாய்ப்புண்டு. குரு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குழந்தைகள் சம்பந்தப்பட்டோ, கடன் அல்லது எதிர்ப்புகளாலோ பிரச்சனைகள் ஒரு சிலருக்கு ஏற்படக்கூடும். திருமணம் முதலிய சுப காரியங்கள் ஜனன ஜாதகத்தில் நடைபெறும் திசாபுத்திகளைப் பொறுத்து அமையும். புதன் 3–ஆம் தேதி முதல் 26–ஆம் தேதி வரை லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சுய தொழில் செய்பவர்களுக்கு அனுகூலம் ஏற்படும்.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் தொழில் வழியில் லாபத்தைக் கொடுக்கும். உங்களது அதிகாரம் ஓங்கும். பல வழி நன்மை ஏற்படும். பொருளாதார நன்மை உண்டு. மாதத்தின் பிற்பாதியில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் 11–இல் சஞ்சரிப்பதால் பொருள் வரவு ஏற்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும். சுப காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம். ஒரு சிலருக்கு ரத்த சம்பந்தம் உடைய உறவினர்கள், வாழ்க்கைத் துணைவர் ஆப்த நண்பர்களால் உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலப்படும்.

குரு 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பொருள் வரவு, தன லாபம், குடும்ப அபிவிருத்தி ஏற்படும். சுப காரிய ஈடுபாடுகள் நன்மையைத் தரும். 3–இல் சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் உங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகள் வந்து சேரும். ராகு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொலைதூரப் பயணங்கள் ஒரு சிலருக்கு ஏற்படக் கூடும். கருவுற்ற பெண்கள், குறிப்பாகக் குழந்தைப்பேறு ஏற்படும் காலமாக இருப்பின் கவனமுடன் இருக்க வேண்டும். தகுந்த மருத்துவ மனைக்குச் சென்று ஆலோசனைகள் பெற்று நடந்து கொள்ள வேண்டும்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் காரியத் தடைகளை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளில் ஆதாயம் உண்டு. செவ்வாய், சுக்கிரன் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் மாதத்தின் பிற்பாதியில் தொழில் துறையில் நன்மைகளை எதிர்பார்க்கலாம். செவ்வாய் 10–இல் சஞ்சரிப்பதால் உங்களது அதிகாரம், செல்வாக்கு இவற்றைத் தவறாகப் பயன்படுத்தி எந்த இடத்திலும் காரியம் சாதிக்க முயற்சிக்க வேண்டாம். சுக்கிரன் 10–இல் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குத் தொழில் தலத்தில் பெண்களால் எதிர்ப்பையும், பிரச்சனைகளையும் சந்திக்க நேரலாம்.

ராசி மீது குரு சஞ்சரிப்பதால் ஏதேனும் ஒரு வகையில் கட்டுப்பாடுகள் உங்கள் வாழ்க்கையில் இருந்து வரும். சனி 2–இல் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் பழைய பாக்கிகள் அல்லது வெகு நாட்களுக்கு முன் பழக்கப்பட்டவர்களால் ஆதாயம் கிட்ட வாய்ப்புண்டு. ராகு 8–இல் சஞ்சரிப்பதால் விருப்பத்தின் பேரிலோ அல்லது சூழ்நிலைகள் காரணமாகவோ சிலர் இக்கட்டான சூழ்நிலையில் தொழில் செய்யவோ, குடியிருக்க வேண்டிய சூழ்நிலைக்கோ ஆளாவர். சுப காரியங்கள் இன்னும் சில மாதங்கள் கழித்து நிறைவேறலாம்.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் ஏதேனும் எதிர்பாராத கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடும். அதுவும் மாதத்தின் தொடக்க நாட்களில் ஏற்படக்கூடும். மிக மிகக் கவனம் வேண்டும். மாதத்தின் பிற்பாதியில் பல்வேறு பிரச் சனைகள், காரியத் தடைகள் ஏற்படும் வாய்ப் புண்டு. நேரான வழி முறைகளாலும், தெய்வீகச் சிந்தனைகள் மூலமும் தடைகளை அகற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். 8–ஆம் தேதி வரை குழந்தைகள் மீது கவனம் வேண்டும். ஜன்மச் சனி நடைபெறுவதால்

போக்குவரத்துக் களில் கவனம் வேண்டும். இம்மாதம் தொழில், உத்தியோகத் துறைகளில் குறிப்பிடத்தக்க முன் னேற்றங்களை எதிர்பார்க்க இயலாது.

12–இல் குரு இருப்பதால் உங்களால் இயன்ற தான, தர்மங்களைச் செய்யலாம். தற்போதைய அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொண்டாலே அது வெற்றிதான். திருமணம் முதலிய சுப காரியங்கள் சித்தியாகும். ராகு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் புதிய கூட்டுத் தொழில்களில் அதுவும் வேற்று மதக் காரர்களுடன் இணைந்து செய்வது கூடாது. ராசி மீது கேது சஞ்சரிப்பதால் குழப்பங்களுக்குப் பஞ்சமிராது. திடமான முடிவெடுத்துச் செயல் படுவது நல்ல பலனைக் கொடுக்கும். பொதுவில் இம்மாதம் சோதனை மிக்கது.

மகரம்



மகர ராசி அன்பர் களுக்கு, சூரியன் இம்மாதத் தின் முற்பாதியில் 7–ஆம் வீட் டில் சஞ்சரிப்பதால் எதிர்ப்புகள் பலவாறாகும். அதுவும் மாதத் தின் ஆரம்ப நாட்களில் கவன மாகச் செயல்பட வேண்டும். மாதத்தின் பிற்பாதியில் 8–இல் சூரியன், செவ்வாய், சுக்கிரன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிர்பாராத செலவு, எதிர்பாராத சம்பவங்கள் உங்களை வேதனைப்படுத்தலாம். இம்மாதம் உடல் நலனிலும், வெளியூர்ப் பயணங் களிலும் போதிய கவனம் செலுத்த வேண்டும். மிகவும் வயதானவர்களுக்கு ரத்த சம்பந்தம் உடைய நோவுகள் ஏற்படலாம்.

பிறர் மீது கோபதாபங்கள் ஏற்படக்கூடும் அல்லது பிறர் உங்களது பொறுமையைச் சோதிக் கும் முகமாகச் செயல்படலாம். கோபதாபங்களை அடக்கிக் கொள்வது நல்லது. இருதயக் கோளாறு உள்ளவர்கள் தகுந்த மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. சனி, கேது 12–இல் சஞ்சரிப்பதால் சுப காரியங்களில் செலவினம் ஏற்படுவது, சொத்து சுகம் வாங்குவது, புதிதாகத் தொழில் தொடங்குவது முதலியவற்றால் பொருள் முடக்கத்தை அடையலாம். அது தவறல்ல. கையில் பணமாக வைத்துக் கொண்டால் தீயவர்கள் அப்பணத்தைக் கைக்கொள்வர். சனி, கேது விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தான தர்மங்கள், திருப்பணிகள் செய்வது பலன் தரும்.

கும்பம்



கும்ப ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் தொழில்வழி நன்மையையும், உத்தியோக வழியில் உயர்வையும், சத்ரு ஜெயத்தையும் கொடுக்கும் வாய்ப்புண்டு. ஒரு சிலருக்கு, குறிப்பாகச் சிறார்களுக்குச் சுவாசக் கோளாறு, காய்ச்சல், வயிற்று வலி முதலியவை ஏற்படக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் வாழ்க்கைத் துணைவருடன் சர்ச்சைகள் ஏற்படக்கூடும். வாக்குவாதங்களைத் தவிர்ப் பது நல்லது. தாய்வழி வர்க்கத் தாருக்குச் சனி, கேது ஏதேனும் பிரச்சனைகள், மருத்துவச் செலவை ஏற்படுத்தக்கூடும்.

10–இல் குரு சஞ்சரிப்பதால், தொழில் வழி வருமானம் உண்டு. இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப் புண்டு. தொழில் வழிப் பயணம் பயன் கொடுக் கும். திருமணம் முதலிய சுப காரியங்கள் எதிர் வரும் குருப்பெயர்ச்சிக்குப் பின்னரே ஈடேறும். 11–இல் சனி, கேது சஞ்சரிப்பதால் பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். ராகு 5–இல் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் புதிய விஞ் ஞான யுக்திகளைப் பயன்படுத்தி முன்னேற்றம் பெறலாம். சுக்கிரன் 7–இல் சஞ்சரிப்பதால் பெண் களால் ஒரு சிலருக்கு எதிர்ப்பு வரலாம்.

மீனம்




மீன ராசி அன்பர் களுக்கு, சூரியன் இம்மாதத் தின் முற்பாதியில் வீண் குழப் பங்களை ஏற்படுத்தும் வாய்ப் புண்டு. இப்பொழுது யாதொரு விஷயத்திலும் முடிவெடுத்துச் செயல்பட வேண்டாம். மாதத்தின் பிற்பாதியில் சூரியன், செவ்வாய் 6–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் புதிய முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்கலாம். வழக்கு விவகாரங்களில் சிலருக் குச் சாதகமான போக்குக் காணப்படும். 9–இல் குரு சஞ்சரிப்பதால் தொலைதூரப் பயணங்கள், தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். அதுபோல் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறவும் வாய்ப்புண்டு.

சனி, கேது 10–இல் சஞ்சரிப்பதால் தொழில் துறையில் திருப்தி இருக்காது. ஏதோ இருட்டில் சஞ்சரிப்பது போன்ற பய உணர்வே உங்களிடம் காணப்படும். 4–இல் இராகு சஞ்சரிப்பதால் போக்குவரத்துகளில் கவனம் தேவை. வீட்டை உள்ளும் புறமும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பயணக் காலங்களில் உங்களது உடமைகள் மற்றும் விலை உயர்ந்த பொருள்களைப் பத்திர மாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சிலருக்கு உடன் பிறந்தவர்கள் மூலம் எதிர்ப்பும், செலவும், விவகாரமும் ஏற்படும்.

கட்டுரை

போதும் திரும்பி வாருங்கள்!



கவிஞர் புவியரசு

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு நோய்களை ஒழிக்க, மருந்துகளை ஒழியுங்கள்! என்று அதிரடியாக ஆரம்பித்திருக்கிறார், ஒரு பெரிய மருத்துவ மேதை.

டாக்டர் பி.எம். ஹெக்டே, ஒரு சர்வதேச மருத்துவ நிபுணர், புகழ்பெற்ற மணிபால் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராய் இருந்தவர்; லண்டன், எடின்பரோ, கிளாஸ்கோ, டம்ளின் முதலிய நகரங்களில் மேல் பட்டங்கள் பெற்றவர்; பாரதிய வித்யா பவன் தலைவராக இருந்தவர், வடக்கு கொலராடோ பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்தவர், உலக முழுவதும் மருந்து ஆய்வு மையங்களில் தொடர்பு கொண்டவர், தற்போது மங்களூரில் வாழ்ந்து வருபவர்.

டாக்டர் ஹெக்டே அவர்களின் சிந்தனைகள், நமக்குக் கொஞ்சம் தெரியும்தான். ஆனால், அந்தப் பெரிய உண்மையை மிகச் சிறியதாக எடுத்துக் கொண்டு நல்லதைப் புறந்தள்ளிவிட்டோம். ஹீலர் பாஸ்கர் நாள்தோறும் தொலைக்காட்சியில் அடித்துச் சொன்னாலும், இடித்துச் சொன்னாலும் உடனே மருந்துக் கடைக்கு ஓடுவதில் தான் நமது கவனம்.

இப்போது டாக்டர் ஹெக்டே, நமது உடல்நலம் பற்றி ஆதாரப்பூவமாக, பல சான்றுகளுடன், ஆவண ஆதாரங்களுடன் சொல்கிறார்.



அண்மையில் கமல்ஹாசன் அவர்களைச் சந்தித்தபோது, நாங்கள் போன காரியத்திற்கு முக்கியத்துவம் தராமல், உடனே "ஹெக்டேயின் புத்தகத்தைப் படியுங்கள்" என்று அழுத்தமாகச் சொன்னார்.

அவர் சொன்ன புத்தகம்தான் "மருத்துவக் கல்லூரிகளில் டாக்டர்களுக்குக் கிடைக்காமல் போன பாடம் என்ன?" என்பது. பெங்களூர் சப்னா புத்தக மையம் ஒன்றிலிருந்து நூலைத் தருவித்துப் படித்தபோது பெரிய அதிர்ச்சிதான்.

எல்லா நோய்களுக்கும் மருந்துகள் உண்டு. அந்த ரசாயன மருந்துகள், பெரிய பெரிய கம்பெனிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன. விளம்பர, வினியோக, மருத்துவர்களை அணுகி, பல சலுகைகளை, பரிசுகள் தந்து வழங்கி விட்டுப் போகிறார்கள். சுற்றுவட்டார மருந்துக் கடைகளுக்கும், டாக்டர்கள் அவற்றையே பரிந்துரைக்கிறார்கள். அவை மட்டும்தான் அக்கம் பக்க மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

நமக்குத் தெரியாமல் அந்த மருந்துக் கம்பெனிகளின் மாயவலையில் நாம் அகப்பட்டுக் கொள்கிறோம்.

உலகமகா ஊழல்களில், பகிரங்க மாகச் செய்யப்பட்டு வரும் ஊழல் மருத்துவ ஊழல்தான்.

இந்த மருந்துக் கம்பெனிகள் சாதாரணமானவை அல்ல. பகாசுரக் கம்பெனிகள். இவற்றின் சட்டைப் பைக்குள் பல அரசாங்கங்களே இருக்கின்றன. அந்த அரசுகள் இந்தக் கம்பெனிகளுக்கு எதிராகப் போக முடியாது.

காலனி ஆதிக்கம் போய் கம்பெனி ஆதிக்கம் வந்திருக்கிறது. இவை மிக நுட்பமாகச் செயல்படுவதால், அதற்கு நாம் இரையாகிப் போயிருக்கிறோம்.

டாக்டர் ஹெக்டே என்ன சொல்கிறார்?

நம் தலைமீது கொட்டப்படும் இரசாயன மருந்துகளை ஆரோக்கியமான நமது உடல்களுக்குள் திணித்து, புதிய புதிய நோய்களுக்கு இரையாகிக் கொண்டிருக்கிறோம். நமது நோய்களுக்கெல்லாம் காரணம் நம் நவீன மருந்துகளே.

பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், எயிட்ஸ் முதலியவை இந்த மருந்துக் கம்பெனிகளால் உருவாக்கி உலவவிடப் பட்டவையே. பல்வேறு புதிய புதிய நோய்களின் பரிசோதனைக் களம், மூன்றாம் உலக நாடுகள்!

அப்படியானால் நாம் என்ன செய்ய?

மருந்துகள் உண்பதை நிறுத்துங்கள்.

அய்யோ! என்று அலறத் தோன்றுகிறதா? அஞ்சாதீர்! எல்லாம் சரியாகும் சும்மா இருந்தால்! அது எப்படி?

நமக்கு என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாது. ஆனால், நம் உடலுக்கு எல்லாம் தெரியும். நம் உடலுக்கு நம்மையும் தெரியும், தன்னையும் தெரியும். இது நமக்குத் தெரியாது. அதுதான் சிக்கல்! ஏன் இந்தச் சிக்கல்?

நம் ஒவ்வொருவருக்கும் ஓர் உடல் மொழி உண்டு. அதுதான் நம் தாய் மொழி. நாம் பேசும் மொழி அல்ல அது.

நம் தாய்மொழி என்பது நம் தாயால் பெற்றுப் போடப்பட்ட நம் உடலின் மொழி அது. நம் தாயின் மொழிகூட வேறுதான்.

நம் தாய்மொழி, நம் தாய்க்குக் கொஞ்சமாகத் தெரியும். அது நம் குழந்தைப் பருவத்தில், அப்புறம் நம் மொழி, தனிமொழி, நம் தாய், தந்தையருக்கும் தெரியாது. நம் குடும்ப டாக்டருக்கும் தெரியாது. மருத்துவ நிபுணருக்கும் தெரியாது. நவீன அறிவியல் மருத்துவப் பரிசோதனைக் கருவிகளுக்கும் தெரியாது.

பின் யாருக்குத்தான் தெரியும்?

யாருக்குமே தெரியாத தனிமொழி நம் உடலின் மொழி. ஒவ்வொருவருக்கும் தனித்தனிச் சொந்த மொழி!

நமக்கு ஏதாவது ஏற்பட்டால், அதற்கு டாக்டரிடம் போய்க் கேட்டால் அவருக்கு எப்படித் தெரியும். அவர் நம்மையே கேட்பார். என்ன ஆச்சு? என்பார். நாம் உளறினால், அந்த உளறலை வைத்து, ஒரு மாதிரியாக ஊகித்து, மருந்து மூட்டை சுமந்தவன் தந்து பரிந்துரைத்தானே அதை எழுதிக் கொடுப்பார். இதச் சாப்பிடுங்க பார்ப்போம் என்பார்! மருந்துக் கம்பெனிக்காக நம் உடலில் ஒரு சோதனை.

என்ன பைத்தியக்காரத்தனம்.

நம் உடலுக்குக் கேடு என்றால், நம் உடலிடம்தானே கேட்க வேண்டும்?

கேட்க மாட்டோம்! ஏனென்றால் நமக்கு அது பழக்கமில்லை. நாம் அப்படிப் பழக்கப்படவில்லை. அதனிடம் பேசியும் பழக்கமில்லை.

இனிமேல், உடல்நிலை சரியில்லை என்றால் உங்கள் உடலிடமே கேளுங்கள்.

என்ன ஆச்சு உனக்கு? நேற்று என்ன சாப்பிட்டாய்? நேற்று என்ன தவறு செய்தாய்? என்று கேளுங்கள். நிதானமாய்ப் பக்குவமாகக் கேளுங்கள்.

நாம் கேட்பதில்லை. கேட்டாலும் நமக்குப் பதில் கிடைப்பதில்லை.

காரணம் என்ன?

நம் மொழி நமக்குப் புரியவில்லை.

நம் தாய்மொழி தெரியாதவர்களாக, நாம் திண்டாடுகிறோம். அதனால் தண்டனை உண்டு.

முதலில் பொறுமையாக நம் தாய்மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள்.

அப்போது நம் உடல் நம்மிடம் பேசும்.

அது கத்தாது! அமைதியாகப் பேசும். அதைக் கேட்கப் பழகிக் கொள்ளுங்கள்.

நம் உடல் மிகமிக புத்திசாலித்தன மானது. அதற்கு எல்லாம் நன்றாகத் தெரியும். துல்லியமாகத் தெரியும். அதற்குத் தீர்வும் தெரியும்.

இப்படிப் பேசிப் புரிந்து கொள்ளா மல், மருந்துக் கம்பெனிகளின் செம்மறி யாடுகளாய் தலைகுனிந்து தடுமாறிப் போய், பலிகடாக்கள் ஆகிவிட வேண்டாம்.

உங்கள் தாய்மொழிக்கு வரி வடிவம் இல்லை. ஒலி வடிவமும் இல்லை.

இதன் மொழி மௌன மொழி.

அது சொல்கிறது. சர்க்கரை வியாதிக்காரர்களே! வாழைப் பழம் சாப்பிடுங்கள்; மாம்பழம் சாப்பிடுங்கள். தேங்காய் சாப்பிடுங்கள்! தேங்காய் எண்ணெயில் உள்ளது நல்ல கொலஸ்ட்ரால்.


எல்லாப் பழங்களையும் தாராள மாகச் சாப்பிடுங்கள்! மாம்பழம் சர்க் கரையை சமநிலையில் வைத்திருக்கும் என்கிறார் டாக்டர் ஹெக்டே. ஆனால், நம் மருத்துவர்களோ கூடாது என்கிறார்கள்.

நமது உடல் எப்படி நம்மிடம் சொல்கிறது?

நம் நாக்கின் மூலம் சொல்கிறது! நாக்கு மாம்பழம் சாப்பிடச் சொன் னால் அதுதான் சரி. அதுதான் உடலின் மௌனமொழி. சுத்தமாய்ப் பேசும் நாக்கு உங்களிடம் மௌன மொழியில் பேசுவதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எந்தப் பழமும் கெடுதல் அல்ல. அந்தப் பழங்களின் இனிப்பு அளவை அதிகப்படுத்தாது!

அரிசி சாப்பிடாதே! கோதுமை சாப்பிடு! சப்பாத்தி சாப்பிடு! என்ற அறிவுரைக்குள் ஓர் அரசியல் ஒளிந்திருக்கிறது. அரிசிக்குப் பின்னாலும் அரசியல்.



டாக்டர் ஹெக்டே

சப்பாத்தி கூடாது; புரோட்டா கூடாது; அரிசிதான் நல்லது.

நீங்கள் எதற்கும் உங்கள் உடலிடமே பேசுங்கள். அது நல்லதே சொல்லும். அது வேண்டாம் என்றால் விட்டு விடுங்கள்.

அது நிச்சயம் மருந்து மாத்திரைகள் வேண்டாம் என்றுதான் சொல்லும். சொன்னால் கேளுங்கள்.

யார் பெட்டிகளை நிரப்பவோ, ஏராளமான ரசாயன சரக்குகளை உள்ளே திணிக்கும்போது, நமது உடல் உருவமாய், வானை நோக்கி இரு கை களையும் விரித்துக் கொண்டு



“தேவனே... தேவனே... என்னை ஏன் கைவிட்டுவிட்டீர்?” என்று அலறும்!

அந்தத் தேவன் வேறு யாரும் இல்லை! அது நாமேதான்.

அஞ்சு காசு பெறாத சாக்பீஸ் பவுடரில் கொஞ்சம் மருந்து சேர்த்து 50 ரூபாய்க்கு விற்கின்றன மருந்துக் கம்பெனிகள். காலாவதியான மருந்துகளுக்கு இந்தியா!

இதில் கீழ்மட்டம் வரை எல்லாருக்கும் பங்கு உண்டு. மந்திரிமார்க்குப் பெரும் பங்கு. இங்கே நடந்ததுதான்! இதற்கு ஆதாரம் உண்டு. ஆப்பிரிக்காவில் எய்ட்ஸ் நோய்க்கு 50 காசில் ஒரு மருந்து கண்டுபிடித்தார்கள். அது என்ன ஆயிற்று? இன்றுவரை அது ஏன் வரவில்லை? அதுதான் அரசியல்.

கண்ட கண்ட மருந்துகளைத் தாறுமாறாக உள்ளே திணித்து ஆண்டுக்கு 2,25,000 பேர் அநியாயமாய்ச் செத்திருக்கிறார்கள் (அமெரிக்காவில் மட்டும்).

இப்போது மேற்கத்திய மக்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்! மருந்துகளுக்கு எதிராக.

நம் உடலில் ஒரு துளை விழுந்தால், உடனே நம் உடல் அதைச் சரிசெய்து கொள்ளும். தோல், தசையைச் சுருக்கி, அதை அடைக்கும். வெளியே வந்த ரத்தம் கெட்டியாகத் துளையை அடைத்துவிடும். நம் உடலின் சுய மருத்துவம் அது.

‘எனக்கு ஹார்ட்ல மூணு பிளாக் இருந்தது. ரெண்டு பிளாக்கை எடுத்திட்டாங்க. இன்னும் ஒரு பிளாக் பாக்கியிருக்கு. அத அப்புறம் பண்ணிக்கலாம்னு விட்டுவிட்டாங்க’ என்றார் நண்பர்.

உண்மையில், அவர் மருத்துவ மனைக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை பாக்கியிருக்கிறது என்று அர்த்தம்.

வியட்நாம், கொரியப் போர்களில் இறந்துபோன அமெரிக்கப்படைகளின் உடல்களை ஆராய்ந்தபோது, 90% ஆட்களுக்கு உள்ளே பிளாக்குகள் இருந்திருக்கின்றன. அவர்களுக்கு அது தெரியவில்லை. அதனால் எந்தத் தொல்லையும் ஏற்படவும் இல்லை.

நவீன மருத்துவக் கொள்ளை, நமது பயத்தின் மீது அரியணை எழுப்பிச் சொகுசாக நம்மை ஆண்டு கொண்டிருக்கிறது; நமது காசில்.

புற்றுநோய் பயமும் அப்படித்தான். மாம்பழம் புற்றுநோய் செல்களைப் பரவாமல் தடுக்கும். சில சமயம் புற்றுநோயே புற்றுநோயைச் சாப்பிட்டுவிடும்.

நவீன மருந்துகளின் பக்கவிளைவுகளால் மட்டும், ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர் சாகிறார்கள் மேற்கில்! இங்கே கணக்கு என்னவாக இருக்கும்?

எளிய உணவு, அளவான உணவு, தூய நீர், நல்ல நடை, உழைப்பு, நோய்க்கஞ்சா மனம், உடல்மொழி அறிவு, நல்ல உறக்கம், நல்ல மனம் முதலிய எளிய வழிகளில் ஆரோக்கியமான வாழ்வு செலவில்லாமல் கிடைக்கும்.

இரசாயன மருந்துகளே நோய்க்கான காரணம். மனிதகுலத்தை, மருந்துகளும், மருத்துவர்களும், மருத்துவ மனைகளுடன்தான் காப்பாற்றுகின்றன என்ற கூற்று, மடத்தனமானது! என்று அடித்துச் சொல்கிறார் டாக்டர் ஹெக்டே, பல்லாயிரம் ஆதாரங்களுடன்.

“தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன!”

– கணியன் பூங்குன்றன்.

‘மருந்தே நோய்’ என்ற இந்த அடைப்படையில் பஸ்லூர் ரகுமான் தனது எல்லா ஆங்கில மருத்துவ மேற்படிப்புகளையும் தூக்கி எறிந்துவிட்டு, தமிழகத்தில் ஒரு மருத்துவ இயக்கத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார்.


இந்த அலையடிப்பின் சிகரமாக – ‘உடலின் மொழி’ என்ற நூலின் மூலமாக ‘அக்குபங்சர்’ இயக்கத்தைச் சகல மக்களுக்குமாக உயர்த்தியிருக்கிறார் உமர்பாரூக்.

“உன் உடலைப் படி – பசித்துப் புசி – எல்லா செயற்கை இரசாயன மருந்துகளையும் உதறித் தள்ளி – எந்த நோயையும் குணப்படுத்தும் வல்லமை உன் உடலுக்கு உண்டு என நம்பு. உன்னையே நம்பு – ஆங்கில மருத்துவம் பயத்தை அடிப்படையாகக் கொண்டது. அக்குபங்சர் – அன்பை அடிப்படையாகக் கொண்டது” என்ற கருத்தை முன் வைத்து மானிட உடலை மகிமைப் படுத்தும் மருத்துவ முறைக்குத் திரும்பிச் செல்வதே புத்திசாலித்தனம்!

●

ஆன்மிகம்

திருப்பாற்கடல்



60 ஆண்டுகளுக்கு முன்பு புராணங்களைப் புளுகு என்றும் மக்கள் அவற்றை நம்பக் கூடாது என்றும், ஏன் படிக்கவே கூடாது என்றும் தமிழ்நாட்டில் பிரச்சாரமானது. கம்பராமாயணத்தையும், பெரியபுராணத்தையும் எரித்துப் பொசுக்குவதற்கான 'தீ பரவட்டும்' என்று பகுத்தறிவுவாதிகள் பாமர மக்களிடம் அடுக்குத் தமிழில் பேசி வந்தனர். 'கம்பரசம்' கம்பராமாயணத்தை விடவும், இராவண காவியம் இராமகாவியத்தை விடவும் பிரபலப்படுத்தப்பட்டன.

இதிகாசங்களும் புராணங்களும் மூட நம்பிக்கையை வளர்க்கக்கூடியவை என்றும், மூட நம்பிக்கை கடவுள் நம்பிக்கையாகக் கால்கோளிடப்பட்டு, விஞ்ஞானச் சிந்தனைகளை முடக்குவதாக விமர்சிக்கப்பட்டது.

புராணங்களைப் புளுகு என்கிற பொழுது, அந்தப் புராணங்களின் உள்ளடக்கம் மனித மனத்தை ஊனப்படுத்துகிறதா, உயர்த்துகிறதா? எனச் சிந்தனைத் தராசில் எடைபார்க்கப்படவில்லை. புராணக் கதைகள், கவிதைகள் எல்லாமே கற்பிதங்கள்தான். அழகிய தமிழை வளர்த்த செவிலித்தாய்கள். அவற்றின் கட்டமைப்பு, சந்தம், கற்பனை எல்லாமே தமிழ் மொழிக்கு அலங்காரம் செய்தவை.

புளுகுக்கு மறு பெயர் பொய். அது பக்காத்திருடன் பேசுகிற சுயநலப் பொய் அல்ல. படைப்பாளிகளின் பொதுநலப் பொய். வள்ளுவரே சொன்ன பொய்மையும் வாய்மைதான் எனப் போற்றப்பட்ட பொய்.

தேவாரத் தமிழ் தேன் தமிழ். சிலப்பதிகாரத் தமிழ் சிருங்காரத் தமிழ். மணிமேகலைத் தமிழ், மாசிலாத் தமிழ்.

சங்கத் தமிழ், சமயத் தமிழ் அனைத்தையுமே படித்தால், அவற்றில் இதிகாச, புராணத் தொன்மங்கள் இறைந்து கிடப்பதைக் காணலாம். தொன்மங்களைத் தொலைத்துவிட்டு, இலக்கிய மாளிகையின் அழகை ரசிப்பது, இளமங்கையின் கூந்தலைக் களைந்துவிட்டு, அவளுடைய முக அழகை ரசிப்பது மாதிரித்தான்.

பாண்டிய மன்னன் ஒருவன் தனது மனைவியின் கூந்தல் இயற்கையாகவே மணக்கிறதா அல்லது அதில் சூடியுள்ள பூவால் மணக்கிறதா? என்கிற கேள்வியை எழுப்பி விடை தேடினான். இது திருவிளையாடல் புராணத்தில் தட்டுப்படக் கூடிய பெட்டிச்செய்தி. இந்தச் செய்தி மூட நம்பிக்கை சம்பந்தப்பட்டதா? முதிர்ந்த கற்பனை சம்பந்தப்பட்டதா?

நமது இதிகாசப் புராணங்கள் அனைத்தும் அந்தந்தக் காலங்களில் வாழ்ந்த படைப்பாளி களின் மனோரதத்தின் ஓட்டங்கள். அவற்றை உதாசீனப்படுத்துவதோ, அவற்றிற்கு உள்நோக்கம் கற்பிப்பதோ, அவற்றை ஊர் மக்களைக் கூட்டி எரிக்கச் சொல்வதோ இலக்கியத் துரோகமாகும்.

இன்றைக்கு எழுதப்படுகிற கதைகளில்கூட, நடைமுறையில் நம்ப முடியாத சம்பவங்கள் எத்தனையோ உள்ளன. கற்பனை வளத்தால் அவற்றைச் சிருஷ்டிக்கிறார்கள். கவிதைகளும் அப்படியே. இவை அனைத்துமே வாசகனுடைய சிந்தனையை வளப்படுத்துவதற்கும் வலுப்படுத்து வதற்கும் உரியவை.

இக்கற்பனைகளை அனுபவித்து ரசிக் கிறவன் இரண்டாவதாகச் சிருஷ்டிக்கப்படுகிறான். ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செய்வான். காக்கை குருவியைத் தனது சாதி என்பான். பகுத்தறிவுவாதிக்கு இந்தப் பார்வை பொருந்தி வருவதில்லை. மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகனின் செயலை மடத்தனம் என்பதற்கு என்ன பெரிய அறிவு தேவை? அன்புசெயலைக்கூடப் பகுத்தறிவு ஆய்வுதான் செய்யும், ஆதரிக்காது.

மேற்கு நாடுகளில் புராண இதிகாசங்கள் (Mythology) பகுத்தறிவுக்கு உட்படுத்தப்படு வதில்லை. மகாகவி மில்டனின் “இழந்த சொர்க்கம்” (Paradise Lost) ஆங்கில இலக்கியத் தளத்தில் வாசிக்கப்படுகிற மகத்தான இலக்கியம். அக்காவியமும் நமது புராணக் கதையைப் போன் றதுதான். எவரும் அதைப் புளுகு எனப் பேசு வதில்லை. புனைவு சம்பந்தப்பட்டதாகவே பேசு வார்கள்.

இந்தப் பின்புலத்தில் நமது இதிகாச, புராண இலக்கியங்களை நாம் மறுவாசிப்புச் செய்வோ மானால் நம்முடைய கற்பனை வளத்தின் மதிப்பு கூடுதலடையும். ரசனை உணர்வால் நாம் நயத் தக்கவராவோம். அதற்கு உதாரணமாகத் திருப்பாற்கடலைப் பற்றிய ஒரு மீள்பார்வைதான் இது.

108 வைணவத் திருத்தலங்களில் திருப் பாற்கடல்’ ஒன்று. பத்து ஆழ்வார்களின் பாடல் பெற்ற தலம். இப்பாற்கடலில் ஆதிசேசன் என்ற பாம்புப் படுக்கையில் திருமால் அறிதுயில் கொள் வதாக ஒரு காட்சியைப் புராணம் காட்டுகிறது. அக்காட்சியைக் கண்களை மூடி ரசித்தால், ருசித்து அனுபவிக்கலாம்.

முப்பத்து முக்கோடி தேவர்களின் தலை வனாகிய தேவேந்திரன், துர்வாச முனிவரின் சாபத்தினால் தன் செல்வங்களை இழந்தான். தேவகுருவின் ஆலோசனைப்படி, பாற்கடலைக் கடைந்து ஐராவதம், பரிவாரம் முதலிய யானை களைப் பெற்றால் தமது இழந்த செல்வங்களை மீட்கலாம் என்பது அவனுக்குத் தரப்பட்ட குருபோதனை.

பாற்கடலைக் கடைவதற்குத் தேவர்களின் பலத்தினால் மட்டும் இயலாது எனத் தனது குல எதிரிகளான அசுரர்களையும் தேவேந்திரன் சேர்த் தான். பாற்கடல் அமிழ்தத்தில் உரிய பங்கை அவர்களுக்கும் தர ஒப்பந்தமாகியது.

பாற்கடலைக் கடைவதற்கான மத்து மந்தர மலை. மத்தைச் சுழற்றும் கயிறு சிவபெருமானின் கழுத்தில் உள்ள வாசுகிப் பாம்பு.

கடையக் கடைய வாசுகிப் பாம்புக்கு வலி தாங்க முடியவில்லை. அதனால், அது பாற்கடலில் கக்கிய விஷம், தேவர்களையும் அசுரர்களையும் துரத்தியது. அவர்கள் தப்பித்துக் கயிலாய மலைக்கே ஓடினாலும் துரத்தி வந்தது.

தற்கால அணுக்கதிரியக்கம் போன்ற ஆலகால விஷத்தைப் பரவ விட்டால், உலகமே அழிந்து விடுமாம். உலகத்தை அழியாமல் காப் பதற்காக, தானே அழிந்தாலும் சரியென்று சிவ பெருமானே அந்த விஷத்தை எடுத்து உண்டு விட்டார். அது அவர் கழுத்துப் பகுதிக்கு வந்த போது, பதைபதைத்த பார்வதிதேவி, அவருடைய கழுத்தை அழுத்திப் பிடித்து சிவனைக் காப்பாற்றினாள். கண்டமெனும் கழுத்துப்பகுதியே நீல நிறமாகியது. அதனால்தான் அவர் நீல கண்டன் ஆனார்.

விஷத்தைப் பார்த்த பிரம்மா பீதியடைந்தார். திருமால் திகைத்துப் போனார். ஈசுவரனாகிய

சிவன் மட்டுமே துணிச்சலாக ஆலகால விஷத்தை அள்ளிச் சாப்பிட முன்வந்தவர்.

உப்புக் கரிக்கும் கடல் நமக்குத் தெரியும். உப்புக் கடலுக்குள் சுறாவும், திமிங்கலமும் சுற்றித் திரியும். காட்டு வளம்போலக் கடலில் மீன்வளம்.

அவை மட்டுமா? மூழ்கி மூழ்கி அள்ளி வருவதற்கு கரையோரம் முத்தும், பவளங்களும் உள்ளன. வெள்ளியை உருக்கிய குழம்பாகக் கொதித்துக் கிடக்கும் உப்பளங்கள். உபயோகப் பொருள்கள் இத்தனையும் கடலில் இன்றைக்கும் கிடைக்கின்றன.



மில்டன்



கம்பர்

உப்புக் கடல் முழுவதை யுமே பாற்கடலாகக் கற்பனை செய்து பாருங்கள். பாற்கடலின் உள்ளே பல விசேஷப் பொருள் கள். அவை எல்லாமே நமது பௌராணிகர்களின் அசாத்திய



பாரதி

மான வெறும் கற்பிதங்கள்தான். அவையே நமக் குள்ளிருக்கும் கற்பனைச் சுரப்பியைத் தூண்டி இயக்க வைக்கின்றன.

அமிர்தத்திற்காகப் பாற்கடல் கடையப்படு கிறது. சுத்தமான தேனை ஆங்கிலத்தில் Honey என்றும் அமிர்தத்தை Nectar என்றும் சொல் வார்கள். உடல் நோய்களை மட்டுமே போக்குவது தேன். அமிர்தமோ மரணத்தையே வெல்ல வல்லது என்கிறது நமது சாஸ்திரம்.

'அஸதோ மா ஸத் கமய. தமஸோ மா ஜ்யோதிர் கமய. மிருத்யோ மா அம்ருதம் கமய' என்பது, பொய்யிலிருந்து சத்தியத்திற்கு, இருட்டி லிருந்து பிரகாசத்திற்கு, மரணத்திலிருந்து சாவா மைக்கு நம்மைத் தன்னம்பிக்கையூட்டி நகர்த்துவதாகச் சாஸ்திரம் கூறு கிறது.

பாத்திரத்தில் புரை ஊற்றி வைக்கப்பட்ட பால் தயிராகிறது. கடைந்தால் வெண்ணெய். அதிலிருந்து நெய் திரளுகிறது. பாற்கடலிலும் இப்படிப் பல கிடைக்கின்றன.

பாற்கடலைக் கடைந்தால், என்ன ஆச்சரியம்! நம்ம ஊர் விவசாயி தோண்டிய ஆழ்குழாய்க் கிணற்றில் மண்ணும், மணலும் வராமல் தண் ணீரே முதலில் பீய்ச்சி அடிக்கத் தொடங்கினால் ஊரையே கூப்பிட்டு உற்சாகத்தில் அல்லவா அவர் மிதப்பார்.

இங்கே பாற்கடலைக் கடைந்த தேவர் களுக்கு அதிர்ஷ்டம் அதுபோலத் தேடிவந்து கொட்டத் தொடங்கிவிட்டது. இப்போது கடல் பாற்கடல் மட்டுமல்ல. தெய்வாம்சம் கொண்ட திருப்பாற்கடலாகிவிட்டது. கடலுக்குள்ளிருந்து ஒரு வெள்ளைப்பசு வெளிப்படுகிறது. பாற்கடலில் உள்ள பால் போதாதென்று இந்த வெள்ளைப் பசுவின் பாலும் கூடுதலாகிறது. பெண் முகத்தை யும் பசுவின் கால்களையும் கொண்ட வித்தியாச மான பசு அது.

இப்படிப்பட்ட பசு இருக்குமா என்பது பகுத் தறிவுவாதிகளின் கேள்வி மட்டுமல்ல, கேலியும் தான். பகுத்தறிவைக் கடந்து ரசனைக்குள் பிரவேசித்தால் மட்டுமே அந்தக் கற்பனையை அனுபவிக்கலாம். பாலை மட்டுமே குடித்துத் தண்ணீரைத் தவிர்த்து விடுவதாகப் பேசப்படுகிற அன்னப் பறவை என்ன நிஜமா?

பூ மலர்கிறது. அதன் வாசனையும் வண்ணமும் கொள்ளை அழகு. அதன் மேல் சில பனித் துளிகளும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

கவிச்சக்கரவர்த்தி கம்பனே இன்ப அதிர்ச்சி யடையும்படி எவனோ ஒரு விவசாயி கிணற்றி லிருந்து ஏற்றம் இறைக்கும்போது 'மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே' என்று பாடுகிறான். பனித்துளி தூங்குமா என்று கேட்பது பகுத்தறிவு. ரசனை இருந்தால்தானே அந்தக் கற்பனைக்குள் திளைக்க முடியும்

பாற்கடலில் இரண்டாவதாகத் தோன்றுகிறது 'உச்சை சிரவஸ்' என்ற வெள்ளைக் குதிரை. மூன்றாவதாக, ஐராவதம் என்ற ஒரு வெள்ளை யானை. இந்த வெள்ளை யானைக்குப் பறக்கவும் தெரியும் என்கிறது புராணம். பறக்க வேண்டும் என்று ஆசை புராண காலத்தில் துளிர்த்திருக் கிறது. பறவைகள் பறப்பதைப் பார்த்ததால் ஏற்பட்ட ஆசை.

நான்காவதாக, கற்பக விருட்சம். அந்த மரத்தின்கீழ் நின்று எதை நினைத்தாலும் உடனே அதைக் கொடுக்குமாம். கற்பனைதான். அதனு டன் சேர்ந்து பாரிஜாதம், ஹரிசந்தனம், சந்தனம், மந்தாரம் என ஐந்து மரங்கள்.

இங்கே மரத்தின்கீழே நிற்கிற மனிதன் "நினைப்பவனாக" நிற்கிறான். அதே மரத்தின் கீழே ஓர் எருமை நிற்குமானால், எருமை என்ன நினைக்கும்? எருமையைப் போலவா நாமும்? மனிதனுக்கு மட்டுமே ஆசைப்படவும் தெரியும், ஆக்கித் தரவும் தெரியும்.

ஐந்தாவதாக, அப்சரஸ் பெண்கள். ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, கிருகத்தலை, சிகத்தலை, சகசந்திசை, பிரமலோசத்தி, அநுமு லோசை, கிருதாசி, விசுவாசி, உருப்பசி, பூர்வ சித்தி, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, இரதி, இந்திராணி, ஸகேசி, மஞ்சுகோஷ், சித்திரலேகை என 60 ஆயிரம் பெண்களாம்.

உலக அழகியாகக் கிரீடம் சூட்டப்படத்தக்க தங்க விக்ரகங்களாக அவர்கள் வெளிப்படுகிறார் கள். திரிஷா, நயன்தாரா, தமன்னா என நடிகை களை ரசிக்கிற நமது இளவட்டங்களுக்குப் பாற் கடல் பாவைகளைப் பற்றி ஏதாவது தெரியுமா?

இந்திரனே ஆசைப்பட்ட பேரழகி அகலிகை வருகிறாள். திருமகள் லட்சுமி வருகிறாள். நோயைக் குணப்படுத்தும் அமுத கலசத்துடன் தன்வந்திரி வருகிறார்.

சூரியமணி, சமந்தகமணி, கவுஸ்துபமணி, தேவதத்த சங்கு, புஷ்பகவிமானம், நந்தி கோஷ ரதம், மதுரசம், ஆலகாலவிஷம், வாருணி, சூரியன், சந்திரன், மூதேவி, சீதேவி, தாரை, சரஸ்வதி தோன்றுகிறார்கள்.

இப்படியாகப் பாற்கடலைக் கடையக் கடைய ஒவ்வொன்றாகக் கிடைத்துக் கொண்டே இருந் தது. பாற்கடல், 'திருப்பாற்கடல்' என ஆகின்ற போது, ஒருவிதப் பரவசம் ஏற்படுமா? இல்லையா?

மூச்சு நின்றால் சம்பவிப்பது மரணம். வாழ்க்கையே முற்றுப் பெறுகிறது. ஆடு, மாடு, புழு, பூச்சி, காக்கை, குருவி அனைத்து ஜீவராசி களுக்கும் முழு வாழ்க்கை மூச்சோடு போச்சு. மூச்சு நிற்பதற்குள் மனிதன் மட்டுமே எல்லா வற்றையும் முயற்சி பண்ணுகிறான், எல்லாமாகவும் ஆகிறான். அதற்கு அவனுக்குத் தேவை கற்பனை யும், ரசனையும்தான்.

திருப்பாற்கடலாக மனிதனையே பாவித்துக் கொண்டு நிதமும் நீங்கள் கடைந்து பாருங்கள். ஆச்சரியப்படத்தக்க அபூர்வங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். தட்டைப் பார்வையும், குட்டை மனசும் கொண்டவர்களுக்கு இது சாத்தி யமாகாது. விசாலப் பார்வையில் இவ்வுலகை விழுங்குபவர்களுக்கு மட்டுமே இது சாத்தியம்.

புராணங்களின் பூர்வாசிரமத்தை அனுபவித்த மகாகவி பாரதி கூறும்போது, நம் முன்னோர்கள்,

"நன்றுபு ராணங்கள் செய்தார் – அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்
கவிதை மிகநல்ல தேனும் – அக்
கதைகள்பொய் யென்று தெளிவுறக்
கண்டோம்
புவிதனில் வாழ்நெறி காட்டி – நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள்
அவைதாம்"

என்பார். நல்ல புராணங்கள். கட்டுக்கதைகள். நல்ல கவிதைகள். எல்லாமே பொய்கள்தான். 'நிலா நிலா ஓடிவா' என்று குழந்தைக்குத் தாய் சோறூட்டுகிறாளே, அவள் பொய் சொல்கிறாள் என்கிறது பகுத்தறிவு. அதுவும் உண்மைதான். ஆனால், அத்தாயும் இப்போது இன்னொரு குழந் தையாகிவிட்டாள் என்கிறது இலக்கிய அறிவு. இது உண்மையல்லதான். ஆனால் அதைவிடவும் உயர்வானது.

– ந.நி.

சிறுகதை

கைம்மாறு


“என்ன அண்ணே மாடசாமி அண்ணே... எங்க போயிட்டு வர் நீங்க...?”

“வாப்பா சோமு... ரொம்ப நாளாச்சு உன்னைப் பார்த்து... எப்படி இருக்கே...? புதுவீடு கட்டிட்ட... என்னால வர முடியல. சம்சாரத்தைப் போயிட்டு வரச் சொன்னேன். அவளுக்கும் முடியல. வயசு ஆயிருச்சு... நல்லது கெட்டது எதுக்கும் போக முடியலப்பா... தப்பா நினைச்சுக்காதப்பா...”

“என்ன அண்ணே... நான் உங்களைத் தப்பா நினைப்பனா...? எனக்குக் கூடப் பிறந்த அண்ணன்னு யாருமில்லை. நீங்கதான் எனக்கு அண்ணன் மாதிரி. உங்களை எப்பவும் ரொம்ப உயர்வாகத்தான் நினைப்பேன்.”

“சரி... அண்ணி நல்லா இருக்காங்களா? நானும் மனைவியும் உங்களை அடுத்த மாசம் நேராப் பார்க்க வர்றோம். உங்க ரெண்டு பேரையும் நாங்களே கூட்டிட்டு வந்து, எங்க புதுவீட்ல உங்க பாதம் பட வைக்கணும். அதுதான் எங்களுக்கு உண்மையான புண்ணியார்ச்சனை.

“அதுமட்டுமல்ல அண்ணே... பையன் புதுசா ஒரு கார் வாங்கித் தந்துட்டுப் போயிருக்கான். புதுவீட்டுக்கு வந்தப்ப இதையும் செஞ்சுட்டுப் போயிட்டான். அந்தக் கார்லதான் உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு வரப் போறோம்.”



“எனக்கு இரண்டு மகன்கள். மூத்தமகன் வின்சன் வெளிநாட்டில வேலைன்”னு. பேசறதுக்குப் பெருமையாத்தான் இருக்கு. சும்மா பீத்திக்கிறதில என்ன லாபம்?

“கார் வாங்கிட்டே... ஓட்டத் தெரியுமா...?”

“ஓட்டத் தெரியாதுண்ணே... அப்பப்ப டிரைவரை வச்சு ஓட்டிக்கிறோம். இப்பத்தான் வாடகைக் கார் மாதிரி, வாடகை டிரைவரும் வந்தாச்சே.”

“சரி... சரி... அண்ணே உங்கள இந்தத் தள்ளாத வயசுல நிக்கவச்சுப் பேசுறேன். வீட்ல உங்கள விட்டுட்டுப் போகட்டுமா...? இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. சர்ச்சுக்குப் போயிட்டு வர்றீகளா...? கைத்தடியைக் காணோம். கீழே விழுந்தா என்ன பண்றது....?

“உங்க மகன் வின்சன் அமெரிக்காவுக்குப் போனான். அதுமட்டும்தான் தெரியும். அவனைப் பத்தி ஒன்றுமே நீங்க பேசறதில்ல... என்ன பண்றான்...? பணம் அனுப்புறானா...? சம்சாரம், பேரன், பேத்தி எல்லாம் அமெரிக்காவில் எப்படியிருக்காங்க அண்ணே....?”

“மனசில வருத்தம் மட்டுமல்ல சோமு, வெட்கமும் சேர்ந்துகிச்சுப்பா... மகன் வின்சன்

மகாஅயோக்கியன். ரெண்டு வருஷமா ஒரு போன் பண்ணிக்கூடப் பேசற தில்ல. அட என்னைய விடுப்பா... அம்மாவைப் பத்திக்கூட அவனுக்கு அக்கறை துளியுமில்லப்பா... உம் மகனைப் போல வருமா? என்ன பாசக்காறப் பய... லண்டன்ல இருந் தாலும் 6 மாசத்துக்கு ஒரு தடவை தவறாம வர்றானே... வீடு, காருன்னு உங்களுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுத்து உங்கள எப்படி வச்சுக்கிறான்."

"சோமு நீ கொடுத்து வச்சவ னப்பா... நீ நல்லா இருக்கணும்... அதைவிட உம் மகன், மருமகள், பேத்தி சுகமா இருக்கணும்னுதான் நான் கர்த்தருட்டப் பிரார்த்தனைப் பண்ணிக்குவேன். நான் போயிட்டு வர்றேன் சோமு..."

இருவருமே வயசானவர்கள்தான். சோமுவுக்கு 60 வயது. கலெக்டர் ஆபீசிலிருந்து போன வருஷம் ஓய்வு பெற்றார். இரண்டு மக்கள். மனைவி யும் அதே ஆபீசில் கிளார்க்கா இருந்து விருப்பஓய்வு வாங்கிட்டாங்க. மகனுக்கு லண்டனில் டாக்டர் வேலை. மகளுக்கு பெங்களூருவில் சி.டி.எஸ். கம்பெனியில் வேலை. மரு மகனுக்கும் அங்குதான் வேலை. கை நிறையச் சம்பளம். ஞாயிறு தவறாம விமானத்தில் வந்துட்டு அம்மா – அப்பாவைப் பார்த்திட்டுப் போயிரு வாங்க... அடுத்த ஞாயிறு மருமகனு டைய அப்பா – அம்மாவைப் பார்க்கப் போயிடுவாங்க...

லண்டன் மகனும் டாக்டர், மரு மகளும் டாக்டர். 6 மாதத்துக்கு ஒரு முறை வராமல் இருந்ததே இல்லை. அநேகமாக அடுத்தமுறை சோமு தம் பதியை லண்டனுக்குக் கூட்டிட்டுப் போகப் போறாங்க. அதுக்கு முன்னதான், இந்தப் புதுவீடு புண் ணியார்ச்சனை. ரூ. 2 கோடி செலவு. பெரிய வீடு. பங்களான்னே சொல்ல லாம். இப்ப சோமுவுக்கு வந்த கவலை யெல்லாம்... இந்த வீட்டை விட்டுட்டு லண்டனுக்குப் போறோம்னுதான்...

இதுபோல அமையல மாடசாமி வாழ்க்கை. 80 வயது கடந்துவிட்ட கிழம். அவருடைய மனைவி நோயாளி. ஓயாத இருமல்... பார் வைப் பாதிக்கு மேலே போயிருச்சு... மங்கிப் போனது பார்வை மட்டுமல்ல, அவர்களுடைய வாழ்க்கையும்தான்.

தவமாய்த் தவமிருந்து பெற்ற ஒரே மகன். தவமே செய்யாமல் பெற்ற இன் னொரு மகன். தவமகன் அமெரிக்காப் போய் நான்கு வருஷமாச்சு... அங்கே போனவன், அவன்கூட வேலை செய்யற ஓர் அமெரிக்கப் பெண் ணையே கல்யாணம் செஞ்சுட்டான். அதைக்கூட அவன் தனது தாய் – தந்தைக்குச் சொல்லவில்லை. அவ னோட படிச்ச சிநேகிதன் மூலமாத் தான் மாடசாமி தம்பதி தெரிஞ்சுக் கிட்டாங்க.

பாஞ்சசன்யா

அவனிடமிருந்து உதவி ஒன்றுமே இல்லை. தகவலே இல்லாதபோது உதவியைப் பத்திப் பேச வேண்டியதே இல்லை. ஆனாலும் மாடசாமி தம்பதி கர்த்தர் காட்டிய வழியில் மிச்ச வாழ்க்கையைக் கடத்திட்டுத்தான் வர வேண்டியதாயிற்று. வீட்டு வாடகை, இன்சூரன்ஸ் கம்பெனியில் மாடசாமி அக்கவுண்டண்டாக இருந்ததன் ஓய்வு ஊதியம், பணிக்கொடை எல்லாம் கிடைச்சதனாலே ஏதோ உயிர் வாழ்ந்து வர்றாங்க.

கையில வசதி இருந்தாத்தான் அக்கம் பக்கம் சொந்தம் எல்லாமே. வசதியில்லேன்னா யாரும் கண்டுக்க மாட்டாங்க... இந்த மாடசாமி மீது ஏதோ இந்த சோமு பாசம் காட்டு வாறு. முந்தி சோமு கஷ்டப்பட்டுக் கிடந்தபோது மாடசாமி பக்கத்திலே

குடியிருந்தாரு, சில உதவிகளை அப்ப செஞ்சுருக்காரு. இப்ப சோமு பங்களா என்ன... கார் என்ன... பையன், பொண்ணு சம்பாதிக்கிறாங்க. அதை விடப் பெத்த தாய் மீதும், தகப்பன் மீதும் அளவற்ற பாசம் வச்சிருக்காங்க.

சோமு தனது மகனோடு போனில் பேசும்போது, இருமிப் பேசினார் என்றாலே போதும், மகனுக்கு டென்சன் வந்திடும்... "என்னப்பா, உடம்ப பார்த்துக்காம இருமுறீங்க..." என்று கேட்டுவிட்டு, கோவையில் தனது சிநேகிதனுக்குப் போன் செய்து, உடனே அப்பாவைப் போய்ப் பார்த்து விசாரிக்கச் சொல்லிவிடுவான். அவ்வளவு அக்கறை.

சும்மாவா சொன்னாரு திருவள்ளுவர்... இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே எழுதி வச்சாரு... அந்த மனுஷன் என்னமாச் சொல்லியிருக்காரு. மகன் தந்தைக்குச் செய்கிற உதவியைப் பார்த்து, ஊர் ஜனங்கள் எல்லாமே இப்படி ஒரு மகனைப் பெற, தந்தை எப்படிப்பட்ட தவம் செஞ்சுருப்பான்னு சொல்லுவாங்களாம்.

திருவள்ளுவர் சொன்னதப் போலவே சோமு பெரிய தவம்தான் செஞ்சுருப்பாரு போல இருக்கு. அப்படி இல்லீன்னா... இப்படியொரு மகன் அவருக்குக் கிடைப்பாரா?

சோமுவைவிட 20 வயது மூத்த, மாடசாமிக்கு இப்படி வாய்க்கல பாவம்... அவருடைய மனசும், அவருடைய மனைவி மனசும் என்ன பாடுபடும்? தினசரி அவர்களுக்குத் தேவையான சின்னச்சின்ன உதவிகளைச் செய்யக்கூட யாருமில்ல... ஒரு காலத்தில் மாடசாமிதான் சோமுவுக்கு உதவி செஞ்சுகிட்டிருந்தாரு. இப்ப பக்கத்தில அவரும் இல்லை. மாடசாமிக்கு உதவிசெய்ய வேலைக்காரிகிட்டத்தான் கேட்க வேண்டும். சம்பளத்துக்கு வேலை செய்றவங்களிடமிருந்து பாசத்தை எதிர்பார்க்க முடியுமா?


லண்டனில் இருக்கிற சோமு மகன் எப்படி...? மாடசாமி மகன் எப்படி...? மாடசாமி கீழே விழுந்தா மனைவியால தூக்கிவிட முடியுமா? கூச்சல் போட்டு யாரையாவது கூப்பிட்டா ஓடி வர்றவுங்க, "இந்தக் கிழவனுக்கு இதே வேலையாப் போச்சு. கைத்தடி இல்லாம நடக்காதய்யான்னு சொன்னாக் கேட்கிறதில்லை" என்று கோபமாகத் திட்டிவிட்டுத் தூக்கி உட்காரத்தான் வைப்பாங்க... எந்திருச்சு நிக்கணும்னா மாடசாமியின் தனி முயற்சினாலதான் முடியும்.

மாடசாமி தன்னைப் பார்க்க வருகிற மாஜி நண்பர்கிட்டச் சொல்வாரு, "எனக்கு இரண்டு மகன்கள். மூத்தமகன் வின்சன் வெளிநாட்டில வேலைன்"னு. பேசறதுக்குப் பெருமையாத்தான் இருக்கு. சும்மா பீத்திக்கிறதில என்ன லாபம்?

இரண்டாம் மகன் பெரிய சம்பாத்தியம் இல்ல. அளவான வருமானம்தான். ஆனாலும் சும்மா சொல்லக்கூடாது. எங்க சாப்பாடே அவனுடையதுதான். மருந்து, மாத்திரை அவன்தான் வாங்கித் தர்றான். வேட்டி, சேலை எல்லாமே அவன்தான். அவனில்லையென்றால் நாங்க ரெண்டு பேரும் எப்பவோ கர்த்தருக்குள் நித்திரையாகியிருப்போமுன்னு மாடசாமி சொல்லாத நாளில்லை... சொல்லாத ஆளில்லை..

வீட்ல வின்சன் படம் மட்டும்தான் மாட்டியிருக்கு. அவனோ இவர்களுக்கு ஒரு பைசா உதவியும் செய்யாத நன்றிகெட்டவன். அவனை "செய்நன்றி கொன்ற மகன்னு" மாடசாமி திட்டுவாரு.

வின்சனைப் போல இன்னொரு மகனோட போட்டோ கூட வீட்ல இல்லை. வின்சனைப் போல ஒருத்தனைப் பெற மாடசாமி என்ன



பாவம் செஞ்சாரோன்னு எல்லாரும் பேசறாங்க. அவருடைய மூத்தமகன் வின்சன் அப்படி. இரண்டாவது மகன் யாருன்னு தெரியுமா? அது தான் அவர் மாசாமாசம் வாங்குகிற பென்சன்!

சன்னுன்னா இங்கிலீஷ்ல மகனாம். வின்சன் மகனல்ல. பென்சன்தான் மகன்!

•



ஏரிக்கரையில் கண்ட காட்சி





கவிஞர் கே.ஜி. ராஜேந்திர பாபு

பசுமை மரக்கிளையில்
பூத்திருக்கும்
வெள்ளைப் பறவைகள்

எறி அலைகளைப் போல்
ஏரி ஓசையிடாததால்
ஈடு கட்டும் பறவைகள் ஒலி

குழுமியுள்ள மரங்களில்
குடைமேல் மழைத்துளிகள்போல்
குந்தியுள்ள பறவைகள்

பறக்காத பறவையாம்
பூக்கள்
பறக்கும் பூவாம்
பறவைகள்
மாலைநேர
மரங்களுக்கு எழில்
மாலைபோடும்


(பட்டமரத்தில் அமர்ந்திருக்கும்
பறவைகளைப் பார்த்தபோது எழுதியது)

அற்ற குளத்து
அறுநீர் பறவையென்னும்
அவமானச் சொல்போக்கி
பட்டமரத்திற்கு
பரவசம் ஊட்டும்
பாடும் பறவைகள்

கெட்ட குடிபோல்
பட்டமரத்தை
விட்டு ஒதுங்காமல்
மொட்டைக் கிளைகளைத்
தொட்டு நிற்கும்
பட்டுப் பறவைகள்

வழுக்கை மரத்திற்கு
அழகூட்டவோ
குழுவாய் அமர்ந்திருக்கும்
கூவும் பறவைகள்

எவ்விடம் அமர்ந்தாலும்
அவ்விடம் அழகாக்கும்
செவ்வானப் பறவைகள்!



இராமலிங்கர் பணி மன்றம், சென்னை









54 ஆம் ஆண்டு

வளரும் சக்தி

வள்ளலார் - காந்தி இலக்கியப் பரிசுகள்

அமரர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் நினைவாக

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்க்கு மாநில அளவிலான கலை இலக்கியப் போட்டிகள் 2019

பரிசுகள்

	மண்டல அளவில்	மாநில அளவில்
முதல் பரிசு	₹5,000	₹10,000
இரண்டாம் பரிசு	₹3,000	₹ 7,500
மூன்றாம் பரிசு	₹2,000	₹ 5,000

போட்டிகள்

கல்லூரிகளுக்கு

[இளநிலை, முதுநிலை பயில்பவர்கள் மட்டும்]

கட்டுரைப்போட்டி *கால அளவு 60 நிமிடங்கள்*

தலைப்பு:

பார் திருத்த வந்த சீர்திருத்த ஞானி வள்ளலார் (அல்லது)
தமிழ் மரபில் பூத்த அருள் மலர் இராமலிங்கர்

[ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டுப் பக்கங்களுக்குள்]

பேச்சுப்போட்டி *கால அளவு 5 நிமிடங்கள்*

தலைப்பு:

வள்ளுவ மொழியே வள்ளலார் வழி (அல்லது)
மனித நேயமே மகாத்மா வாழ்வு

பள்ளிகளுக்கு

[9 முதல் 12ம் வகுப்பு வரை]

இசைப்போட்டி *கால அளவு 5 நிமிடங்கள்*

அருள் விளக்க மாலையில் தெரிவு செய்த பாடல்கள் (அல்லது)
அற்புதம் அற்புதமே, எனக்கும் உனக்கும்,
வருவார் அழைத்து வாடி, ஆடிய பாதம்
ஆகிய வள்ளலார் பாடல்களில் ஒன்று.

தனி நபராகவோ/இருவர் கொண்ட குழுவாகவோ பங்கேற்கலாம்

மனனப்போட்டி

திருவருள் விலாசப் பத்து - 'ஆறுமுகப் பெருங்கருணை'
தொடங்கி 10 பாடல்கள்

பேச்சுப்போட்டி *கால அளவு 5 நிமிடங்கள்*

தலைப்பு:

சன்மார்க்கமே உலக சாந்தி மார்க்கம் (அல்லது)
சத்தியமே காந்தி - காந்தியமே சத்தியம்

விதிமுறைகள்

1. மாணவ, மாணவியர் மண்டல அளவில் ஏதேனும் ஒரு மையத்தில் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும்.
2. பள்ளி/கல்லூரி அளவில் ஒவ்வொரு போட்டியிலும் இருவர் மட்டும் கலந்து கொள்ளலாம்; ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.
3. தொலைதூரக் கல்வி பயில்வோர் கலந்துகொள்ள இயலாது.
4. கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்போருக்கு எழுதுபொருள்கள் அரங்கிலேயே வழங்கப்படும். மனனப் போட்டிக்கான பாடல்களை www.mcet.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
5. பங்கேற்க விரும்புவோர் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை, கீழ்க் குறிப்பிட்டுள்ள [மின்னஞ்சல்/ அஞ்சல்] முகவரிக்கு அனுப்பிப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.
6. பதிவு செய்துகொண்ட போட்டியாளர்கள் போட்டி நடைபெறும் மையத்திற்கு உரிய அடையாளச் சான்றுடன் வருதல் வேண்டும். தாமதம் தவிர்க்கவும். போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
7. இசை/பேச்சு/மனனப் போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கட்டுரைப் போட்டிகளின் மண்டல அளவிலான முடிவுகள் www.mcet.in இணையதளத்தில் வெளியிடப்படும். உரிய கல்வி நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்படும்.
8. மண்டல அளவில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் பொள்ளாச்சியில் நடைபெறும் மாநில அளவிலான இறுதிச் சுற்றுக்குத் தேர்வு செய்யப்படுவர். அதில் பங்கேற்க வரும் போட்டியாளர் மற்றும் உடன் வரும் ஒருவருக்கு உணவு, பயணப்படி, தங்குமிடம் வழங்கப்படும்.
9. எந்த ஒரு போட்டிக்கும் கையில் குறிப்புகள் வைத்துக் கொள்ளக்கூடாது.
10. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மண்டல அளவில் போட்டிகள் நடைபெறும் மையங்கள்

திருச்சி 10.08.2019 **சனி** கி. ஆ. பெ. விஸ்வநாதம் மேல்நிலைப்பள்ளி (மக்கள் மன்றம் அருகில்) தில்லை நகர், திருச்சி - 18 தொ.பே.0431 2760812	சேலம் 17.08.2019 **சனி** பெரியார் பல்கலைக்கழகம் பெரியார் பல்கலை நகர், சேலம் - 636 011 தொ.பே.0427 234 5766	சென்னை 18.08.2019 **ஞாயிறு** சாவித்திரி அம்மாள் ஓரியண்டல் மேல்நிலைப் பள்ளி (சென்னை சமஸ்கிருத கல்லூரி பின்புறம்) 84, ராயப்பேட்டை ஹை ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004 தொ.பே. 044 24981176
மதுரை 24.08.2019 **சனி** தியாகராசர் கல்லூரி 139-140, காமராஜர் சாலை, மதுரை - 625 009 தொ.பே.0452 2311875	திருநெல்வேலி 25.08.2019 **ஞாயிறு** லிட்டில் பிளவர் மாடல் பள்ளி சேரன்மகாதேவி ரோடு, (கோடீஸ்வரன் நகர் எதிர்புறம்), நெல்லை நகரம் 627 006 தொ.பே. 0462 - 2334771	கோவை 31.08.2019 **சனி** Dr.N.G.P.கலைஅறிவியல்கல்லூரி காளப்பட்டிரோடு,நேருநகர், கோவை-641048 தொ.பே.0422 2369252

2 நாள் பயிலரங்கம்

மண்டல அளவில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் 10 இடங்களைப் பெறுபவர்கள் சிறப்புப் பயிலரங்கத்தில் பங்கேற்க வாய்ப்பினைப் பெறுவார்கள். வரும் டிசம்பர் 2019இல் பொள்ளாச்சி டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில் இருநாள் பயிலரங்கம் நடைபெறும்.

முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாகவோ (அல்லது) கீழ்க்கண்ட முகவரிக்கோ அனுப்பவும்

விண்ணப்பங்கள் போட்டி நடைபெறும் தினத்திற்கு **5 நாட்களுக்கு முன்னதாக** வந்து சேரவேண்டும்

இராமலிங்கர் பணி மன்றம்
டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி,
உடுமலை ரோடு, பொள்ளாச்சி - 642 003
அலைபேசி: 94456 37190 • 99761 44451

மின்னஞ்சல் ramalingar@mcet.in
விண்ணப்பம் மற்றும் தகவல் பெற www.mcet.in

ஊடகத் தோழமை

புதிய தலைமுறை | தினமலர் | தினமணி | ஓம்சக்தி | செய்தி மடல்



39–ம் பக்கத் தொடர்ச்சி

கிழித்துக் கட்டுப்போட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன்.

நீலநிற விளக்கு ஒளிர ஊளையிட்டுக் கொண்டு வந்துநின்ற ஆம்புலன்ஸ் ஊர்தியில் கவனமாக சுகுணாம்மாவை ஏற்றிக் கொண்டிருந்தனர். மனம் நிம்மதியடைந்தது.

சுசீலா டீச்சர், மற்றுமுள்ள ஆசிரியைகள், அலுவலக ஊழியர்களுடன் என்னையும் கைது செய்து காவல்துறை வாகனத்தில் அள்ளித் திணித்தது காவல். ●

கட்டுரை

வர்மம் ஒரு மர்மம்!

டிராகன் டி. ஜெய்ராஜ்



டிராகன் டி. ஜெய்ராஜ்

வர்மக்கலை, சிவபெருமானின் அருள் பெற்று அகத்திய முனிவர் இந்த உலகிற்குக் கொடுத்த அருள்கொடை. வர்மக்கலை அகத்தியர் வழி வந்ததன் காரணமாக, "தமிழ் வர்மக் கலை" என்ற பெயர் பெற்றது.

அகத்தியரின் முதன்மைச் சீடராக இருந்த அத்திரி மகரிஷி, இந்தத் தமிழ் வர்மக்கலையை ஒரே ஓர் இனக்குழுவிற்கு மட்டும் வாழையடி வாழையாகச் சித்திக்க வைத்ததன் காரணமாக, வர்மக் கலை குடும்பக்கலையாகக் குடத்திலிட்ட விளக்காக வெளி உலகிற்கு ஒளி வீசாமல் போய்விட்டது.

பல்லவ நாட்டு மன்னன் முதலாம் நரசிம்மன், தனது புதல்வர்கள் தர்ம பல்லவன், வீர பல்லவன் ஆகிய இருவருக்கும் அத்திரி மகரிஷியை வரவழைத்துத் தமிழ் வர்மக்கலையைப் பயிற்றுவிக்குமாறு கேட்டுக் கொண்டான்.

அத்திரி மகரிஷியும் பல்லவ மன்னனின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் இருவருக்கும் திறம்படப் பயிற்சியளித்து, அவர்கள் இருவருக்கும் "தர்மவர்மன்", "வீரவர்மன்" என்று பட்டங்கள் அளித்தார்.

போர்களிலும், உயிர்களைக் கொல்வதிலும் விருப்பம் இல்லாத தர்மவர்மன், புத்தரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, புத்த மதத்தில் இணைந்து தன் தந்தையின் அனுமதி பெற்றுத் தரை வழியாக வழியெங்கிலும் புத்த மதக் கொள்கைகளைப் போதித்தபடி, பட்டுச்சாலை வழியாகப் பாரதத்தைக் கடந்து சீனாவைச் சென்றடைந்தார்.

சீனாவில் ஷாங் ஷான் மவுண்ட் என்ற மலைப்பகுதியில் கி.பி. 522–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மலைப்பகுதியில் ஒரு குகையில் தங்கி, அதிகாலை முதல் நண்பகல் வரை தியானத்தில் இருந்துவிட்டு, பிற்பகலில் அருகிலுள்ள ஊர்களுக்குச் சென்று புத்தரின் கொள்கைகளைக் கற்பித்து வந்தார்.

அந்தச் சமயத்தில் அவ்வூர்களில் ‘காலரா’ என்ற கொடிய நோய் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மிதந்தனர். இதைக் கண்ணுற்ற தர்மவர்மன், அத்திரி மகரிஷியின் மூலிகை மருத்துவத்தைக் கையாண்டு, அந்த நோயை முற்றிலுமாகக் குணமாக்கினார். இதன் மூலமாக தர்மபல்லவனை அவர்கள் தெய்வமாகப் பார்த்தனர்.

மேலும், அக்காலகட்டத்தில் மன்னன் லியாங் நட்டி ஆட்சியில் திருடர்கள் மிகுதியாக இருந்தனர். அவர்கள் குதிரைகளில் கூட்டம் கூட்டமாக வந்து ஊர் மக்களின் உடமைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

கொள்ளைக் கும்பலைத் தடுக்கும் விதமாக, தர்மவர்மன் அவ்வூர்களில் உள்ள இளைஞர்களையும், இளம் பெண்களையும் ஒருங்கிணைத்து, அவர்களுக்கு நமது தமிழ் வர்மக்கலையைத் தற்காப்புக் கலையாகக் கற்றுக்கொடுத்தார்.

தமிழர்களின் தற்காப்புக் கலையும், மருத்துவக் கலையுமான வர்மக்கலையின் வீரியத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட மன்னன் லியாங் நட்டி, தர்மவர்மனை அரசவைக்கு அழைத்து, அவருக்குப் “போதி தர்மா” என்ற பட்டம் கொடுத்து, அவர் தியானம் செய்த மலைப்பகுதியை அவருக்குத் தானமாகக் கொடுத்து, அந்த மலைப்பகுதியில் “ஷாவோலின் டெம்பிள்” என்ற பௌத்த மடத்தைக் கட்டிக் கொடுத்து, சீன மக்களுக்குத் “தமிழ் வர்மக் கலையைக்” கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதன் விளைவாக, அது சீனாவின் “குங்ஃபூ” கலையாக உலகமெங்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சித்தர்கள் காலம் முதல், இன்றைய நவீன காலம் வரை வர்மக்கலை ஒரு மர்மமான கலையாகத்தான் இருந்துள்ளது. இந்தக் கலையைக் கற்றுணர்ந்தவர்கள், அதன் மகத்தான சூட்சும இரகசியங்களைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்காமல், குறுகிய மனப்பான்மையுடன் வர்மங்கள் பற்றிய விஷயங்களைச் சித்தரித்துப் பரப்பியதன் விளைவாக, சாமான்ய மக்களுக்கு அதை ஒரு பூதத்தைப் பார்ப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. அதனால் வர்மம் மர்மமாகவே இருந்தது.

இப்போது உங்கள் மனதில் ஒரு கேள்வி எழுந்திருக்கும்.

“வர்மம் என்றால் என்ன?” வர்மம் என்பது, நம் உடலில் குடிகொண்டிருக்கும் 126 உயிர்நிலைகளைக் (VITAL POINTS) குறிக்கும். மனிதர்களாகிய நமது உடலில் 126 இணைப்புகள் உள்ளன. இந்த நரம்பு இணைப்புகளின் மூலமாகத்தான் நமது உடலுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் வாயு ஓட்டம், காந்த ஓட்டம், இரத்த ஓட்டம் ஆகிய மூன்றும் ஒரே சீராகப் பாய்ச்சப்பட்டு நம்மைச் சுறுசுறுப்புடன் செயல்பட வைக்கின்றது.

இப்படி இந்த 126 நரம்பின் முனைகளில் விபத்து மூலமாகவோ அல்லது தவறுதலாகப் படுவதன் மூலமாகவோ அந்த உயிரோட்ட முனைப்பகுதி பாதிப்படைவதன் காரணமாக, நமக்கு வலிகளை ஏற்படுத்தி அவயங்கள் செயலிழப்பை ஏற்படுத்துகின்றது.

நமது உடலில் குடிகொண்டுள்ள 126 வர்ம நிலைகளில் பல பிரிவுகள் உள்ளன. அவை தொடு வர்மம், படு வர்மம், தட்டு வர்மம், அடங்கல் வர்மம் என்ற நான்கு பிரிவுகளாக உள்ளன. இதில் தொடு வர்மம் 96 இடங்களிலும், படு வர்மம் 12 இடங்களிலும், தட்டு வர்மம் 8 இடங்களிலும் உள்ளன. மேலும் கணக்கில் வராத அடங்கல் வர்மங்கள் என்று பல வர்மங்கள் உள்ளன.

இவற்றில் தொடு வர்மம் என்பது மனிதர்களாகிய நமது உடலின் மேற்புறத்தில் குடிகொண்டுள்ளது. இந்தத் தொடுவர்ம நிலைகளில் மாற்றான் கரங்கள் படுவதன் மூலமாகவும், விபத்து மூலமாக அடி படுவதன் காரணமாகவும் வர்மங்கள் பாதிப்படையுமானால், அதன் விளைவாகக் கைகளில் உளைச்சல், வீக்கம், கால்களில் வீக்கம், வேதனை பரவும். இந்தத் தொடு வர்மங்கள் உயிராபத்தை ஏற்படுத்தாமல் அடிபட்ட ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டிற்குள் மெல்ல மெல்ல ஒரு விபரீதம் போல் கை, கால்களைச் செயலிழக்க வைத்துவிடும்.

அடுத்தபடியாகப் படுவர்மத்திற்கு வருவோம். இந்தப் படுவர்மங்கள் நமது உடலில் பனிரெண்டு இடங்களில் உள்ளன. இந்த வர்மங்கள் யாவும் தொடு வர்மங்கள் போல் இல்லாமல், சற்று ஆழமாகக் குடி





கொண்டுள்ளன. இந்த வர்மங்களில் பாதிப்புகள் ஏற்படுமானால், உடலின் உள் உறுப்புகளைச் செயலிழக்க வைத்து பாதிப்பு ஏற்பட்ட மூன்று மணி, ஆறு மணி, எட்டு மணி, பதினோரு மணி ஆகிய காலக் கெடுவிற்குள் உயிரிழப்பு சர்வ நிச்சயம்.

அடுத்ததாகத் தட்டு வர்மங்கள். இந்தத் தட்டு வர்மங்கள், மனிதர்களது உடலில் எட்டு இடங்களில் உள்ளன. தட்டு வர்மங்கள் மனித உடலில் சற்று ஆழமாக முழு மாத்திரை அளவில் குடியிருக்கின்றன. இந்த வர்மங்களில் பாதிப்பு ஏற்பட்டால், அந்தப் பகுதியில் இரண்டு மாத்திரை அளவில் தட்டினால் மட்டுமே அரை மாத்திரை அளவில் வேலை செய்யும். இந்த வர்மங்களில் பாதிப்புகள் இருந்தால், கைகளால் மற்றும் கால்களால் தட்டுவதன் மூலமாகச் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியும்.

இனி, உயிர் காக்கும் அடங்கல் வர்மங்களுக்கு வருவோம். 'அடங்கல்' என்பது உயிர் நிலைகளைக் குறித்த சொல்லாகும். மனித உடலில் இரு வர்மங்கள் இருந்தால் அதுவும் அந்த இரு வர்மங்களில் ஒரு வர்மத்தில் மட்டும் அடிபட்டிருந்தால் அந்த பாதிக்கப்பட்ட வர்மத்தைச் சரி செய்வதற்கு, மறுபக்கம் உள்ள அதே வர்மத்தை, வர்மத் தூண்டல் செய்வதன் மூலமாக ஆபத்திலிருந்து அவரைக் காக்கலாம். ஆக, மனித உடலில் இரு பக்கமும் உள்ள வர்மங்களில் ஒரு வர்மம் உயிர் அடங்கல் வர்மமாகக் கருதப்படும்.



மேலும், அசாத்திய வர்மங்களான படுவர்மம், தட்டு வர்மம் முதலிய வர்மங்களில் தாக்கம் ஏற்பட்டு, அதன் மூலமாக மயக்கம், கோமா நிலை (Coma) என்ற ஆழ்நிலை உறக்கம், பக்க வாதம், முக வாதம், கை கால் செயலிழப்பு முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் உடலில் உள்ள உயிர் அடங்கல் வர்மங்களான 'நாக்குத் திரட்சி வர்மம், கட்டை வர்மம், நகக்குறி வர்மம், மடல்வெளி வர்மம், சிறகடிப்பு வர்மம், விழித்திறப்பு வர்மம்' ஆகிய ஆறு வர்மங்களில் வர்மத்தூண்டல் செய்து அவர்களைக் குணப்படுத்தலாம்.

உயிர் காக்கும் வர்மங்களில் பிரம்மாஸ்திரம் போலத் தலையாய வர்மமாகக் கருதப்படுவது நமது நாக்குப்பகுதியின் கீழாக, அதன் நாணின் திரட்சிப் பகுதியில் குடி கொண்டிருக்கும் 'நாக்குத் திரட்சி' வர்மம்தான்.

வர்மக்கலையின் பல பிரிவுகளில் சிறப்பாகச் செயல்படுவது இந்த நாக்குத் திரட்சி வர்மம்தான். இதற்கு அடுத்தபடியாக 'கர்ப்பிணி அடங்கல்' வர்மங்களைச் சொல்லலாம். இந்தக் கர்ப்பிணி அடங்கல் வர்மங்கள், பெண்களின் தொப்புள் குழியில் 'கொடிக்குழி வர்மமாகவும்,' கையின் பெருவிரல் சதைப் பகுதியில் 'கவுளிக் கால வர்மமாகவும்', முழங்காலின் பக்கவாட்டுப் பகுதியில் 'கர்ப்ப முடக்கி வர்மமாகவும்' குடி கொண்டுள்ளன.

கர்ப்பிணிப் பெண் ஒரு வர்ம மருத்துவச் சிகிச்



சைக்கு வரும்போது வர்மானியாகப்பட்டவன், மேற்கண்ட வர்மங்களில் தவறிச் சிகிச்சை செய்ய நேர்ந்தால், அந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஒரு மணி நேரத்தில் கர்ப்பம் கலைவது உறுதி. ஆனால், அதே சமயத்தில் கர்ப்பிணிப் பெண் ணானவள் ஒன்பது மாதத்தைக் கடந்திருந்தால், மருத்துவர்கள் பிள்ளைப் பிறப்பு அறிவித்த தேதிக்கு முன்னதாக ஆறு நாட்கள் மேற்கண்ட கர்ப்பிணி அடங்கல் வர்மங்களை ஒன்பது, ஒன் பது முறைகள் 'வர்மத் தூண்டல்' செய்வதன் மூல மாகக் குழந்தைப் பிறப்பு சுகப்பிரசவமாக முடியும்.

நவமுறைப் புத்துணர்வு சிகிச்சை : ஐம் பெரும் பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் சக்தியைக் கொண்டு இயற்கையில் படைக்கப்பட்ட நமது உடலின் மூலாதாரச் சக்தியாகக் குடிகொண்டு, உடலின் உள் உறுப்புகளையும், அவயங்களையும் சீரான தன்மையுடன் இயக்குவது 'குண்டலினி' என்ற மூலாதாரச் சக்திதான்.

மனிதர்களாகிய நமது உடலில் உள்ள ஏழு சக்கரங்களும் இயங்குவதற்கு இந்தக் குண்ட லினி சக்திதான் ஆதார நிலையாக உள்ளது. குண்டலினி சக்தியானது, முதுகுத் தண்டு வடத்தின் கீழ்ப்பகுதியில் ஆழமாக வேரூன்றி, உச்சந்தலையில் உள்ள உச்சிக்கால வர்மத்தில் நிலைத்துக் குண்டலினியின் அபரிமிதமான சக்தியை ஏழு வகைச் சக்கரங்களின் மூலமாக உடலெங்கும் பரவச் செய்து, நம்மை ஆரோக்கிய முள்ள மனிதர்களாக மாற்றுகிறது.

ஆனால், அதே சமயத்தில் இந்தக் குண்டலினி சக்தியானது, இடுப்பின் கீழாகவே தூண்டப்படாமல் முடக்கப் படுமானால், மனிதர்களின் செயல் பாடுகள் சிறிது சிறிதாக முடக்கப் பட்டு, நோய்களின் பிடியில் சிக்கிக் கொண்டு பெரும் அவஸ்தைக்கு ஆளாகிறார்கள்.

அத்திரி மகரிஷியின் 'தமிழ் வர்மக்கலை'யில் இதற்கென்று 'வர்மப் புத்துணர்வு சிகிச்சை' ஒன்றைக் கையாண்டு வருகிறோம். அது என்னவென்றால், உடல் நலம் குன்றிப்போய் இருப்பவர்களை மேசை யில் குப்புறப் படுக்க வைத்து, அவரது உடல் முழுவதும் இரண்டாம் வகைக் காயத் திருமேனித் தைலத்தைப் பூசிவிட்டு, கையின் பாம்பு விரல் கொண்டு குண்டலினி சக்தியைக் கழுத்துப்பகுதி வரை ஏற்றித் தூண்டிவிட்டு, அதன் பின்பு ஏழு வகைச் சக்கரங்களுக்கும் வர்மச் சிகிச்சையளிக்கப்பட்டு, சக்கரங்களின் குறை பாடுகள் வர்ம நீவல் மூலமாகச் சீர் செய்யப்படும்.

மேற்கண்ட முறையில் ஒன்பது நாட்கள் பல தரப்பட்ட நீவல் முறைகளில் புத்துணர்வு சிகிச்சை செய்வதன் மூலமாகச் செத்த பாம்பு போல் கிடந்த குண்டலினி சக்தியானது, பெரும் விஸ்வரூபமெடுத்து உடலெங்கும் வியாபிப்பத னால், ஏழு சக்கரங்களும் முறையே இயங்கத் தொடங்கி, அதன் காரணமாக உடலில் உள்ள 126 வர்மப் புள்ளிகள் என்று சொல்லக்கூடிய உயிர் நிலைகளும் தூண்டப்பட்டு, முழுமையான முறை யில் ஆரோக்கியம் மிகுந்த மனிதர்களாகிறார்கள்.

தமிழ் வர்மக்கலையின் இந்தப் புத்துணர்வு சிகிச்சையை ஆண்டுக்கு ஒரு முறை கடைப்பிடிப் பதன் மூலமாக, மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழ வழி ஏற்படும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

நமது சித்த புருசர்களின் அளப்பரிய கலை களில் தமிழ் வர்மக்கலை அன்றும், இன்றும் அதிசயமும், மர்மமும் நிறைந்த அற்புதக் கலை யாக உலக அளவில் பவனி வருவது பெரும் மகிழ்ச்சிக்குரியதாகும்! வர்ம ஆலோசனை பெற : 9363217576.

●



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கன்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
CG Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.7.2019

Regd.No.CB/016/2018-20
OM SAKTHI - AUGUST - 2019